


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:255 | 31-03-2026 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

31.03.2026 பங்குனி 17
செவ்வாய் கிழமை

சூரிய உதயம் 6.13

திதி:
இன்று காலை 7.46 வரை திரயோதசி பின்பு சதுர்த்தசி.

நட்சத்திரம்:
இன்று மாலை 3.57 வரை பூரம் பின்பு உத்திரம்.

யோகம் :
இன்று மாலை 4.12 வரை கண்டம் பின்பு விருத்தி.

கரணம்
இன்று காலை 7.46 வரை தைதுலம் பின்பு இரவு 7.41 வரை கரசை பின்பு வணிசை

அமிர்தாதி யோகம் :
இன்று மாலை 3.57 வரை சித்த யோகம் பின்பு அமிர்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று மாலை 3.57 வரை திருவோணம் பின்பு அவிட்டம்.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30

இராகு காலம்
பிற்பகல் 3.00 – 4.30.

எமகண்டம்
காலை 9.00 – 10.30.

குளிகை
பிற்பகல் 12.00 – 1.30.

இன்று மகாவீரர் ஜெயந்தி

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# நாம் புதிய கூட்டணி அல்ல; வெற்றிக் கூட்டணி: மு.க. ஸ்டாலின்

**சென்னை, மார்ச் 31:**
சட்டப்பேரவைத் தேர்தலில் நாம் புதிய கூட்டணி அல்ல என்றும் வெற்றி வாய்ப்பை உறுதி செய்யும் வெற்றிக் கூட்டணி எனவும் முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று (மார்ச் 30) தெரிவித்தார்.

கூட்டணிக் கட்சித் தலைவர்கள், நிர்வாகிகள் உடனான தேநீர் விருந்தில் கூட்டணிக் கட்சியினரிடையே உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் தொகுதிப் பங்கீடுகள் வெளியிடப்பட்டு, வேட்பாளர்களும் அறிவிக்கப்பட்டுள்ளனர். திமுக தங்களின் தேர்தல் அறிக்கையையும் வெளியிட்டுள்ளது.




இந்நிலையில், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று (மார்ச் 30) தேநீர் விருந்து நடைபெற்றது.

இதில், காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை, மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன், இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, துரை வைகோ, மனிதநேய மக்கள் கட்சியின் ஜவாஹிருல்லா, எஸ்டிபிஐ முபாரக், மஜகவின் தமிமுன் அன்சாரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தேநீர் விருந்தின் நிறைவாகப் பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலின், நம் கூட்டணியில் மேலும் சில கட்சிகள் புதிதாக சேர்ந்துள்ளன. நிச்சயம் வெற்றி பெறுவோம். நம் கூட்டணி புதிய கூட்டணி அல்ல, வெற்றிக் கூட்டணி. உடன் நின்று உறுதியாகப் பயணிக்கும் கூட்டணி கட்சித் தலைவர்களுக்கு நன்றி என முதல்வர் குறிப்பிட்டார்.

## வேட்புமனுத் தாக்கல்





கொளத்தூர் தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலினும், பெரம்பூர் தொகுதியில் தவெக தலைவர் விஜய்யும் நேற்று (மார்ச் 30) வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.



நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு காரைக்குடியில் தாக்கல் செய்தார்.

# "பணத்தை வாங்கிவிட்டு விசிலுக்கு வாக்களியுங்கள்..!" பெரம்பூர் தொகுதியில் விஜய் பிரச்சாரம்

**சென்னை, மார்ச் 31:**
சென்னை பெரம்பூர் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்த நிலையில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார்.

தமிழ்நாடே நமக்கு பிடித்தது தான் என்றாலும் நமது பெரம்பூர் தொகுதியில் இருந்து பிரச்சாரம் தொடங்கியுள்ளேன்.

பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் இருந்து பிரச்சாரத்தை தொடங்க வேண்டும் என்று முடிவுசெய்துவிட்டேன்.

நமது வீட்டு வாசலில் இருந்து அம்மாவிடம் இருந்து பிரச்சாரத்தை தொடங்குவதாக எண்ணி பெரம்பூரில் பிரச்சாரத்தை தொடங்கியுள்ளேன்.

பெண்கள் பாதுகாப்பு இல்லாத சட்டம்-ஒழுங்கு சரியில்லாத தமிழகத்திற்கு தீய கட்சி திமுக தான் காரணம்.

5 ஆண்டுகளாக ஆட்சியை நடத்தி மக்களை இந்த நிலைக்கு கொண்டு வந்ததற்கு தீயசக்தி திமுக தான் காரணம்.

நமது பெண் பிள்ளைகள் இரவில் பாதுகாப்பாக கழிப்பறைக்கு கூட செல்ல முடியாத நிலை உள்ளது.

தமிழ்நாட்டை இந்த நிலைக்கு கொண்டு வந்த தீயசக்தி திமுக ஆட்சியை தூக்கி எறிவோமா ?

5 வருடம் காவல்துறையை கையில் வைத்திருக்கும் ஸ்டாலின் சார் ஒரு அடிப்படை பாதுகாப்பையாவது கொடுத்திருப்பாரா?

திமுக கொடுக்கும் பணத்தை வாங்கிக்கொண்டு அவர்களது காதில் விசில் ஊதி அனுப்புங்கள்.திமுக கொடுக்கும் பணத்தை வாங்காமல் விடாதீர். வாங்கிக் கொண்டு விசில் சின்னத்திற்கு வாக்களியுங்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## இன்னொரு கரூர் சம்பவம் நடந்துவிடக் கூடாது



ஆதவ் அர்ஜுனா பேசியதாவது:
''வாக்களிப்பதைப் போன்று வாக்கு சேகரிக்கச் செல்வதும் ஜனநாயகக் கடமை. தவெக தலைவர் விஜய் பிரசாரத்துக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

இன்னொருகரூர் சம்பவம்நடந்துவிடக்கூடாது என தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் வைக்கிறோம். பிரசாரத்தின்போது இன்னொரு கரூர் சம்பவம் நடந்துவிடக் கூடாது.

காவல் துறையில் இன்றும் சிலர் முதல்வர் பேச்சைக் கேட்டு செயல்படுகின்றனர். கடந்த 8 மாதங்களாகவே எங்களுக்கு எதிராகத் திட்டமிட்டு முதல்வர் செயல்படுகிறார்.

கொளத்தூரில் விஜய் பிரசாரத்தைத் தடுக்க திட்டமிட்டுள்ளனர்.

இதனைத் தேர்தல் ஆணையம் கருத்தில் கொள்ள வேண்டும். இன்னும் 2 முறை கொளத்தூரில் விஜய் பிரசாரம் மேற்கொண்டால் மு.க. ஸ்டாலின் தோல்வி அடைவார்.

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பதே தவெகவின் கோரிக்கை. மக்கள் பாதுகாப்பு கருதியே பிரசாரத்தை வில்லிவாக்கத்தில் இன்று நிறுத்தினோம். நாளை தலைமை தேர்தல் அதிகாரியை சந்திக்கவுள்ளோம்'' எனக் குறிப்பிட்டார்.

## வாக்குப்பதிவு நேரம்: அரசாணை வெளியீடு

**சென்னை, மார்ச் 31:**
ஏப்ரல் 23ந் தேதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு செய்யலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் ஒரே கட்டமாக ஏப்ரல் 23ந் தேதி நடைபெறவுள்ளது. இன்று முதல் வேட்புமனுத் தாக்கல் தொடங்கியுள்ளது. ஏப்ரல் 6 ஆம் தேதி வேட்புமனுத் தாக்கல் செய்ய கடைசி நாளாகும்.

வேட்புமனு பரிசீலனை ஏப்ரல் 7 ஆம் தேதி நடைபெறவுள்ளது. வேட்புமனுவைத் திரும்பப் பெற ஏப்ரல் 9 கடைசி நாளாகும்.

இந்த நிலையில், வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 23 ஆம் தேதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப் பதிவு நடைபெறும் என்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே, வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 23 ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு, கேரளம் உள்பட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை மே 4 ஆம் தேதி நடைபெறுகிறது.

# தேர்தல் பரப்புரைக்காக தமிழ்நாடு வருகிறார் பிரதமர் மோடி

**சென்னை, மார்ச் 31:**
தமிழக சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற ஏப்ரல் 23-ந்தேதி நடக்கிறது. தற்போதைய நிலையில் 4 முனை போட்டி நிலவுகிறது. அனைத்து கட்சிகளும் கூட்டணி பேச்சுவார்த்தையை நிறைவு செய்து, போட்டியிடும் தொகுதிகளையும் முடிவு செய்து வேட்பு மனு தாக்கல் செய்ய தயார் நிலையில் உள்ளனர்.



தேர்தல் அதிகாரிகளும் வேட்பு மனுக்களை பெற தயார் நிலையில் இருப்பதாக தேர்தல் கமிஷன் அறிவித்து உள்ளது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் நேற்று (திங்கட்கிழமை) முதல் வேட்பு மனுக்கள் பெறப்படுகிறது. வருகிற 6-ந்தேதி வேட்பு மனு தாக்கலுக்கு கடைசி நாளாகும். அன்று மதியம் 3 மணி வரை வேட்பு மனுக்கள் பெறப்படுகிறது.

இதற்கிடையில், அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களது கட்சி வேட்பாளர்கள், கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்து வருகின்றனர். அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நாதக ஒருங்கிணைப்பாளர் சீமான் ஏற்கனவே பிரசாரத்தை தொடங்கிவிட்டனர். முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை தனது பிரசாரத்தை தொடங்குகிறார். விஜய் இன்று பிரசாரம் மேற்கொள்கிறார்.

இந்த நிலையில், சட்டசபை தேர்தலையொட்டி சென்னை மயிலாப்பூர் பாஜக வேட்பாளரை ஆதரித்து வரும் 4-ம் தேதி பிரதமர் மோடி பிரசாரம் செய்ய உள்ளார். மேலும் ரோடு ஷோ நடத்தி வாக்கு சேகரிக்க உள்ளார். அதனை தொடர்ந்து கன்னியாகுமரி மற்றும் கோவை பகுதிகளிலும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்தும் பிரதமர் மோடி விரைவில் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.

## ஏப். 6-ல் வேட்புமனு தாக்கல் செய்கிறார் இபிஎஸ்!

**சென்னை, மார்ச் 31:**
தமிழகசட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் இன்று (மார்ச் 30) முதல் நடைபெற்று வருகிறது.

அதிமுக பொதுச் செயலா எடப்பாடி கே.பழனிசாமி போட்டியிடும் எடப்பாடி தொகுதியில் போட்டியிடவுள்ளார். இதற்கான வேட்புமனு தாக்கல் ஏப்ரல் 6 ஆம் தேதி (திங்கள் கிழமை) செய்யவுள்ளார்.

வேட்புமனு தாக்கலின் முதல் நாளான இன்று கொளத்தூர் தொகுதியில் முதல்வர் மு.க. ஸ்டாலின், பெரம்பூர் தொகுதியில் தவெக தலைவர் விஜய் மனுத் தாக்கல் செய்தனர்.

நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் காரைக்குடி தொகுதியில் போட்டியிட மனுத் தாக்கல் செய்துள்ளார். இவர்கள் மூவருமே தங்கள் கட்சியின் முதல்வர் வேட்பாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர்கள் பட்டியல் வெளியீடு

**சென்னை, மார்ச் 31:**
4 ஆண் வேட்பாளர்களும் ஒரு பெண் வேட்பாளருக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. சொந்த சின்னத்தில் போட்டியிடவுள்ளனர்.

வேட்பாளர்கள் பட்டியல்
பழனி - என். பாண்டி, மாநில செயற்குழு உறுப்பினர்
கந்தர்வகோட்டை - எம். சின்னதுரை, மாநிலக்குழு உறுப்பினர்
பத்மநாதபுரம் - ஆர். செல்லசுவாமி, கன்னியாகுமரி மாவட்ட செயலாளர்
திருவொற்றியூர் - எல். சுந்தரராஜன், மாநிலக்குழு உறுப்பினர்
கீழ்வேளூர் - டி. லதா, நாகபட்டினம் மாவட்ட செயற்குழு உறுப்பினர்



ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களின் சொந்த சின்னத்தில் களமிறங்கவுள்ளனர்.

திமுக கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (CPIM) மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) ஆகிய இரு இடதுசாரி கட்சிகளுக்கும் தலா 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இன்று மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடவுள்ள 5 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.







## திருக்குறள் குறள்-575

கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம்
அஃதின்றேற்புண்ணென் றுணரப் படும்



ஒருவனுடைய கண்ணுக்கு அணிகலமாவது கண்ணோட்டம் என்னும் பண்பே, அஃது இல்லையானால் புண் என்று உணரப்படும்.

## சிந்திக்க ஒரு நொடி



வாழ்க்கையில்......
கவலைப்படுபவர்கள்
கரையேறுவதில்லை...
கரையேறுபவர்கள்
கவலையே
படுவதில்லை...

**உஷா முத்துராமன்**

## ஆண்டாள் திருக்கோலம் ஸ்ரீபெருமாள் புறப்பாடு



ஸ்ரீ வித்யா இராஜகோபால ஸ்வாமி திருக்கோயில், இராஜமன்னார்குடி. பங்குனி ப்ரும்மோத்ஸவ விடையாற்றி நான்காம் திருநாள் ஆண்டாள் திருக்கோலம் ஸ்ரீபெருமாள் புறப்பாடு.

## திருக்குறள் ஒப்பிவித்தல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவன்



நாகப்பட்டினம் மாவட்டம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அந்தணப்பேட்டை ஏழாம் வகுப்பு மாணவன் கோ அதிபன் மாவட்ட அளவில் நடைபெற்ற திருக்குறள் ஒப்பிவித்தல் போட்டியில் வெற்றி பெற்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் பாராட்டி பள்ளிக்குபெருமை சேர்த்துள்ளார் அவரை ஆசியர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் வாழ்த்தினார்கள்

## "எழுத்துச் சித்தர். முகில் தினகரன் " அவர்களுக்கு "இயற்றமிழ் வித்தகர் விருது"




கடந்த (29.3.26) ஞாயிறு காலை கோவை சுந்தராபுரத்தில் உள்ள செங்கப்ப கோனார் திருமண மண்டபத்தில் கோவை வெண்ணிலா மன்றம் சார்பில் நடைபெற்ற இலக்கியத் திருவிழா - 2026ல் "எழுத்துச் சித்தர். முகில் தினகரன் " அவர்களுக்கு "இயற்றமிழ் வித்தகர் விருது" தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் முன்னாள் இயக்குனர் முனைவர். ஆர். விஜயராகவன் அவர்கள் கையால் வழங்கப்பட்டது.

# மாமதுரைக் கவிஞர் பேரவையின் சிந்தனைக் கவியரங்கம்



**மதுரை, மார்ச் 31:**
மாமதுரைக் கவிஞர் பேரவை- சிந்தனைக் கவியரங்கம், மதுரை, வடக்கு மாசி வீதி, மணியம்மை மழலையர் &தொடக்கப் பள்ளியில் நடந்தது.

"என்றும் மகிழ்வோம் எந்தமிழ் சிந்தனையில் " எனும் தலைப்பில் கவியரங்கம் நடந்தது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது.

மன்றத்தின் செயலர் தமிழ்ச்செம்மல் கவிஞர் இரா .இரவி தலைமையில் கவியரங்கம் நடந்தது. ஆலோசகர் வீர ஆதிசிவத் தென்னவன் வரவேற்றார். பொருளாளர் கவிஞர் இரா. கல்யாணசுந்தரம்,துணைத் தலைவர் முனைவர் வரதராஜன் முன்னிலை வகித்தனர் .பன்னாட்டு தமிழுறவு மன்றம் தனசிங் மனோகரன் வாழ்த்துரை வழங்கினார். துணைச்செயலர் கு .கி . கங்காதரன் நன்றி கூறினார் .

கவிஞர் இரா .இரவி தலைமையில் கவிஞர்கள் ,இரா. கல்யாணசுந்தரம்,முனைவர் வரதராஜன் ,கு .கி . கங்காதரன், கு .பால் பேரின்பநாதன் , கி .கோ. குறளடியான் , அ.அழகையா, , பா .பழனி,மா, முனியாண்டி,பா. பொன்பாண்டி , ந .சுந்தரம் பாண்டி ,ச .லிங்கம்மாள், ச .கமலா சந்திரசேகர் ,அஞ்சூரியா க . ஜெயராமன்,முனைவர் வீரைமைதீன்( நெல்லை), வழக்கறிஞர் சந்தான கிருஷ்ணன்,சு..பாலகிருஷ்ணன், முனைவர் பா .ஸ்ரீ வித்யாபாரதி, சிறுமி ஸ்ரீஜா,போ .சிவசத்யா மா.பரமானந்தம் ஆகியோர் கவிதை பாடினார்கள்.

பேரவையின் சார்பில் சிறப்பாக கவிதை பாடிய கவிஞர்கள் ச .கமலா சந்திரசேகர், முனைவர் வீரைமைதீன்,வழக்கறிஞர் சந்தான கிருஷ்ணன்,சிறுமி ஸ்ரீஜா ஆகியோருக்கு தமிழறிஞர் அழகுராசன் வழங்கிய திருக்குறள் முனுசாமி எழுதிய திருக்குறள் உரை நூல்,முனைவர் வரதராசன் எழுதிய நூல் பரிசாக வழங்கி கவிமாமணி தென்னவன் நினைவு விருதும் வழங்கினார்கள் .

கவிதாயினி ச .லிங்கம்மாள் எழுதிய "தாயின் கவிதைகள் " கவிதை நூலை வெளியிட்டனர் . நூல் ஆசிரியருக்கு பொன்னாடைப் போர்த்தி கவிமாமணி தென்னவன் நினைவு விருதும் வழங்கினார்கள் .வருகை தந்த அனைவருக்கும் கவிதைநூலை நண்கொடையாக வழங்கினார் .

கவியரங்கம் நடத்துவதற்கு மாதாமாதம் மணியம்மை பள்ளியை இலவசமாகத் தந்து உதவும் புரட்சிப் பாவலர் மன்றத்தின் தலைவர் பி . வரதராசன் அவர்களுக்கு அனைவரும் நன்றி கூறினார்கள்.

படங்கள் புகைப்படக் கலைஞர் மதுரை உலா ,ரெ. கார்த்திகேயன் கை வண்ணம்.

# சின்னப்பாலத்தில் பிரிவு உபச்சார விழா



**ராமநாதபுரம், மார்ச் 31:**
பாம்பன் சின்னப்பாலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பயிலும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு பிரியாவிடை நிகழ்வு நடைபெற்றது.

பள்ளி தலைமையாசிரியை செல்லம்மாள் தலைமை வகித்தார்.நான்காம் வகுப்பு மாணவி நந்தினி வரவேற்றுப் பேசினார்.ஆசிரியர் ஜெ.ஜே. லியோன் வாழ்த்துரை வழங்கினார்.

ஐந்தாம் வகுப்பு மாணவர் களுக்கு நான்காம் வகுப்பு மாணவர்கள் நினைவு பரிசு வழங்கினர். பருவத்தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.தொடர்ந்து, கேக் வெட்டி, மாணவர்களுக்கு பகிரப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

நிறைவாக, ஐந்தாம் வகுப்பு மாணவி மரிய மிகாஸ்மி நன்றி கூறினார். நிகழ்விற்கான ஏற்பாடுகளை வகுப்பு ஆசிரியர் ஞானசௌந்தரி செய்து இருந்தார். நிகழ்வில் ஆசிரியர்கள் நிஷா, மிக்கேல் ராணி, சந்திரமதி, லாரன்ஸ் எமல்டா, பிரிஸ்கிலா, நான்சி கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## சந்திரசேகர் தீப ஆராதனை



அருள்மிகு வாலீசுவரர் திருக்கோயில் அறுபத்து மூவர் திருவிழாவை முன்னிட்டு சந்திரசேகர் தீப ஆராதனை.

## ராயபுரம் சட்டமன்ற வேட்பாளர் திரு அ. சுபெர் கான்



இந்தியா கூட்டணியின் ராயபுரம் சட்டமன்ற வேட்பாளர் திரு அ. சுபெர் கான் அவர்களை மாவட்ட தலைவர் திரு மதுரம்மா கனி பாரு அவர்கள் அறிமுக செய்தார்கள். உடன் ஆர்கேநகர் 1வது சர்க்கிள் நிர்வாகிகள் உடன் எம்மோகன் குமார்

## அதிமுக வேட்பாளர் முக்கூர் சுப்பிரமணியன்



திருவண்ணாமலை மாவட்டம் செய்யார் சட்டமன்றத் தொகுதிக்கு அதிமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கழக அமைப்புச் செயலாளர், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், மாண்புமிகு முக்கூர் சுப்பிரமணியன் அவர்களை அனைத்து உலக எம்ஜிஆர் மன்றம் மாநில துணை செயலாளர் வழக்கறிஞர் திரு.ஜாகீர் உசேன் B.S.C.,B.L அவர்கள் நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## தேசிய ஜனநாயக கூட்டணி அதிமுக திட்டக்குடி தொகுதி தேர்தல் அலுவலகம் திறப்பு



**கடலூர், மார்ச்.31:**
கடலூர் மாவட்டம் திட்டக்குடி சட்டசபை தொகுதியின் அதிமுக தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் தேர்தல் அலுவலகம் திட்டக்குடி அசனாம்பிகை அம்மன் கோவில் எதிரே தேர்தல் அலுவலகம் திறக்கப்பட்டது.

அதன்படி, அதிமுக கடலூர் மேற்கு மாவட்ட செயலாளரும், புவனகிரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆ. அருண்மொழிதேவன், நேற்று திட்டக்குடி தொகுதி தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்தார். இதில் வெற்றி வேட்பாளர் முருகுமாறன் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து, தொகுதி நிலவரங்கள் குறித்து தேர்தல் நடத்தும் அலுவலர் உதயகுமாரிடம் கேட்டறிந்தார். துணை தேர்தல் நடத்தும் அதிகாரி, அதிமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தார்.

## பங்குனி மாதம் பௌர்ணமி மலை கிரிவலம்





திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் பௌர்ணமி மலை கிரிவலம் செல்ல உகந்த நேரம் ஏப்ரல் 1-ஆம் தேதி காலை 07: 5 மணிக்கு தொடங்கி ஏப்ரல் 2-ஆம் தேதி காலை 07: 41 மணிக்கு பௌர்ணமி நிறைவடைகிறது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## ஆன்மீக துறவி மகாவீரர் ஜெயந்தி 2026



வர்தமானர் என்ற இயற்பெயருடன் பிறந்து, வளர்ந்தவர் மகாவீரர். இவர் தனது அரசு வாழ்வு, மனைவி, அரண்மனை சுக போகங்கள் ஆகியவற்றை துறந்து துறவி வாழ்க்கை மேற்கொண்டார். அன்பையும் அகிம்சையையும் போதித்த இந்தியாவின் தலைசிறந்த ஆன்மிக துறவிகளில் மகாவீரரும் ஒருவர்.

அரச குடும்பத்தில் பிறந்து, ஆன்மிக நாட்டத்தால், துறவு வாழ்க்கை மேற்கொண்ட வர் மகாவீரர். சமண சமயத்தை உலகிற்கு அறிமுகம் செய்த ஜைன மதத்துறவியான மகாவீரரின் போதனைகளும், தத்துவங்களும் உலகம் முழுவதிலும் உள்ள மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஏராளமானவர்கள் மகாவீரரின் சமண மதத்திற்கு மாறி, அவரின் போதனைகளை இன்றும் பின்பற்றி வருகின்றனர்.அன்பையும், மனித நேயத்தையும் அகிம்சையையும் போதிக்கும் உன்னதமான கோட்பாடுகளைக் கொண்டது மகாவீரரின் போதனைகள். அவர் ஜீனர் என்றும் அழைக்கப்படுகிறார். ஜீனர் என்றால் வெற்றி கொண்டவர் என்பது பொருள். அப்படிப்பட்ட மகாவீரர் அவதரித்த தினத்தை மகாவீர் ஜெயந்தி அல்லது மகாவீரர் ஜெயந்தி என ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றோம். 2026 ஆம் ஆண்டில் மகாவீரர் ஜெயந்தி இன்று மார்ச் 31ஆம் தேதி வருகிறது. இந்த நாளில் மகாவீரர் உலகிற்கு போதித்த போதனைகளில் சிலவற்றை இங்கே நாம் தெரிந்து கொள்ளவோம். நம்பிக்கை, நல்லறிவு, நற்செயல் ஆகியவற்றை கடைபிடித்தால் சித்தி நிலையை அடையலாம். எந்த உயிருக்கும் தீங்கு ஏற்படுத்தாமல் இருத்தல், உண்மையை மட்டுமே பேசுதல், திருடாமை, பாலுணர்வு கொள்ளாமை, செல்வங்கள் மீது பற்று கொள்ளா இருப்பது ஆகிய ஐந்தும் ஜைன மதத்தின் உறுதிமொழிகளாகும்.

**தொகுப்பு: பா. சீனிவாசன், வந்தவாசி.**

# செங்கரைப்பாளையத்தில் வேதாத்திரிய வேள்விதினம் அனுசரிப்பு



**ஈரோடு, மார்ச் 31:**
ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், குளூர் ஊராட்சியைச் சேர்ந்த செங்கரைப்பாளையம் மனவளக்கலை மன்ற அறிவுத்திருக்கோவிலில் வேதாத்திரிய வேள்வி தினம் அனுசரிக்கப்பட்டது.

30.03.2026 திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணி முதல் பகல் 1.30 மணி வரை சிறப்பு சிந்தனை சொற்பொழிவு நடைபெற்றது. ஆழியாறு உலக சமுதாய சேவா சங்கத்தின் விஷன் டைரக்டர் பேராசிரியர் திருமதி அருட்செல்வி அவர்களின் "குண்டலினி யோகமும் குடும்ப அமைதியும்" என்னும் தலைப்பில் மக்கள் வெகுவாக ரசித்து கேட்ட சிறப்பான சொற்பொழிவு நடைபெற்றது. விழாவுக்கு மனவளக்கலை மன்ற அறக்கட்டளை தலைவர் திரு V.பொன்னுசாமி அவர்கள் தலைமை தாங்கினார். திருப்பூர் மாவட்ட கூடுதல் நீதிபதி திரு D.பாலு அவர்கள் முன்னிலை வகுத்து வாழ்த்துரை வழங்கினார். விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் செயலாளர் S.கிருஷ்ணன் அவர்கள் வரவேற்றார். அறிவுத் திருக்கோவில் திருமதி E.பர்வதம் ஈஸ்வரன் அவர்கள் சிறப்பு விருந்தினருக்கு பொன்னாடை அணிவித்து மகிழ்ந்தார். முன்னாள் ஊராட்சி தலைவர் திரு G.செல்வராஜ், பொருளாளர் திரு C.மனோகரன், மனவளக்கலை திரு M.மணி ஆகியோர் நினைவுப் பரிசுகளை வழங்கினர். பேராசிரியர்கள் பாலமுருகன், பன்னீர்செல்வம், ராமசாமி, பூமலர் ஆகியோர் கூட்டத்தினரை ஒழுங்கு படுத்தினர். சுமார் 150க்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் என இருபால் அன்பர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். மனவளக்கலை தினசரி பயிலும் தர்மலிங்கம், பாலசுப்பிரமணியன், செந்தில்குமார், குப்புசாமி, தட்சிணாமூர்த்தி, ராஜேந்திரன் ஆகியோர் விழா ஏற்பாடுகளை கவனித்து வந்தனர். நன்றி உரைக்குப் பின் சரியாக 1.30 மணிக்கு அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டு விழா இனிதே நிறைவுற்றது. செங்கரைப்பாளையம் மனவளக்கலை மன்றம் மற்றும் அறிவுத்திருக்கோவிலுக்கு அடிக்கடி வாருங்கள். நன்றி! வணக்கம்! வாழ்க வளமுடன்



# 2026 தேர்தல் கொண்டாட்டம்

## தேர்தல் களப்பணியில்...

### 43 வேட்பாளர்களை அறிவித்தது 'புதிய தமிழகம்' - ஒட்டப்பிடாரத்தில் கிருஷ்ணசாமி போட்டி

ஒட்டப்பிடாரம் தொகுதியில் புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமியும், ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் நெல்லை தொகுதிகளில் அவரது மகன் ஷியாம் கிருஷ்ணசாமியும் போட்டியிடுகின்றனர். புதிய தமிழகம் கட்சியின் முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை அக்கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி வெளியிட்டுள்ளார். இந்தப் பட்டியலில் 43 வேட்பாளர்கள் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இதன்படி, ஒட்டப்பிடாரம் தொகுதியில் கிருஷ்ணசாமியும், ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் நெல்லை தொகுதிகளில் ஷியாம் கிருஷ்ணசாமியும் போட்டியிடுகின்றனர். மேலும், வாசுதேவ நல்லூரில் பால்ராஜ், கடைய நல்லூரில் கவி, நாங்குநேரியில் தமிழ்செல்வி, நிலக்கோட்டையில் பொ.சங்கர், பட்டுக்கோட்டையில் மா.குருமூர்த்தி ஆகியோர் போட்டியிடுகின்றனர். திருவெறும்பூரில் அ.பிச்சைமுத்து, ஆண்டிப்பட்டியில் மகா.இளையராஜா, முசிறியில் மு.சின்னையன், திருவாரூரில் மூ.தியாகராஜன், நன்னிலத்தில் மு.தமிழ்செல்வம், விராலிமலையில் அ.செல்வராஜ், சாத்தூரில் சு.வேல்முருகன் உள்ளிட்ட 43 வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அதிமுக கூட்டணியில் பேச்சுவார்த்தை நடத்திவந்த புதிய தமிழகம் கட்சி, தொகுதிகள் எண்ணிக்கை குறித்த இழுபறியால் தனித்துப் போட்டியிட முடிவு செய்து களமிறங்கியுள்ளது.

### சசிகலாவுக்கு நடிகர் கார்த்திக் ஆதரவு

புதிய கட்சி தொடங்கியிருக்கும் சசிகலாவை சந்தித்த நடிகர் கார்த்திக், சட்டப்பேரவைத் தேர்தலில் தனது ஆதரவை தெரிவித்தார். பாமக நிறுவனர் ராமதாஸ், 'அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம் என்ற புதிய கட்சியைத் தொடங்கியிருக்கும் சசிகலா ஆகியோர் கூட்டணி அமைத்து சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிட உள்ளனர். இந்நிலையில் போயஸ் கார்டன் இல்லத்தில் சசிகலாவை நடிகர் கார்த்திக் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

அனைத்திந்திய ஃபார்வார்டு பிளாக் கட்சியின் தமிழக தலைவராக இருந்த கார்த்திக், தற்போது மனித உரிமை காக்கும் கட்சி என்ற கட்சியை தொடங்கி நடத்தி வருகிறார். இந்நிலையில் சசிகலாவுடனான சந்திப்பின்போது, சட்டப்பேரவை தேர்தலில் சசிகலா - ராமதாஸ் கூட்டணிக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளார்.

### புதுவையில் தனித்து சென்ற பாமக பாஜக கூட்டணிக்கு திடீர் ஆதரவு

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் புதுவையில் என் .ஆர்.காங்கிரஸ், பாஜக, அதிமுக, பாமக கட்சிகள் இடம் பெற்றிருந்தன. ஆனால் பாமகவுக்கு ஒரு சீட் கூட ஒதுக்க வில்லை. அதிருப்தியடைந்த புதுவை பாமகவினர், கட்சி மேலிடத்தில் பேசி, 19 தொகுதிகளில் மனு தாக்கல் செய்ததோடு வாக்கு சேகரிப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பாமக தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கையில், "புதுவை சட்டப்பேரவைத் தேர்தலில், தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ஆதரவளிக்க பாமக முடிவு செய்துள்ளது. எனவே, தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெற செய்ய பணியாற்றும்படி புதுவை நிர்வாகிகளைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். அன்புமணியின் அறிவிப்பைத் தொடர்ந்து புதுவை பாமகவினரும், சொந்த கட்சி வேட்பாளர்களுக்கான பிரச்சாரத்தை கைவிட்டு விட்டு, தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சியினரின் வேட்பாளர்களுக்காக வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

### தோல்வி பயத்தால் இரண்டு தொகுதிகளில் விஜய் போட்டி: எஸ்.ரகுபதி கருத்து

தோல்வி பயம் காரணமாகவே விஜய் இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகிறார் என இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: எந்தத் தொகுதியில் வெற்றி பெறுவோம் என்று தெரியாமல்தான் 2 தொகுதிகளில் தவெக தலைவர் விஜய் போட்டியிடுகிறார். 2 தொகுதிகளிலும் அவருக்கு தோல்வி உறுதி. தோல்வி பயம் காரணமாகத்தான் இரண்டு தொகுதிகளில் விஜய் போட்டியிடுகிறார். அவரால் எந்தத் தொகுதியில் வெற்றி பெறுவோம் என்று கூட முடிவு செய்ய முடியவில்லை. அவரது கட்சியை அரசியல் கட்சியாகவே நாங்கள் கருதவில்லை. தேர்தலில் திமுகவுக்கும், அதிமுகவுக்கும் இடையேதான் போட்டி. தமிழகத்தில் பாஜகவுக்கு போதிய கட்டமைப்பு இல்லை என்ற உண்மையை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஒப்புக்கொண்டுள்ளார். டெல்லியில் அளித்த ஒரு பேட்டியில் இதை அவர் கூறியுள்ளார். புதுக்கோட்டை மாவட்டத்தில் 3 இடங்களில் பாஜக போட்டியிடுவதால், காவிக்கோட்டையாக புதுக்கோட்டை மாறாது. இது, உதயசூரியனின் கோட்டையாகவே இருக்கும். 2021-ல் வெளியிட்ட வேட்பாளர் பட்டியலின் நகலைத்தான் அதிமுக இப்போதும் வெளியிட்டுள்ளது. திமுகவில் 60 புதுமுகங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 175 தொகுதிகளில் உதயசூரியன் போட்டியிடுகிறது. எங்கள் இலக்கு 200. ஆனால், 4 முனைப்போட்டி நிலவுவதால் இலக்கைத் தாண்டி வெற்றி பெறுவோம். ஸ்டாலின் மீண்டும் முதல்வராவார். இவ்வாறு அவர் கூறினார்.

## "கிழிந்த துணியை தைத்தது போல திமுக கூட்டணி ஒட்டு போட்ட கூட்டணி" - விஜய் கடும் தாக்கு

கிழிந்துபோன துணியை தைத்து வைத்தது போல திமுக கூட்டணி ஒரு ஒட்டு போட்ட கூட்டணி என்று தவெக தலைவர் விஜய் சாடியுள்ளார்.

தவெக சார்பில் போட்டியிடும் 234 தொகுதிகளின் வேட்பாளர்களை கட்சியின் தலைவர் விஜய் நேற்று சென்னையில் அறிமுகப்படுத்தினார். அப்போது விஜய் பேசியதாவது: இது வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டம் அல்ல, மக்களுக்கான காப்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டம். நமது வேட்பாளர்கள் சாதாரண பின்புலத்தில் இருந்த வந்தவர்கள் என சொல்லுவார்கள்.




ஒரு எம்எல்ஏ எப்படி இருக்க வேண்டும் என்றால், அனுபவத்தை வைத்து கொள்ளையடிக்காதவராக, சட்டவிரோத மணல் குவாரி வைத்திருக்காதவராக, கேள்வி கேட்கும் பத்திரிகையாளர்கள் தாக்காதவராக இருக்க வேண்டும். எனவே, மக்களுடன் நிற்கும் வேட்பாளர்களை நான் தேர்ந்தெடுத்து உங்கள் முன் அறிமுகப்படுத்துகிறேன். அவர்களை எம்எல்ஏ ஆக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. இந்த தேர்தல் இருமுனைப் போட்டி மட்டும்தான்.

மக்கள் கூட்டணியான நமக்கும், ஸ்டாலின் கூட்டணிக்கும் இடையேதான் போட்டி. உடைந்த கண்ணாடியை ஒட்டவைத்தது போல, கிழிந்த துணியை தைத்து வைத்தது போல திமுக கூட்டணி ஒரு ஒட்டு போட்ட கூட்டணி. எனவே உங்கள் வாக்குகளை சிந்தாமல் சிதறாமல் விசில் சின்னத்தில் வாக்களிப்பீர்.

இது பாமரர்களுக்கும், ஒரு அதிகார வர்க்கத்துக்கு சேவகம் செய்யும் அடிமைகளுக்கும் நடக்கும் தேர்தல். இது விஜய்க்கும், ஸ்டாலினுக்கும் இடையே நடக்கும் தேர்தல். இந்த தேர்தல் மன்னராட்சியில் இருந்து மக்களாட்சியை மீட்பதற்கான தேர்தல். தமிழகத்தின் எதிர்காலத்துக்காக எங்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள்.

வாக்குறுதிகள் அறிவிப்பு இளைஞர்களுக்காக தேர்தல் வாக்குறுதிகளை அறிவிக்கிறேன். போதைப்பொருளை தடுக்க கடும் சட்டங்கள் கொண்டு வரப்படும். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் போதைப்பொருள் எதிர்ப்பு மன்றங்கள் அமைக்கப்படும். 12 ஆம் வகுப்புக்கு பிறகு பி.ஹெச்.டி வரை பிணையம் இல்லாமல் 20 லட்ச ரூபாய் வரை கல்விக் கடன் வழங்கப்படும் என்றார்.

## அதிமுக கூட்டணியில் கடுகளவு கூட பிரச்சினை இல்லை: பழனிசாமி உறுதி

தென்மாவட்டங்களில் தேர்தல் பிரச்சாரம் செய்வதற்காக அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி நேற்று விமானம் மூலம் தூத்துக்குடி வந்தார். அவருக்கு விமான நிலையத்தில் அதிமுகவினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பழனிசாமி அளித்த பேட்டியில் கூறியதாவது:

கடந்த 2023 டிசம்பரில் தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்கள் கனமழையால் பாதிக்கப்பட்டன. நான்கு மாவட்டங்களுக்கும் நான் நேரில் சென்று மக்களை சந்தித்து நிவாரண உதவிகள் வழங்கினேன். ஆனால் முதல்வர் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்காமல் டெல்லியில் நடந்த இண்டியா கூட்டணி கூட்டத்தில் கலந்து கொண்டார். ஆறுதல் கூட சொல்லவில்லை. அதுமட்டுமல்ல. தூத்துக்குடி மாவட்டத்தின் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் 5 நாட்கள் கழித்துதான் மக்களை சந்தித்தார்.

அதிமுக ஆட்சியின் போது, ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் மூலம் தூத்துக்குடியில் உள்ள பக்கிள் ஓடையை தூர்வாரி சரி செய்ய 80 சதவீதம் பணிகள் நிறைவேற்றப்பட்டன. திமுக ஆட்சி வந்த பிறகு, அந்த 20 சதவீத பணிகள் நிறைவேற்றப்பட்டு இருந்தால், தூத்துக்குடி நகரின் மையப்பகுதியில் செல்லும் ஓடை வழியாக வெள்ளம் வடிந்திருக்கும்.

விஜய் வேட்பாளர் அறிவிக்கும்போது இருமுனை போட்டி தான் என்று கூறி இருக்கிறார். புதிதாகத்தானே வந்திருக்கிறார். தேர்தல் முடிந்தால் தான் அவரது விவரம் தெரியும். அதிமுக கூட்டணியில் எந்த அதிருப்தியும் இல்லை. திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மனவருத்தத்தில் உள்ளன.

அப்படிப்பட்ட நிலைமை தான் அந்த கூட்டணியில் உள்ளது. அதிமுகவை பொறுத்தவரை எங்களது கூட்டணியில் எந்தவித சிறு கடுகளவு கூட பிரச்சினை இல்லை என்றார்.

## முதல்வர் - முன்னாள் முதல்வர் மோதும் தட்டாஞ்சாவடி

புதுச்சேரியில் 30 தொகுதிகள் இருந்தாலும் இம்முறை பலரும் முதலில் உற்று நோக்குவது தட்டாஞ்சாவடி தொகுதியைத்தான். 'முதல்வர் தொகுதி' என்ற அந்தஸ்து நெடுங் காலம் இத்தொகுதிக்கு உண்டு. அதேநேரத்தில் புதுச்சேரியிலேயே எம்எல்ஏ அலுவலகம் இல்லாத ஒரு சில தொகுதிகளில் இதுவும் ஒன்று. கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் வென்ற பிறகு ரங்கசாமி இந்த தொகுதிக்கு வந்தது என்னவோ மிகக்குறைவு தான். அதே நேரத்தில் தட்டாஞ்சாவடிக்கும் ரங்கசாமிக்கும் நீண்டகால பந்தம் உண்டு.

கடந்த 1990-ல் தட்டாஞ்சாவடியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட ரங்கசாமி தோல்வியடைந்தார். அதன்பின்னர் தனது ஆஸ்தான குரு அப்பா பைத்திய சுவாமியிடம் ஆசி பெற்றார். 'தேர்தலில் வெற்றி பெறுவாய்' என்று அவர் சொல்ல, அடுத்த ஓராண்டில் தேர்தல் வந்தது. அதையடுத்து தட்டாஞ்சாவடியில் 1991, 1996, 2001, 2006 தேர்தல்களில் ரங்கசாமி தொடர்ச்சியாக வென்றார். முதல்வராகவும் ஆனார்.

காங்கிரஸோடு ஏற்பட்ட பிணக்கால், 2011-ல் என்.ஆர்.காங்கிரஸ் என்ற தனிக்கட்சியைத் தொடங்கினார். அதே 2011-ம் ஆண்டு கதிர்காமம், இந்திரா நகர் ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிட்டு வென்றார். பின்னர் இந்திரா நகர் தொகுதியை துறந்தார். 2016-ல் இந்திராநகரில் மட்டும் போட்டியிட்டு வென்றார். அப்போது அவரால் முதல்வராக முடியவில்லை. "இரண்டு தொகுதிகளில் போட்டியிடும் போதுதான் நீங்கள் முதல்வர் ஆகிறீர்கள்" என்று யாரோ சொல்ல, கடந்த 2021-ல் 2 தொகுதிகளில் போட்டியிட்டார். ஏனாமில் தோற்றாலும், தட்டாஞ்சாவடியில் வென்றார்.

அதே நம்பிக்கையில் இந்த முறை மீண்டும் தட்டாஞ்சாவடியில் போட்டியிடுகிறார். கூடவே மங்கலத்திலும் போட்டியிடுகிறார். இரண்டு தொகுதி சென்டிமென்ட் ஒரு புறம்; தனது தட்டாஞ்சாவடி தொகுதி ராசி மறுபுறம் என திட்டமிட்டு களமிறங்கி இருக்கிறார் ரங்கசாமி. இதுவரை புதுச்சேரியிலேயே அதிக ஆண்டுகள் முதல்வராக இருந்த பெருமையும் இவருக்குண்டு.

இந்தத் தேர்தலில், புதுச்சேரிக்கான தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவராக இருக்கும் ரங்கசாமி தலைமையில் என்.ஆர்.காங்கிரஸ், பாஜக, அதிமுக, லட்சிய ஜனநாயகக் கட்சிகள் இணைந்து போட்டியிடுகின்றன. இந்தச் சூழலில் தட்டாஞ்சாவடியில் ரங்கசாமியை எதிர்த்து முன்னாள் முதல்வரும் தற்போதைய மக்களவை உறுப்பினருமான வைத்திலிங்கம் போட்டியிடுகிறார். இவர் புதுச்சேரிக்கான காங்கிரஸ் மாநிலத் தலைவராகவும் உள்ளார்.

இந்நாள் முதல்வரும் முன்னாள் முதல்வரும் ஒரே தொகுதியில் மோதுவது புதுச்சேரி அரசியலில் முக்கியத்துவமாக பார்க்கப்படுகிறது. காங்கிரஸ் தரப்பில் களம் காணும் வைத்திலிங்கமும் புதுச்சேரியில் அனுபவம்மிக்க அரசியல்வாதி. நெட்டப்பாக்கம் தொகுதியில் கடந்த 1980-ல் முதன் முதலில் போட்டியிட்டு தோற்றார்

## கோவை வந்த பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு: பட்டியலில் பெயர் இல்லாததால் அண்ணாமலை பங்கேற்கவில்லை

கேரள மாநிலம் பாலக்காட்டில் நடைபெறும் பிரச்சாரத்தில் கலந்து கொள்வதற்காக, நேற்று கோவை விமான நிலையத்துக்கு வந்த பிரதமர் மோடிக்கு பாஜகவினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வரவேற்பாளர் பட்டியலில் பெயர் இல்லாததால் பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலையால் பங்கேற்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. கேரளா மாநிலத்தில் வரும் 9-ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் நெருங்குவதைத் தொடர்ந்து அம்மாநிலத்தில் பாஜக தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், கேரளாவில் போட்டியிடும் என்டிஏ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி நேற்று பாலக்காட்டில் பிரச்சாரம் செய்தார்.

முன்னதாக இந்த பிரச்சார நிகழ்வில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி புதுடெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் புறப்பட்டு நேற்று மதியம் 2 மணிக்கு கோவை பீளமேட்டில் உள்ள சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தார்.



அங்கிருந்து தனி ஹெலிகாப்டர் மூலம் பாலக்காடு புறப்பட்டுச் சென்று பிரச்சாரத்தில் கலந்து கொண்டார். பிரதமர் வருகையையொட்டி கோவை விமான நிலையத்தில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

கோவை விமான நிலையத்துக்கு வந்த பிரதமர் மோடியை, பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய இணையமைச்சர் எல்.முருகன், பாஜக தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன், அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, அதிமுக புறநகர் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் பி.ஆர்.ஜி.அருண்குமார், அமமுக நிர்வாகியும், முன்னாள் அமைச்சருமான சண்முகவேலு, ஐஜேக தலைவர் பாரிவேந்தர், தமாகா நிர்வாகி ராஜேஸ்வரன் மற்றும் பாஜக நிர்வாகிகள் கனகசபாபதி, ஏ.பி.முருகானந்தம், எஸ்.ஆர்.சேகர், நந்தகுமார், ரமேஷ்குமார், சந்திரசேகர், கருமாரிமுத்து, சதீஷ்குமார் வரவேற்றனர்.

இந்நிலையில் கோவை வந்த பிரதமரை வரவேற்கும் நபர்களின் பெயர் பட்டியல் பாஜகவில் இருந்து வழங்கியதன் அடிப்படையில் காவல்துறையினர் மூலம் சரிபார்க்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது. இதன்படி பட்டியலில் பெயர் இருந்தவர்கள் மட்டுமே விமான நிலையத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த பட்டியலில் பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை பெயர் இல்லை என்பது தெரியவந்துள்ளது. இதனால் அவரால் பிரதமர் வரவேற்பு நிகழ்வில் பங்கேற்க முடியாத சூழல் ஏற்பட்டது.

அதேநேரம் நேற்று அவர் கோவையிலும் இல்லை என்பதாலும் அவர் இந்நிகழ்வில் பங்கேற்க முடியாமல் போனதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அதிமுகவில் இருந்து வந்தவர்களுக்கே திமுகவில் அதிக சீட் - 19 பேருக்கு வாய்ப்பு!

அதிமுகவில் இருந்து தாவியவர்களுக்கு திமுகவில் அதிக முக்கியத்துவம் கொடுத்து வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தமிழகத்தில் இரு பெரும் மாநில கட்சிகளாக திமுக, அதிமுக உள்ளன. அந்த வகையில், சில கருத்துவேறுபாடு காரணமாக அதிமுகவில் இருந்து விலகியவர்களும், நீக்கப்பட்ட சிலரும் திமுகவில் இணைந்துள்ளனர். ஏற்கெனவே திமுகவில் உள்ளவர்களை பின்னுக்கு தள்ளி, அதிமுகவினருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாக திமுகவுக்குள் குற்றச்சாட்டு உள்ளது.

இதனை நிரூபிக்கும் வகையில் கடந்தமுறை திமுக அமைச்சரவையில் செந்தில்பாலாஜி, முத்துச்சாமி, ரகுபதி, எ.வ.வேலு போன்றவர்களுக்கு முக்கிய துறைகள் ஒதுக்கப்பட்டு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

2026 சட்டப்பேரவை தேர்தலிலும் அதிமுகவில் இருந்து திமுகவுக்குதாவியவர்களுக்கே அதிக சீட்டுகள் ஒதுக்கீடு செய்திருப்பது தெரிகிறது. அக்கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சிக்கு



ஒதுக்கிய (28) எண்ணிக்கைக்கு அடுத்த நிலையில், அதிமுகவில் இருந்து சமீபத்தில் திமுகவுக்கு சென்ற ஓபிஎஸ், வைத்தியலிங்கம், மனோஜ் பாண்டியன் உள்ளிட்ட 19 பேருக்கு தேர்தலில் சீட் வழங்கி அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, தேனி மாவட்டம் போடி தொகுதி - ஓ.பன்னீர்செல்வம், ஒரத்தநாடு - வைத்திலிங்கம், ஆலங்குளம் - மனோஜ் பாண்டியன், விளாத்திக்குளம் - மார்க்கண்டேயன், சென்னை துறைமுகம் - சேகர்பாபு, ஈரோடு மேற்கு - முத்துசாமி, நாகர்கோவில் - ஆஸ்டின், திருமங்கலம் - மணிமாறன் (சேடப்பட்டி முத்தையா மகன்), முதுகுளத்தூர் - ராஜகண்ணப்பன், அருப்புக்கோட்டை -சாத்தூர் ராமச்சந்திரன், திருவண்ணாமலை - எ வ வேலு, கோவை தெற்கு - செந்தில்பாலாஜி,

திருச்செந்தூர் - அனிதா ராதாகிருஷ்ணன், திருமயம் - ரகுபதி, பெருந்துறை - தோப்பு என்.டி. வெங்கடாசலம், விழுப்புரம் - லட்சுமணன், பாப்பிரெட்டிப்பட்டி - பழனியப்பன், ஆம்பூர் - வில்வநாதன், ஒசூர் - சத்யா ஆகியோருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வடபழனி முருகன் கோவிலில் லட்சார்ச்சனை தொடங்கியது.. ஒரு நபருக்கு ரூ.250 கட்டணம்

**சென்னை, மார்ச் 30:**

சென்னை வடபழனி முருகன் கோவிலில் பங்குனி உத்திரம் லட்சார்ச்சனை, தெப்பத்திருவிழா நேற்று சிறப்பு பூஜைகளுடன் தொடங்கியது. ஏப்ரல் 4-ந்தேதி வரை திருவிழா நடக்கிறது. லட்சார்ச்சனையும், யாகசாலை பூஜைகளும் நேற்று தொடங்கியது. திரளான பக்தர்கள் பூஜைகளில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். (செவ்வாய்க்கிழமை) மாலையுடன் லட்சார்ச்சனை நிறைவடைகிறது.

ஏப்ரல் 1-ந்தேதி பங்குனி உத்திரத்தன்று உச்சிக்காலத்துடன் தீர்த்தவாரி மற்றும் யாகசாலை பூஜைகள் நிறைவு செய்யப்பட்டு, கலசாபிஷேகத்துடன் பூஜைகள் நிறைவடைகின்றன. அன்று இரவு 7 மணிக்கு சிறப்பு அலங்காரத்துடன் சாமி புறப்பாடு நடக்கிறது.

லட்சார்ச்சனை நாட்களில் முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் மற்றும் வேதபாராயணம் செய்யப்படுகிறது.

ஏப்ரல் 2-ந்தேதியிலிருந்து 4-ந்தேதி வரை இரவு 7 மணிக்கு தெப்பக்குளத்தில் தெப்ப திருவிழா நடக்கிறது. சிறப்பு அலங்காரத்துடன் வேதபாராயணம், திருமுறை மற்றும் நாதஸ்வர கச்சேரியுடன் நடக்கிறது. லட்சார்ச்சனையில் பங்கேற்க நபர் ஒன்றுக்கு ரூ.250 கட்டணச்சீட்டு வழங்குமிடத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம் என்று அறநிலையத்துறை அதிகாரிகள் கூறி உள்ளனர்.

## களக்காடு வரதராஜ பெருமாள் கோவிலில் இரட்டை கருட சேவை

களக்காடு வரதராஜ பெருமாள் கோவிலில் பங்குனி பிரம்மோற்சவ திருவிழா நடைபெற்று வருகிறது. விழாவின் 5ம் நாளான நேற்று முன்தினம் இரட்டை கருட சேவை விழா நடந்தது. இதனை முன்னிட்டு விஷேச அலங்கார தீபாராதனைகளுக்கு பின்னர் வரதராஜ பெருமாளும், வெங்கடாஜலபதி சுவாமியும் தனித்தனி கருட வாகனத்தில் எழுந்தருளி ரத வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

இந்நிழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவின் 7ம் நாளான இன்று 30ம் தேதி மாலை திருக்கல்யாண வைபவம் நடக்கிறது.

8ம் நாளான நாளை (31ம் தேதி) நாடார் சமுதாய மண்டகப்படி நடக்கிறது. இதனையொட்டி மதியம் அன்னதானம் வழங்கப்படுகிறது. அன்னதானத்தை நெல்லை கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் கிரகாம்பெல் தொடங்கி வைக்கிறார். இரவில் பெருமாள் குதிரை வாகனத்தில் பவனி வருகிறார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை நாடார் சமுதாய மண்டகப்படி குழுவினர் செய்து வருகின்றனர்.

10ம் நாளான ஏப்ரல் 2ம் தேதி தேரோட்டம் நடக்கிறது. அன்று மாலை 5 மணிக்கு திருத்தேர் வடம் பிடித்து இழுக்கப்படுகிறது. ஏற்பாடுகளை கோயில் ஊழியர்கள், மண்டகப்படிதாரர்கள் செய்து வருகின்றனர்.

## விடுமுறை தினம்.. திருவண்ணாமலையில் 4 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்த பக்தர்கள்

**திருவண்ணாமலை, மார்ச் 31:**

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் தினமும் உள்ளூர் மட்டுமின்றி வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்கின்றனர். இதில் ஞாயிற்றுக்கிழமை போன்ற விடுமுறை நாட்கள் மற்றும் விசேஷ நாட்களில் பக்தர்களின் வருகை மேலும் அதிகரிக்கும்.

அவ்வகையில் இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் அருணாசலேஸ்வரர் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில்



பக்தர்கள் ராஜகோபுரம் வழியாகவும், அம்மணி அம்மன் கோபுரம் அருகில் அமைக்கப்பட்டு உள்ள காத்திருப்பு கூடத்தின் வழியாகவும் தரிசனத்திற்கு உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். ராஜகோபுரத்தின் வழியாக தரிசனத்திற்கு சென்ற பக்தர்களின் வரிசையானது வட ஒத்தவாடை தெருவில் நீண்டு காணப்பட்டது. மேலும் அம்மணி அம்மன் கோபுரம் நுழைவு வாயிலுக்கு அருகில் உள்ள காத்திருப்பு கூடத்தில் பக்தர்கள் காத்திருந்து வரிசையில் சென்று சாமி தரிசனம் செய்தனர்.

கோவிலில் பொது தரிசன வழியில் சென்ற பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய சுமார் 4 மணி நேரம் ஆனதாக தெரிவித்தனர்.

நேற்று பகலில் வெயிலின் அளவு அதிகமாகவே காணப்பட்டது. கடுமையான வெயிலையும் பொருட்படுத்தாமல் வரிசையில் நின்ற பக்தர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் நீர், மோர் வழங்கப்பட்டது.

நேற்று இரவு முதல் இன்று அதிகாலை வரையில் ஏராளமான பக்தர்கள் கிரிவலம் சென்றனர். இன்று பகலில் வெயிலின் தாக்கத்தினால் கிரிவலம் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டது. பின்னர் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

இதனால் கிரிவலப்பாதையில் உள்ள அஷ்ட லிங்க கோவில்கள் மற்றும் இடுக்கு பிள்ளையார் கோவிலிலும் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது.

## ராணிப்பேட்டை: 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த கங்காதர ஈஸ்வரர் கோவிலில் தேரோட்டம் கோலாகலம்

**ராணிப்பேட்டை, மார்ச் 31:**

தேரோட்டத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம்பிடித்து இழுத்தனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அருகே தோப்புக்கனா பகுதியில் உள்ள 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த கங்காதர ஈஸ்வரர் திருக்கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் பங்குனி பிரம்மோற்சவத்தை முன்னிட்டு இன்று தேரோட்டம் கோலாகலமாக நடைபெற்றது.

முன்னதாக திருக்கோவில் மூலவர் மற்றும் அன்னபூரணி அம்மனுக்கு சிறப்பு



அபிஷேகங்கள் நடைபெற்றன. வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட தேரை திரளான பக்தர்கள் வடம் பிடித்து இழுத்து சாமி தரிசனம் செய்தனர்.


## விடுமுறை தினம்: திருச்செந்தூரில் குவிந்த பக்தர்கள்

**திருச்செந்தூர், மார்ச் 31:**

அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஞாயிறு விடுமுறை நாளான இன்று பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். பொதுவாக விடுமுறை நாட்கள் மட்டுமல்லாமல் விழா நாட்களிலும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பாத யாத்திரையாகவும், கார்களிலும் வந்து கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்து செல்வது வழக்கம்.

அந்த வகையில் ஞாயிறு விடுமுறை தினமான இன்று கோவில் நடை அதிகாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. 5.30 மணிக்கு விஸ்வரூபம், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் நடந்தது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில்



இருந்து கோவிலுக்கு வந்த ஏராளமான பக்தர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை கோவில் நிர்வாகத்தினர் செய்து வருகின்றனர். போலீசாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும்
முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## நலம் தரும் மருத்துவம்

### கோடை வெயில் உங்களை ஒன்றும் செய்யாது!



1. மண்பானையை சுற்றி ஈரத்துணியை நனைத்து பிழிந்து கட்டி விட, தண்ணீர் ஜில்லென்று இருக்கும்.

2. கற்கண்டு, தூய்மையான சந்தனம், 1டீஸ்பூன் இவற்றை வெற்றிலையோடு சாப்பிட வெயிலால் ஏற்படும் வயிற்று வலி,, சன்ஸ்ட்ரோக் உபாதைகளை வரவிடாமல் தடுக்கும்.

3. மருதாணி இலைகளை அரைத்து கை, பாதங்களில் வைத்து கொண்டு பின் கழுவி விட உடல் குளிர்ச்சியாக இருக்கும்.

4. படுக்கும் முன் உள்ளங்காலில் விளக்கெண்ணை தொட்டு மசாஜ் செய்து விட்டு படுக்க உடல்சூடு குறையும்.

5. சோப்பிற்கு பதில் நலுங்கு மாவு, பாசிப்பயறு மாவு உபயோகிக்க சரும நோய்கள் வராமல் இருக்கும்.

6. பவுடர், வியர்க்குரு பவுடர் போடாமல் மாய்ச்சுரைசர், லோஷன் உபயோகிக்க உடலுக்கு புத்துணர்ச்சி கிடைப்பதோடு குளிர்ச்சியையும் தரும்.

7. வடிகஞ்சி, பழைய சோறு மோருடன் சேர்த்து அருந்த உடல் உஷ்ணம் ஏற்படாது. வெப்ப நோய்கள் வராது.

8. பல காய்கறி கூட்டு, கீரை கடையல் போன்றவை வயிற்றுக்கு இதமளிக்கும்.


9. இந்த கோடையில் அதிக காரம், மசாலா இல்லாமல் சாப்பிட வேண்டும்.

10. தர்பூசணி சாப்பிட இந்த சீசனில் உகந்தது என்றாலும் அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

11. வெள்ளரியை அப்படியே சாப்பிடுவது நல்லது. குழந்தைகளுக்கு , ரய்த்தாவாக கொடுக்க உடல் குளிர்ச்சி அடைவதோடு மலச்சிக்கல் பிரச்சினை வராது.

## ChatGPT பயன்படுத்துறீங்களா? அப்போ இதை கண்டிப்பாக தெரிந்து கொள்ளுங்கள்...

தற்போதைய காலகட்டத்தில், நாம் எதற்கெடுத்தாலும் CHATGPT-ஐப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டோம். சாதாரண விஷயத்திற்கான பதிலைத் தெரிந்து கொள்ளக்கூட CHATGPT-ஐத் திறந்துவிடுகிறோம். இந்த AI நம் வாழ்வில் பிரிக்க முடியாத ஓர் அங்கமாக மாறிக்கொண்டு வருகிறது. அதிலும் 'GEN Z' தலைமுறையினர், தங்கள் 50 சதவீத வேலைகளுக்கு CHATGPT-ஐயே நம்பியிருக்கிறார்கள். தற்போது உலகம் முழுவதும் 24 மணி நேரத்திற்குள் 2.4 பில்லியன் 'PROMPTS' CHATGPT-யில் கேட்கப்படுகின்றன.




மக்கள் CHATGPT-ஐ தெரபி, டேட்டிங், ஃபேஷன் போன்றவற்றைத் தெரிந்துகொள்ளப் பயன்படுத்துகிறார்கள். சிலர், "நான் அழகாக இருக்கிறேனா?" என்பது போன்ற உரையாடல்களுக்கும் இதைப் பயன்படுத்துகிறார்கள். இது போன்ற AI-யால் நமக்கு அதிக பலன் கிடைத்தாலும், இதனால் சில பாதிப்புகளும் இருக்கின்றன. நாம் CHATGPT-யிடம் தப்பித்தவறிக்கூடச் சொல்லக்கூடாத 5 விஷயங்களைப் (AI SHOCKING TRUTH) பற்றி இந்தப் பதிவில் காண்போம்:

1. CHATGPT-யிடம் உங்களைப் பற்றிய சென்சிட்டிவான விஷயங்களைச் சொல்லாதீர்கள். உங்களுடைய கடவுச்சொல், வங்கி விவரங்கள், அலுவலக ஆவணங்கள் போன்றவற்றை அதில் பதிவிடுவது சிக்கலை ஏற்படுத்தும். இதுபோன்ற முக்கியமான விஷயங்களை ரகசியமாக வைத்திருப்பதே நல்லது.

2. உங்களுடைய மருத்துவ வரலாறு மற்றும் தெரபி போன்ற தனிப்பட்ட உடல்நல விஷயங்களைச் சொல்லாதீர்கள். அதைப் பற்றிய எந்த அறிவுரைகளையும் நம்பி முயற்சித்துப் பார்க்க வேண்டாம். CHATGPT கொடுக்கும் பதில்கள் சில நேரங்களில் தவறாகக்கூட இருக்கலாம்; அதை முழுமையாக நம்புவது ஆபத்தில் முடியும். ஆரோக்கியம் சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தகுந்த மருத்துவரை அணுகுவதே சிறந்தது.

3. எப்படி ஹேக் செய்வது, எப்படி வெடிகுண்டு தயாரிப்பது போன்ற சட்டவிரோதமான (ILLEGAL) கேள்விகளை CHATGPT-யிடம் கேட்பதைத் தவிர்க்க வேண்டும். நீங்கள் ஆர்வத்தினால் இது போன்ற கேள்விகளைக் கேட்டாலும், AI நிறுவனங்கள் இத்தகைய தேடல்களைக் கண்காணித்துக்கொண்டிருக்கும். இதனால் நீங்கள் தேவையற்ற சட்டப் பிரச்சினைகளில் சிக்கிக்கொள்ள வாய்ப்புள்ளது.

4. AI சொல்வது அனைத்தும் முழுமையான உண்மையாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அதனிடம் 'CONSPIRACY THEORIES' பற்றி கேட்கும்போது அது தவறான அல்லது ஆதாரமற்ற பதில்களை வழங்கலாம். எனவே, எதையும் கண்மூடித்தனமாக நம்புவதைத் தவிர்ப்பது நல்லது.




5. நம் வாழ்க்கையில் நாம் எடுக்க வேண்டிய முக்கியமான முடிவுகளை AI-யிடம் கேட்காதீர்கள். "நான் வேலையை விட்டுவிடவா?", "நான் பிரேக்கப் செய்துகொள்ளலாமா?" போன்ற கேள்விகளுக்கு AI பதில் அளித்தாலும், அதற்கு உங்களுடைய வாழ்க்கை முறை, அனுபவம் மற்றும் உணர்வுகள் பற்றித் தெரியாது.

நம்முடைய எதிர்கால வளர்ச்சியில் AI-க்கு பெரும்பங்கு இருக்கிறது என்பது உண்மையே. இருப்பினும், அதனை நம் தேவைக்கு ஏற்றவாறு சரியான அளவில் பயன்படுத்திக் கொள்வது அவசியம். நாம் AI-யிடம் எதைப் பகிர்கிறோம் என்பதில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

# "கேண்டீன் பில்"




"மச்சி... யாரு பில் பே பண்றது"
கேண்டீனில் வழக்கமாய் எழும் கேள்வி.
"நான் பண்றேன்டா..."
எழுந்தான் விஜய்.
அவர்கள் குரூப்பில் ஆறு பேர். அவர்களுக்குள் சிரிப்பு, கலாட்டா, சண்டை... எல்லாம் இருக்கும்.
ஆனால் எப்போதுமே விஜய்தான் கேண்டீன் பில்லுக்குப் பணம் தருவான்.
இறுதியாண்டு.
கேம்பஸ் இண்டர்வியூ,ப்ளேஸ்மெண்ட், ப்ராஜெக்ட்... என பல டென்ஷன்கள்.
ஆனாலும் அந்த கேண்டீனில் விஜய்யேதான் பணம் கொடுத்துக் கொண்டிருந்தான்.
ஒரு நாள்... விஜய் வரவில்லை. அடுத்த நாளும் வரவில்லை. அடுத்த வாரமும் வரவில்லை.
மொபைலும் ஸ்விட்ச் ஆ்ஃப்.
ஒரு மாதத்திற்குப் பிறகு, பட்டமளிப்பு விழா.
அனைவரும் அந்த கவுனில் நடமாடினர்.
சிரிப்பும், சந்தோஷமுமாய்க் காட்சியளித்தது கல்லூரி ஆடிட்டோரியம்.
நண்பர்கள் மனதிலும் ஒரே கேள்வி. "விஜய் எங்கே?"

அப்போதுதான் கல்லூரி சிப்பந்தி ஒருவர் வந்து, "நீங்க அஞ்சு பேரும்தானே அந்த விஜயோட தோஸ்த்துக... உங்களை பிரின்ஸிபால் கூப்பிடறார்..."
அவர்கள் சென்றார்கள்.
அங்கு, விஜய்யின் அப்பா சோர்ந்த முகத்துடன், கையில் ஒரு கவரைப் பிடித்தபடி அமர்ந்திருந்தார்.

"நீங்கதான் விஜயோட நண்பர்களா?"
அவர்கள் தலையசைக்க, அவர் தன் கையிலிருந்த அந்தக் கவரைக் கொடுத்தார்.
அதனுள் கல்லூரி பீஸ் கட்டிய ரசீதுகள்.
அதில் விஜய்யின் நண்பர்கள் ஐந்து பேரின் பெயர்களும்.
"விஜய் எங்கே?" ஒருத்தன் கேட்டான்.
விஜய்யின் அப்பா கண்களைத் துடைத்தார்.
"அவன் ஊருக்கு வரும் போது பஸ் ஆக்ஸிடெண்ட்ல.. போயிட்டான்ப்பா"
அவர்கள் நடுங்கினார்கள்.
"எங்களுக்குத் தகவலே வரலையே?"
"அவன் கேட்டுக்கிட்டான்... நண்பர்கள் கிட்ட சொல்லாதீங்கன்னு!...
அவன் கடைசி ஆசை என்னன்னு தெரியுமா?"
அவர்கள் மௌனம்.
"அவன் இல்லாத நாளிலும்... நீங்கெல்லாம் சிரிச்சுக்கிட்டே இருக்கணுமாம்...""
அடுத்த நாள், கல்லூரிக் கேண்டீனில்...
அதே டேபிள். பில் வந்தது.
அனைவரும் ஒரே நேரத்தில் கையை நீட்டினார்கள்.
அன்று முதல் முறையாக அவர்கள் அனைவரும் பில் பே பண்ணினார்கள்.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# ஒய்வறை..!

காலை மணி 8.45. மெல்லிய புன்னகையோடு ஓய்வறைக்குள் நுழைந்து, தலைக் கவசத்தை கழட்டி தன் இருக்கைக்கு அருகில் வைத்துவிட்டு, சுவற்றிலிருந்த கண்ணாடியில் முகம் பார்த்து தலை மயிரை சரிசெய்து, கைகுட்டையால் முகம் துடைத்து, தலைமை ஆசிரியர் அறையில் வைத்திருந்த வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டுவிட்டு, வெளியே வந்து நின்றான் கோவலன்.
மின்விளக்கு வெளிச்சத்தில் காற்றோட்டமாக இருந்தது ஓய்வரை. ஜன்னல் கதவுகள் அனைத்தும் திறந்திருந்தது. பெருக்கி சுத்தமாக இருந்தது. பத்துக்கும் மேற்பட்ட மின்விசிறியில் ஐந்து மட்டும் சுழன்றுகொண்டிருந்தது. ஆசிரியர்கள் உட்காரும் மேசையின் மீது அன்றையச் செய்தித்தாள் பிரிக்கப்படமால் அப்படியே இருந்தது.
மணி 8.50. கோவிந்தன் மற்றும் கோலப்பன் ஆசிரியர்கள் ஒருவர்பின் ஒருவராக ஓய்வறைக்குள் நுழைந்ததும், முகம் பார்த்து வணக்கம் வைத்துவிட்டு,
சிரித்த முகத்தோடு பள்ளியினுள் நுழைந்த மாணவர்களின் ஆடை, தலைமயிரைச் சரிபார்த்து, அறிவுரை கூறி அனுப்பிக்கொண்டிருந்த ஆசிரியர் அருளப்பனுக்கு அருகில் நின்றான் கோவலன்.
சரியாக காலை ஒன்பது. முதல் மணி அடித்தது...
தங்களது வகுப்புகளிலிருந்து வெளியே வந்த மாணவர்கள், வழிபாடு செய்யும் இடத்தில் வரிசையில் நின்றனர்.
மணவர்களின் பேச்சை குறைப்பதற்கு, உதவித் தலைமை ஆசிரியரின் அதட்டல் அவசியம் தேவைப்பட்டது.
ஒவ்வொரு வரிசைக்கும் முடிவில் வகுப்பு ஆசிரியர்கள் நின்றிருந்தனர்.
தமிழ்த்தாய் வாழ்த்தோடு தொடங்கி, பிறந்தநாள் வாழ்த்தில் பயணித்து, தேசிய கீதத்தில் முடிந்தது காலை வழிபாடு.
மிதமான பேச்சோடு வரிசையில் மாணவர்கள் வகுப்பை நோக்கி நடந்தனர்.
பள்ளியின் நுழைவுவாயிலில் காலதாமதமாக பள்ளிக்கு வந்த மாணவர்கள் வரிசையில் உட்காரவைக்கப்பட்டிருந்தனர்.
அவசர அவசரமாக கையில் சோற்றுப் பையோடு உள்ளே நுழைந்த ஆசிரியரை ஏன் கேள்விக்கு உட்படுத்தவில்லை என்ற அவனின் பார்வைக்கு இங்கு யாரும் பதில் சொல்லத் தயாராகயில்லை.
உதவி தலைமை ஆசிரியர் கையில் கம்போடு " ஏண்டா தினமுமாடா இதே மாதிரி வருவிங்க?" என கோபமாக கேட்ட கேள்விக்கு சட்டென "பஸ்ஸு நீங்க நினைக்குற நேரத்துக்கு வராது சார்" என்று பதில் சொன்ன மாணவனின் பக்கம், பார்வையை திருப்பி ஒரு முறை முறைத்தார்.
வருகைப் பதிவு எடுத்ததும், ஒட்டுமொத்த பள்ளியின் சூழல் அமைதியானது.
முதல் பாடவேளை முடிந்து, ஒரு சில ஆசிரியர்கள் ஓய்வறை நோக்கி வந்தனர்.
சின்ன சலசலப்போடு இரண்டாவது பாடவேளைத் தொடங்கியது.
இரண்டாவது பாடவேளையில் ஓய்விலிருந்த ஓர் ஆசிரியர், தனது பாடம் தொடர்பான சந்தேகளுக்கு புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தார்.
மற்றொருவர் மாணவர் வருகைப் பதிவேட்டினைப் புரட்டி சிவப்பு மையினால் அடிகோடிட்டுக்கொண்டிருந்தார்.
முதல் இடைவேளை மணி அடித்தது. ஓய்வறையில் அனைத்து இருக்கைகளிலும் ஆசிரியர்கள் உட்கார்ந்திருந்தனர்.
சின்ன சலசலப்பின் தொடர்ச்சி பெரிய பேச்சாகத் தொடர்ந்தது.
குறுகிய நேர ஓய்வில் சின்ன கலந்துரையாடலோடு, அடுத்த பாட வேளைத் தொடங்கியதும், கையில் புத்தகத்தோடு வகுப்பறைகளை நோக்கி நடந்தனர் ஆசிரியர்கள்.
"என்ன சொன்னாலும் திருந்தமாட்ட... போ" என்று தாமதமாக வந்த மாணவனை செல்லமாக கடிந்துகொண்டு கரும்பலகையில் அன்றைய பாடத் தலைப்பை கொட்டை எழுத்தில் எழுதி விளக்கம் கொடுத்துவிட்டு, முதல் கேள்வியை கேட்டதும் ஒட்டுமொத்த வகுப்பறையும் அமைதியானது.
இதே சூழல் பள்ளி முழுவதும் பரவியிருந்தது.
மூன்றாம் பாடவேளையை முடித்தக் கையோடு, சற்றுக் களைப்பாக ஓய்வறைக்குள் நுழைந்த சில ஆசிரியர்கள், கையிலிருந்த புத்தகத்தை தனது இருக்கையில் வைத்துவிட்டு, ஓரமாக இருந்த கேனில் தண்ணீர் எடுத்துக் குடித்துவிட்டு அசதியாக உட்கார்ந்தனர்.



பாடம் எடுத்த களைப்பும், வகுப்பறையில் அமைதியை நிலைநாட்ட அவர்கள் மேற்கொண்ட முயற்சியும், ஓய்வறையில் உட்கார்ந்து பேச்சற்றவர்களாய் அமைதி காப்பதற்கு முதல் காரணம்.
ஒரு சில மாணவர்கள் வழிபாட்டு இடத்தில் நடமாடிக்கொண்டிருந்தவனை "டேய் இங்க வா, எங்கப் போர.?" என உடற்பயிற்சி ஆசிரியர் கேட்க, ஆள்காட்டி விரலை மேலே தூக்கி "அவசரம் சார்" என்றவனின் நிலையில் ஏதும் செய்ய இயலாமல் "இனிமே கண்ட நேரத்துல வெளிய வரக்கூடாது" எனக் கண்டித்து அனுப்பினார்.
நான்காம் பாடவேளை முடியும் தருவாயில், மாணவர்களின் பேச்சு சத்தம் கொஞ்சம் அதிகமானது.
உணவு இடைவேளை நேரம் மணி அடித்தது. தனது சோற்று டப்பாவோடு மாணவர்கள் வெளியே செல்ல ஆசிரியர்கள் குழுவாக உட்கார்ந்து சாப்பிட்டு முடித்தனர். தண்ணீர் குடித்து, பாத்திரத்தை கழுவி கொஞ்சம் இருக்கையில் உட்கார்ந்ததும், உடனே மதிய பாட வேளைக்கான மணி அடித்தது.
" அப்பாடா.." என்றவர், எதிரில் உட்கார்ந்திருந்த ஆசிரியரின் முகம் பார்த்து மெல்ல சிரித்தார்.
நன்றி - வணக்கம் என்று குறும்படம் முடிகிறது.
கடைசியாக, திரையில் கீழிருந்து எழுத்துக்கள் மேல் நோக்கி செல்கின்றன, பின்னனிக் குரலில் தொடர்ச்சியா எட்டு மணி நேரம் வேலைக் கடினமானது. சில மணித்துளிகள் ஓய்வு அவசியம். அமைதியாக இருப்பதற்கல்ல ஓய்வறை. அதனைச் சிலர் விரும்பவும் மாட்டார்கள்.
மாற்றுப் பணியைச் செய்வதற்கான நேரம். அல்லது, செய்தித்தாள் வாசிப்பது, புத்தகம் படிப்பது, சக தோழர்களோடு பழைய நினைவுகளை பகிர்ந்து கொள்வது, நடப்பு நிகழ்வுகள் தொடர்பாக பேசுவது, ஓய்வு அறையில் நடைபெறும்.
ஓய்வறை நிம்மதிக்கான இடம். மன அழுத்தம் இல்லாமல் சிந்திக்கவும், சிறிது கண்ணசரவும் ஒதுக்கப்பட்டது
மேலே சொன்னதுதான் ஒரு ஓய்வறையின் நல்ல சூழல்.
படித்தவர்களின் ஓய்வறைகள் பதற்றமான சூழலில் இருக்கிறது. நம்பகத்தன்மையற்ற செய்திக்கு முக்கியத்துவம் கொடுப்பது. புறம் கூறுவது. வதந்திகளை கட்டமைப்பது. மூன்றாம் நபர் பற்றி மோசமான விமர்சனத்தை முன்வைப்பது. இவையே பதற்றத்திற்கு காரணம்.
"பணியாளர்களை பிரித்து, இடம் மாற்றுவது மூலமாக, ஆரோக்கியமான ஆளுமைப் பண்பு கிடையாது.
முன்மாதிரியான மனிதர்களின் செயல்பாட்டைப் பாராட்டி, அதனைப் பின்பற்ற நடவடிக்கை மேற்கொள்வது சிறந்தது.
நண்பர்களோடு பேசுவதில் நாகரீகம், இருக்கையில் உட்காருகையில் கடைபிடிக்க வேண்டிய கண்ணியம், மாற்றுக் கருத்தை மதித்து. மரியாதையோடு அணுகுவது, போன்ற குணங்கள் ஓய்வறையில் நல்ல சூழலை உருவாக்கும்.
என்று பேசி முடிப்பார்.



- கயப்பக்கம்
இரா.இரமேஷ்

# அகத்தியனின் பயணம் 16



- கயப்பக்கம்
இரா.இரமேஷ்

## வராமல் போன இசையழகி

காலம் உருண்டோடியதது. வருடங்கள் கடந்தன. தங்கும் அறைக்கும் வேலை செய்யும் இடத்திற்கும் மாறி மாறிப் பயணப்பட்டவன், புதிய அனுபவம் மிக்கவனாய் தன்னுடைய செயல், ஆடை, பழகும் விதம் அனைத்திலும் மாற்றிக்கொண்டான்.

ஒரு நாள்

எழிலழகியும் இசையழகியும் சேர்ந்து வருகைதந்த சூழலுக்கு மாறாய். இன்று எழிலழகி மட்டும் வந்தாள். இசையழகி வரவில்லை.

ஒரு அலுவலக கண்காணிப்பாளராக "இசையழகி ஏன் வரவில்லை" என்று எழிலழகியிடம் கேட்டபோது, எழிலழகி சொன்ன பதில் அகத்தியனைக் கதிகலங்க வைத்தது.

ஒரு நிமிடம் பேசாமல் அப்படியே நின்றுபோனான். ஒட்டுமொத்தமாக அறையில் இருந்தவர்களும் என்ன சொல்வது என்று தெறியாமல் தவித்தார்கள்.

இசையழகிற்கு பதிலைச் சொல்லாமல் விட்டது தவறு என்பதை எழிலழகி பார்வையால், அகத்தியனை குத்திகாட்டினாள். அந்தப் பார்வைக்குப் பதில் சொல்ல முடியாமல் அகத்தியன் தவித்துப்போனான். இந்த ரகசியம் இந்த மூன்று பேர்களுக்கு மட்டுமே உரித்தாக இருந்தது. மற்றவர்களுக்கு உறுதிப்படுத்தப்படாத செய்தியாகவே தெரிந்தது. இருந்தாலும் குற்ற உணர்ச்சி அகத்தியனை துன்புறுத்திக் கொண்டேயிருந்தது.

இசையழகி ஏன் வரவில்லை என்பதைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக எழிலழகியை அகத்தியன் நாடவில்லை. ஆனால் எழிலழகிக்குச் சொல்லப்படாத் வார்த்தையில் ஆயிரம் அர்த்தங்கள் இருக்கிறது என்பதை அகத்தியன் புரிந்துகொண்டான்.

தோழியோடு மகிழ்ச்சியாகத் தினமும் அலுவலகத்திற்கு வந்து வேலை செய்துவிட்டு, சிரித்த முகத்தோடு வீட்டிற்கு புறப்படும் எழிலழகி இன்றிலிருந்து தனிமையாய், ஒற்றைப் பறவையாய், சிறகுடைந்த பறவையாய் பயணப்படப் போகிறாள் என்பது அகத்தியனுக்கு நன்றாகத் தெரிந்தது. அவள் முகத்தில் வழக்கமாக இருக்கின்ற சிரிப்பு இல்லாமல் போனது. முகம் களையிழந்து கவலையாகக் காணப்பட்டது. அவள் வேலை முடித்துத் தனியாக நடந்துபோனாள். அவள் போவதையே பார்த்துக்கொண்டிருந்தான் அகத்தியன். அவனால் எழிலழகி கேட்டிருந்த கேள்விகளுக்கு ஒற்றை வரியில் பதில் சொல்லியிருக்க முடியும், முடியாது என்ற சொல்லைச் சொல்லாமல் விட்டது தவறு என்பதை அகத்தியன் உணர்ந்துக்கொண்டு, தவித்துக்கொண்டிருந்தான்.

இரவு நேரங்களில் அவன் நிம்மதியாகத் தூங்குவதில்லை. இசையழகிற்கு சரியான பதில் சொல்லாமல் போனது தவறு என்று அவனது மனசாட்சி உறுத்திக்கொண்டேயிருந்தது. பதிலை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்த எழிலழகியை தினம் தினம் அகத்தியன் பார்த்துக்கொண்டிருந்தான். எழிலழகியை சந்திக்கும்போதெல்லாம் குற்ற உணர்ச்சியாகவே இருந்தது. நம்பிக்கை வைத்து நம்மை அழைத்துத் தனி அறையில் உட்காரவைத்துப் பேசி, ஏதாவது நல்ல பதில் வரும் என்ற எண்ணத்தின் காத்திருந்தது, பதில் எதுவும் சொல்ல முடியாமல் தள்ளிப் போட்டது, பதில் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையில் எழிலழகி அமைதிகாத்தது அனைத்தும் கனவாகவே முடிந்தது. காலங்கள் ஓடியது.

நாட்கள் மாதங்களானது. மாதங்கள் வருடத்தை நோக்கி அடி எடுத்து வைத்தான். எழிலழகி அகத்தியன் இருப்பிடத்தில் வந்து நின்று, ஒரு விண்ணப்பம் கொடுத்தாள்.

"என்ன " என்று கேட்டான் அகத்தியன்.

"சார் எனக்குக் கல்யாணம். நீங்க நிச்சயம் வந்துடனும்" என்றாள் எழிலழகி.



"எங்க கல்யாணம்" என்றான் அகத்தியன்.

"சென்னையில்தான் சார். பக்கத்துலதான். கண்டிப்பா உங்கள எதிபார்த்துக் காத்துகிட்டு இருப்பன் சார். இங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தூரம். நடக்கிற தூரம்தான். உங்களை எதிர்பார்ப்பேன்" என்று அழைப்புவிடுத்து, திருமணப் பத்திரிக்கையைக் கொடுத்துவிட்டு "சர் நாளையிலிருந்து நான் வரல சார்" என்றாள் எழிலழகி.

அதிர்ச்சியோடு எதுவும் சொல்ல முடியாமல், கலங்கிய கண்ணீரை வெளிப்படுத்தாமல் அடக்கிக்கொண்டு அமைதியாக நின்றான்.

எழிலழகி "சார் கண்டிப்பா எதிர்பாப்பேன். நீங்க என் கல்யாணத்துக்கு வரணும்" என்ற அவளின் அன்புகலந்த அழைப்பை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்திவிட்டு அங்கிருந்து புறப்பட்டாள்.

பதில் சொல்ல முடியாதவனாய், அழைப்பிதழை வாங்கிக்கொண்டு எழிலழகியையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான் அகத்தியன்.

நகர்ந்து போனக் காலங்கள் எப்படி ஓடியது என்பதைப் பற்றி ஒரு முறை சிந்தித்துப் பார்க்கத் தொடங்கினான். இப்பொழுது இயக்குனர் அறையிலிருந்து உதவியாளர் அகத்தியனை நோக்கி ஓடிவந்து "சார் உங்கள அம்மா கூப்பிடறாங்க. ஏதோ அவசரமா, உடனே வரச் சொன்னாங்க" என்று சொன்னவுடன், கையில் உள்ள திருமணப் பத்திரிகையை அப்படியே எடுத்துக்கொண்டு இயக்குனர் அறையை நோக்கி நடந்தான் அகத்தியன். சற்று பொருமையாக "உள்ளே வரலாமா மேடம்" என்று கேட்டுக்கொண்டு கதவைத் திறந்து உள்ளேச் சென்றான்.

"வாங்க அகத்தியன், உக்காருங்க. பல வருடங்களுக்கு முன்னாடி நான் சொல்லணும் நினைச்சது. இன்னைக்குதான் அதற்குச் சரியான தருணமா இருக்குமுன்னு நான் நினைக்கிறேன். நான் சொல்லப் போறத கேட்டுட்டு நீங்க அதிர்ச்சியடைவேண்டாம். முடியுமா முடியாதாங்கிறத மட்டும் சொல்லிடுங்க. அதுக்கப்புறம் என்னவோ, அது நான் பாத்துக்கிறன்" என்று புதிர் போலவே இயக்குனர் பேசி முடித்தார்.

அவனால் விரைந்து பதில் சொல்ல முடியவில்லை. அமைதிக் காத்தான். கொஞ்ச நேரம் ஒருவரை ஒருவர் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்ளாமல், முகத்தைத் திருப்பிக்கொண்டு அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள்.

இயக்குனர் பேச ஆரம்பித்தார்." அகத்தியன் நீங்கச் சேர்ந்த முதல் நாளிலேயே உங்கள கவனிக்க ஆரம்பிச்சேன். உங்கள் செயல்பாடுகள் சிறப்பா இருந்தது. அதனால உங்கமீது தனி அன்பு எனக்கு ஏற்பட்டது. உங்க உழைப்பு, உங்களுடைய ஈடுபாடு, நீங்கத் தொழிலாளர்கள் மீது வைத்திருக்கிற அளவுகடந்த அன்பு, அவர்களை வழி நடத்துகிற முறை, எல்லாமே எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. அதனால, ..." என்று சொல்லத் தயங்கி அப்படியே நிறுத்தினாள்.

மாலை ஐந்து மணி.ஆலையின் சங்கு ஊதியதும், " சரி அகத்தியன், நேரம் சரியில்லை, சரி போங்க" எனச் சொன்னதும் வெளியே வந்தான் அகத்தியன்.

(தொடரும்)

# காட்டழகிய சிங்கர், மேட்டழகிய சிங்கர், ஆற்றழகிய சிங்கர் ஆகிய மூன்று நரசிம்மர்கள்

காட்டழகிய சிங்கர், மேட்டழகிய சிங்கர், ஆற்றழகிய சிங்கர் ஆகிய மூன்று நரசிம்மர்கள் அருள் புரியும் தலமாக விளங்குகிறது திருச்சி.







காட்டழகிய சிங்கர் கோவில் ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமான் கோவிலில் இருந்து சுமார் ஒன்றரை கி.மீ தொலைவில் உள்ளது. இங்கு நரசிம்மர் எட்டு அடி உயரத்தில் காட்சி தருகிறார். பதினைந்து நூற்றாண்டுகள் பழமையான ஆலயமாகத் திகழ்கிறது. சுவாதி நட்சத்திரம் பெருமாளின் ஜென்ம நட்சத்திரம் அன்று பெருமாளுக்கு சிறப்பாக திருமஞ்சனம் செய்யப்படுகிறது. இந்த நாளில் வழிபடுவோர்களுக்கு கேட்ட வரம் கிடைக்கும், தீராத நோய் தீரும் என்பது நம்பிக்கை. பிரதோஷ நேரத்தில் இவரை வழிபட்டால் குழந்தையில்லாதவர்களுக்கு குழந்தை வரம் நிச்சயம் என்பது நம்பிக்கை. நினைத்த கோரிக்கைகளை நிறைவேற்றிவைக்கும் நரசிம்ம பெருமாளுக்கு மிகவும் பிடித்தமான பானக நைவேத்தியம் இங்கே சிறப்பு. வெல்லம், சுக்கு, ஏலக்காய் முதலியவற்றை பெருமாள் சந்நிதியில் நைவேத்தியத்துக்குக் கொடுத்தால், சந்நிதியில் அர்ச்சகர்கள் பெருமாளுக்காக எடுத்து வைத்த தீர்த்தத்தில் பானகம் கரைத்து அதை பெருமாளுக்கு நிவேதனம் செய்து தருகிறார்கள். அந்த பானக பிரசாதத்தை பக்தர்களுக்கு வழங்கினால், பிரார்த்தனை நிறைவேறும் என்பது நம்பிக்கை.

#மேட்டழகிய சிங்கர்:

ஸ்ரீரங்கத்தில் உள்ள மற்றொரு முக்கியமான கோவில் மேட்டழகிய சிங்கர் கோவில். தரைமட்டத்தில் இருந்து உயர்த்தப்பட்ட இந்த ஆலயம், தாயார் சந்நிதிக்கு அப்பால் உள்ள மதில் சுவரைத் தாண்டியவுடன் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இது சோழர்களால் கட்டப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த கோவிலின் சிறந்த அம்சம் முழுவதும் ஓவியங்கள் தான். அவை பெரும்பாலும் நாயக்கர்களால் வரையப்பட்டவை. கம்பராமாயண அரங்கத்தின்போது அதைக் கேட்டு மகிழ்ந்தவர் இவர். அதனால் தான் கம்பர், வால்மீகி ராமாயணத்தில் இல்லாத இரணியன் வதைப்படலத்தை கம்பராமாயணத்தில் சேர்த்ததாகப் பெரியோர்கள் கூறுவர்.

திருச்சி, சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து 10 நிமிட நடைபயணத்தில் இந்தக் கோவில் உள்ளது. திருச்சி சிந்தாமணி அண்ணாசிலையிலிருந்து, ஸ்ரீரங்கம், திருவானைக்கா நோக்கி வண்டிகளில் பயணம் செய்வோர், காவிரி புதுப்பாலத்தின் மேல் ஏறாமல் அதற்கு சற்று முன்பே, வலதுபுறமாக கீழிறங்கி திரும்பிச் செல்லும் தனி வழிபாதையில் 200 அடிகள் சென்றால் உடனடியாக இந்தக்கோவிலை அடையலாம்.

காவிரி நதியை ஒட்டி சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே கோவில் கொண்டுள்ள ஸ்ரீ ஆற்றழகிய சிங்கப்பெருமாளை வேண்டினால், திருமணத் தடை விலகும் என்பது ஐதீகம். இக்கோவிலின் பின்புறக்கதவைத் திறந்து ஒரு ஐந்து படி இறங்கினால் போதும், பெருமகிழ்ச்சியுடன் பொங்கிப் பெருகிவரும் காவிரியில் நாம் இறங்கிப் புனித நீராடிட முடியும். சுவர்க்கத்தின் வாசல் போன்ற கோவிலின் பிரதான நுழைவாயிலுக்குள் செல்லும் நமக்கு இடதுபுறம் கருடனும், வலது புறம் ஹனுமனும் காட்சியளிக்கிறார்கள்.

இந்த மூன்று நரசிம்மர்களையும் ஒரே நாளில் தரிசனம் செய்தால், வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழலாம் என்பது நம்பிக்கை.

காட்டழகியசிங்கர்
மேட்டழகியசிங்கர்
ஆற்றழகியசிங்கர்

முனைவர் **பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

# தினம் ஒரு தலைவர்கள்

# சித்தரஞ்சன் தாஸ் வரலாறு

தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் (நவம்பர் 5, 1870 - ஜூன் 16, 1925) இந்திய விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கை ஆற்றியவர்.

தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர். 1917-ஆம் ஆண்டிலிருந்து 1925- ஆம் ஆண்டு வரை தீவிர அரசியலில் ஈடுபட்டவர். இவர் பூபன் மோகன் தாஸ் என்பவருக்குப் பிறந்தார். இங்கிலாந்தில் சட்டக் கல்வி கல்வி கற்றவர், 1909இல் அலிப்பூர் குண்டுவெடிப்பு வழக்கில் அரவிந்தருக்கு ஆதரவாக வெற்றிகரமாக வாதாடினார்.

இவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் அரசியல் குரு.

அவரது அரசியல் ஞானத்தாலும் பேச்சுத் திறமையாலும் அவர் இந்திய தேசிய காங்கிரஸில் முக்கியமான நபராக உயர்ந்தார். அவர் கிராமங்களை முன்னேற்றி கைத்தொழில்களை வளர்க்க விரும்பினார். சுய ராஜ்ஜியக் கட்சித் தலைவர். சாதி வேற்றுமையையும் தீண்டாமையையும் வெறுத்தவர். பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். புகழ் பெற்ற வழக்கறிஞராக இருந்தபோதும் சுதந்திரப் போராட்டத்திற்காக தனது தொழிலைத் தியாகம் செய்தவர்.

இளமைக்காலம்

1870- ஆம் ஆண்டு நவம்பர் 5-ஆம் நாள் வங்காளத்தில் டாக்கா மாவட்டம் விக்ராம்பூரில் வசதியான குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை பூபன் மோஹன் தாஸ் கல்கத்தா நீதிமன்றத்தில் சட்ட ஆலோசகராகப் பணியாற்றினார். பூபன் தாஸ் சிறந்த அறிவாளி. பிரம்ம சமாஜத்தில் தீவிர நம்பிக்கை உடையவர். மிகுந்த நாட்டுப் பற்று உடையவர். சித்தரஞ்சன் தாஸ் நாட்டுப் பற்று உடையவராக விளங்கியதற்கு அவரது தந்தையே காரணம். சித்தரஞ்சன் தாஸ் அவரது முதல் மகன். அவருக்கு ஒரு தமக்கை உண்டு. சித்தரஞ்சன் தாஸ் கல்கத்தா பிரசிடென்சி கல்லூரியில் பட்டம் பெற்றார். பின்னர் 1890-இல் இங்கிலாந்து சென்று இந்தியக் குடிமைப் பணி தேர்வு எழுதினார். இந்தியா திரும்பி 1894-ல் கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்ற ஆரம்பித்தார். அவரது இளைய சகோதரர் பி. ஆர். தாஸ் பாட்னா உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றினார். வங்கப்பிரிவினையின்போது அரவிந்தர், பிபின் சந்த்ர பாலுடன் இணைந்து "வந்தே மாதரம்" என்ற ஆங்கில இதழில் எழுதி வந்தார்.

அனுஷீலன் சமிதி

அரவிந்தரும் சித்தரஞ்சன் தாஸூம் சுதந்திரப் போராட்ட புரட்சி இயக்கமான அனுஷீலன் சமிதியின் துணைத்தலைவர்கள் ஆவர். இவ்வியக்கம் இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் கிழக்கு இந்தியாவின் முக்கிய ஆயுதம் ஏந்திய இயக்கம் ஆகும். ஆயுதப்புரட்சி மூலம் இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தருவதே இதன் குறிக்கோள் ஆகும். ஜதீந்திரநாத் பானர்ஜி, ஜதீந்திரநாத் முகர்ஜி, யதீந்திர கோஷ் (அரவிந்தரின் இளைய சகோதரர்), ராஷ் பிஹாரி போஸ் ஆகியோர் இதன் முக்கிய உறுப்பினர்கள் ஆவர். சித்தரஞ்சன் தாஸ் ஐரோப்பிய இலக்கியத்தில் ஆர்வம் உடையவர். அவர் சாகர் சங்கீத், நாராயண்மாலா, கிஷோர்-கிஷோரீ, அந்தர்யாமி போன்ற இலக்கியங்களை எழுதியுள்ளார். மேற்கத்திய கல்விமுறை ஆத்மா முன்னேற்றத்திற்குப் பயனற்றது என்று கருதினார். பிரம்ம சமாஜ நூல்கள், ராமகிருஷ்ண பரமஹம்சர் நூல்கள் ஆகியவற்றை ஆழ்ந்து படித்தார். விவேகானந்தரின் கருத்துகள் இவரைக் கவர்ந்தன. புகழ்பெற்ற அறிஞர்களான பக்கிம் சந்திரர், D.L. ராய், கிரீஷ் கோஷ், இரவீந்திரநாத் தாகூர் போன்றவர்களின் நூல்களையும் அவர் ஆழ்ந்து படித்தார். எல்லோரும் கல்வி கற்க வேண்டியது அவசியம் என்று கருதினார். ஈஷ்வர் சந்த்ர வித்யா சாகரின் விதவை மறுமண இயக்கத்திற்கு உதவினார். அவர் 1890-லிருந்து 1894 வரை இங்கிலாந்தில் இருந்த காலத்தில் தாதாபாய் நௌரோஜிக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்தார். ஜான்மெக்கலன் என்பவரின் இந்திய விரோதப் பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்து கிளாட்ஸ்டோன் தலைமையில் நடந்த கூட்டத்தில் பேசினார். அரவிந்தரின் அலிப்பூர் குண்டுவழக்கில் தாஸின் வாதத் திறமையால் அரவிந்தர் விடுவிக்கப்பட்டார். அதனால் அவரது புகழ் பரவியது. தும்ரோன் அரசரின் தத்தெடுப்பு குறித்த வழக்கிலும் அவர் வெற்றி பெற்றார். இவ்வாறாக அவர் சிவில், கிரிமினல் இரண்டிலுமே தேர்ச்சி பெற்றவராக விளங்கினார். 1920-ல் அவரது மாத வருமானம் ரூ.50,000 ஆகும். அவரது தந்தை தாராள குணத்தாலும், ஆடம்பரத்தாலும் திவாலாகி இருந்தார். 1913-ல் தாஸ் தனது தந்தையின் கடன்களை அடைத்தார். இது அவரது உயர்ந்த தர்ம நியாய உணர்ச்சியைக் காட்டுகிறது. 1921- ஆம் ஆண்டு விக்ராம்பூரில் நடைபெற்ற தேசிய கல்வி மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். அதே ஆண்டு அஸ்ஸாம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வெளியேற்றம், அஸ்ஸாம்-வங்காள ரயில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் போன்றவற்றிலும் கவனம் செலுத்தினார்.

அலிப்பூர் குண்டு வழக்கு

குதிராம் போஸ் என்ற இளைஞர் நாட்டுப்பற்று மிகுந்தவர். தனது 13-ஆவது வயதிலேயே சுதந்திரப் போராட்ட புரட்சி இயக்கமான யுகாந்தர் இயக்கத்தில் இணைந்தவர். வங்கப்பிரிவினையை எதிர்த்து நடந்த குண்டு வீச்சுகளில் தீவிரமாகப் பங்கு பெற்றவர். வங்காளத்தில் முசாபூர் நகரத்தில் அதிகாரியாகப் பணிபுரிந்த கிங்ஸ்போர்டு என்பவர் மீது குண்டுவீச குதிராம் போஸூம் அவரது நண்பர் பிரபுல்ல சாஹியும் சென்றனர். 1908-ஆம் ஆண்டு ஏப்ரல் 30-ஆம் தேதி கிங்ஸ்போர்டின் வாகனத்தின் மீது குண்டு வீசினர். அந்த வாகனத்தில் வந்த வேறு ஒரு பெண்மணியும் அவரது மகளும் இறந்தனர். பிரபுல்ல சாஹி பிடிபட்ட உடன் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு இறந்தார். குதிராம் போஸ் 1908-ஆம் ஆண்டு ஆகஸ்டு 11-ஆம் தேதி தூக்கிலிடப்பட்ட போது அவரது வயது 18 ஆகும். அப்போதும் அவர் "வந்தே மாதரம்" என்றே முழங்கினார். இந்த வழக்கில் அரவிந்தரும் கைது செய்யப்பட்டார். ஆனால் தாஸின் வாதத் திறமையால் அரவிந்தர் விடுவிக்கப்பட்டார். 1921-ஆம் ஆண்டு அகமதாபாத் நகரில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேசத் தொண்டாற்றுவதற்காக புகழ்பெற்ற, திறமை வாய்ந்த வழக்கறிஞரான தாஸ் தனது தொழிலைத் துறந்தார். அவரது இந்த தன்னலமற்ற தியாகம் நாடுமுழுவதும் அவருக்கு இருந்த நன்மதிப்பை அதிகரித்தது. வேல்ஸ் இளவரசரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் சித்தரஞ்சன் தாஸ் மனைவி பசந்தி தேவி, மகன் சிரா ரஞ்சன், சகோதரி ஊர்மிளா தேவி, கிரண் சங்கர் ராய், சுபாஷ் சந்திர போஸ் ஆகியோருடன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 1922-ல் காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்டதால் காங்கிரஸிலிருந்து விலகி சுயராஜ்ஜியக் கட்சி துவங்கினார்.



சுயராஜ்ஜியக் கட்சி

1923-ஆம் ஆண்டு ஜனவரி 9-ஆம் தேதி காந்திஜியை எதிர்த்த இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களால் சுயராஜ்ஜியக் கட்சி துவங்கப்பட்டது. இதில் முக்கியமானவர்கள் சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு(ஜவஹர்லால் நேருவின் தந்தை), நரசிம்ம சிந்தாமன் கேல்கர் (கேல்கர் மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்தவர். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பாலகங்காதரத் திலகருடன் நெருக்கமாகப் பணியாற்றியவர்.1910-ஆம் ஆண்டிலிருந்து 1932-ஆம் ஆண்டு வரை "கேசரி" இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். திலகர் குறித்து பல நூல்கள் எழுதியுள்ளார்.), ஹூசேன் சாஹித் ஜராவார்டி(பின்னாளில் பாகிஸ்தான் பிரதமராகப் பணிபுரிந்தார்), நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், விதால்பாய் படேல் (வல்லபாய் படேலின் அண்ணன். இவரும் அமிதவாதப் போக்கு உடையவர். 1923-ஆம் ஆண்டு மத்திய சட்டமன்ற உறுப்பினராகவும், 1925-ஆம் ஆண்டு சபாநாயகராகவும் விளங்கினார். சுபாஷ் சந்திர போஸின் தேசப்பணிகளால் கவரப்பட்ட விதால்பாய் படேல் அவரது ரூ.1,20,000 மதிப்புடைய சொத்தை போஸின் தேசப்பணிகளுக்காகக் கொடுத்தார். ஆனால் காந்திஜி அந்தத் தொகையை காங்கிரஸ் கட்சியின் விருப்பத்திற்கேற்பதான் செலவிட வேண்டும் என்றார். போஸ் மறுத்ததால் வழக்கு நீதிமன்றம் சென்றது. உயில் தெளிவாக இல்லாததால் போஸ் அந்தத் தொகையை இழந்தார்.) போன்றோர் ஆவர். இவர்கள் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்றத்தில் அரசாங்கத்தின் நியாயமற்ற கொள்கைகளை எதிர்க்க நினைத்தார்கள். பிரித்தானிய ராஜ்ஜியத்திலிருந்து சுதந்திரம் பெற்று சுயராஜ்ஜியம் அமைப்பதே இவர்கள் குறிக்கோள் ஆகும். சித்தரஞ்சன் தாஸ் "ஃபார்வார்டு" என்ற பத்திரிக்கை ஆரம்பித்து சுபாஷ் சந்திர போஸிடம் ஒப்படைத்தார். 1924-ஆம் ஆண்டு நடைபெற்ற கல்கத்தா மாநகராட்சி தேர்தலில் சுயராஜ்ஜியக்கட்சி வெற்றி பெற்றது. மாநகராட்சி மேயராக சித்தரஞ்சன் தாஸூம் மாநகராட்சி நிர்வாக அதிகாரியாக சுபாஷ் சந்திர போஸூம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கல்கத்தா மாநகராட்சியில் பல சீர்திருத்தங்களைச் செய்து மக்களிடம் பேராதரவைப் பெற்றனர். சிறந்த செயல்பாட்டால் 1925-ஆம் ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தாராள குணம்


1925-ஆம் ஆண்டு ஜூன் 16 அன்று டார்ஜிலிங்கில் தனது 55-ஆவது வயதில் இறந்தார். அவரது உடல் கல்கத்தாவுக்குக் கொண்டுவரப்பட்டு மக்களின் மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. இரண்டு மைல் நீளத்திற்கு மக்கள் வெள்ளமாகத் திரண்டிருந்தனர். தாகூர் சித்தரஞ்சன் தாஸைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது அவரது தியாகமும் ஆக்கசக்தியும் நம்மை வழிநடத்தும் என்று கூறுகிறார். அவரது தாராள குணம் நினைத்துப் போற்றத்தக்கது. அவரது இல்லம் "சித்தரஞ்சன் சேவாசதன்" என்ற பெயரில் மருத்துவமனையாகச் செயல்படுகிறது.

மேற்கு வங்கத்தில் முக்கிய புள்ளியாக இருந்த இவர் 1919-1922 காலப் பகுதியில் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து பிரித்தானியரின் ஆடைகளைப் புறக்கணிக்க முன்னின்று உழைத்தார். மோதிலால் நேருவுடன் இணைந்து சுயாட்சிக் கட்சியை ஆரம்பித்தார்.

ஃபோர்வார்ட் (FORWARD) என்ற செய்திப் பத்திரிகையை பிரித்தானிய ஆட்சியாளருக்கு எதிராக ஆரம்பித்து நடத்தினார். இப்பத்திரிகை பின்னர் விடுதலை (LIBERTY) என்ற பெயரில் வெளியிடப்பட்டது. இவர் பல கவிதைகளையும் இயற்றியுள்ளார். இவரது கவிதைத் தொகுப்பு சாகர் சங்கீத் என்ற பெயரில் புகழ் பெற்றவை.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# 'TN 2026 தங்க நட்சத்திரம்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




தம்பி ராமையாவின் மகன் உமாபதி ராமையா இயக்கத்தில் 'TN 2026 தங்க நட்சத்திரம்' என்ற திரைப்படம் உருவாகியுள்ளது. இப்படத்தில் நட்டி நடராஜ் கதாநாயகனாக நடித்துள்ளார். மேலும், இப்படத்தில் தம்பி ராமையா, எம்.எஸ். பாஸ்கர் முக்கிய கத்பாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்நிலையில், 'TN 2026 தங்க நட்சத்திரம்' திரைப்படம் வரும் ஏப்ரல் 10ம் தேதி வெளியாகும் என படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.



இலங்கையை சேர்ந்தவர் லாஸ்லியா. அவர் தமிழ் பிக் பாஸ் நிகழ்ச்சியில் போட்டியாளராக கலந்துகொண்டு பெரிய அளவில் பிரபலம் ஆனார். லாஸ்லியா தற்போது தமிழ் படங்களில் நடித்து வருகிறார். சமீப காலமாக கிளாமர் காட்டவும் அவர் தொடங்கி இருக்கிறார். இன்ஸ்டாகிராமில் அடிக்கடி கவர்ச்சியாகவும் ஸ்டில்களை வெளியிட்டு வருகிறார் லாஸ்லியா. தற்போது நீர்நிலைக்கு அருகில் அவர் கவர்ச்சி உடையில் எடுத்த ஹாட் போட்டோஷூட் இதோ.

# சித்தா திரைப்படத்தில் நடித்தவர் தேர்தலில் போட்டி!



பிரபல மலையாள நடிகை பாஜக சார்பில் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

மலையாளத்தில் குணச்சித்திர நடிகையாக கவனம் பெற்றவர் நடிகை அஞ்சலி நாயர். குழந்தை நட்சத்திரமாக திரைத்துறைக்கு அறிமுகமானவர் 80 மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். த்ரிஷ்யம் - 2 திரைப்படத்தில் காவல்துறை அதிகாரியாக சில காட்சிகளில் நடித்து கவனம் ஈர்த்திருந்தார்.

மேலும், தமிழில் நெல்லு திரைப்படம் மூலம் அறிமுகமானவர் சில திரைப்படங்களில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்தார். தொடர்ந்து, அண்ணாத்த திரைப்படத்தில் நடிகர் ரஜினிகாந்த்துக்கு அம்மாவாக நடித்தார்.

நடிகர் சித்தார்த்துடன் சித்தா திரைப்படத்தில் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்து அசத்தினார். அப்படத்திற்காக நல்ல பாராட்டுகளுக்கும் அவருக்கு கிடைத்தது.

இந்த நிலையில், டிவெண்டி 20 என்கிற கட்சியைச் சேர்ந்த அஞ்சலி நாயர் திருப்பணித்துறா வேட்பாளராக பாஜக கூட்டணியில் இணைந்து போட்டியிடுகிறார். இதே கட்சியைச் சார்ந்த லட்சுமி பிரியா, வீணா நாயர் ஆகிய நடிகைகளும் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

கேரளத்தில் வருகிற ஏப். 9 ஆம் தேதி நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்காக பாஜகவின் தேசிய ஜனநாயகக் கூட்டணி டிவெண்டி 20 கட்சிக்கு 20 இடங்களை ஒதுக்கியிருக்கிறது.

# LIK படத்தின் அடாவடி பாடல் அப்டேட்




விக்னேஷ் சிவன் இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ள படம் 'LIK' (லவ் இன்ஷூரன்ஸ் கம்பெனி). இப்படத்தில் பிரதீப் ரங்கநாதனுக்கு ஜோடியாக கீர்த்தி ஷெட்டி நடித்துள்ளார். மேலும் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நாம் தமிழர் ஒருங்கிணைப்பாளர் சீமானும், எஸ்.ஜே.சூர்யாவும் நடித்துள்ளனர்.

நயன்தாரா மற்றும் 7 ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இப்படத்தின் பாடல்கள் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது. இதனை தொடர்ந்து இப்படத்திற்கான பணிகள் நிறைவடைந்ததை தொடர்ந்து படம் வெளியாவது குறித்த அறிவிப்புகள் வெளியானாலும் படம் வெளியாகவில்லை.

கடைசியாக 'LIK' படம் ஏப்ரல் 3 ஆம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது ஏப்ரல் 10 ஆம் தேதி வெளியாகும் என படக்குழு வீடியோ வெளியிட்டு அறிவித்தது.

இந்நிலையில், LIK படத்தின் 3 ஆவது பாடலான அடாவடி பாடல் இன்று மாலை 6 மணிக்கு வெளியாகும் என்று படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

# ஜூலையில் ரிலீஸ் ஆகிறது 'ஜனநாயகன்'?



தவெக தலைவரும், நடிகருமான விஜய்யின் 'ஜனநாயகன்' படத்தில் மத நல்லிணக்கத்துக்கு ஊறு விளைவிக்கும் காட்சிகள் இருப்பதாகக் கூறி, படத்தை மறு ஆய்வுக்கு அனுப்பி மத்திய தணிக்கை வாரியம் உத்தரவிட்டது. இதை எதிர்த்து படக்குழு தரப்பில் உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. விசாரித்த தனி நீதிபதி தணிக்கை சான்றிதழ் வழங்க உத்தரவிட்டார்.

அதை எதிர்த்து தணிக்கை வாரியம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி அமர்வு, தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்தனர். மேலும், படத்தை மறு ஆய்வுக்கு அனுப்பிய தணிக்கை வாரியத்தின் உத்தரவை எதிர்த்து படத் தயாரிப்புக் குழு மீண்டும் தனி நீதிபதியை நாடவும், தனி நீதிபதி இரு தரப்புக்கும் போதிய அவகாசம் அளித்து விசாரிக்கவும் உத்தரவிட்டனர்.

இப்படத்தை மறு ஆய்வுக்கு அனுப்பியது தொடர்பாக நேரடியாக தணிக்கை வாரியத்தையே நாடவுள்ளதால், வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்வதாக படத்தயாரிப்பு தரப்பில் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை ஏற்ற நீதிமன்றம் ஜனநாயகன் படத்துக்குத் தணிக்கை சான்றிதழ் கோரி தொடரப்பட்ட வழக்கைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

பின்னர் இப்படம் மறுதணிக்கைக்கு அனுப்பப்பட்டது. மார்ச் 17-ல் மறு ஆய்வுக் குழுவினர் படத்தைப் பார்த்தனர். தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் விதிகள் நடைமுறையில் இருப்பதாலும் படத்தில் அரசியல் வசனங்கள் இடம் பெற்றுள்ளதாலும் படத்தைத் தேர்தல் ஆணையத்துக்கு மறு ஆய்வு குழு பரிந்துரை செய்துள்ளதாகக் கூறப்பட்டது.

இந்நிலையில் 'ஜனநாயகன்' திரைப்படம் வெளியீடு தொடர்பாக புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி ஜூலை மாதம் இப்படம் வெளியாக வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

கேவிஎன் நிறுவனம் தயாரிப்பில் யாஷ் நடித்துள்ள 'த டாக்ஸிக்' படம் மார்ச் மாதம் வெளியாக இருந்தது. படத்தை ஜூன் 4-ம் தேதிக்குத் தள்ளி வைத்தனர். அதன் வெளியீட்டில் கவனம் செலுத்த இருக்கும் இந்நிறுவனம், அப்படம் வெளியான பிறகே 'ஜனநாயகன்' படத்தில் கவனம் செலுத்தும் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

படக்குழு தரப்பில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை.

# தவெகவில் இணைந்த பாண்டியன் ஸ்டோர்ஸ் நடிகை!



நடிகர் விஜய்யின் தவெகவில் பிரபல சின்ன திரை நடிகை சாந்தினி பிரகாஷ் இணைந்துள்ளார்.

ஜீ தமிழ் தொலைக்காட்சியில் சிங்கள் பசங்க என்ற நிகழ்ச்சியில் கூமாப்பட்டி தங்கப் பாண்டியன் உடன் பங்கேற்று ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார் நடிகை சாந்தினி பிரகாஷ்.

இவர் ஜீ தமிழ் தொலைக்காட்சியில் பூவே பூச்சூடவா என்ற தொடரில் நடித்து மக்கள் மனங்களைக் கவர்ந்தவர். இவருக்கு சமூக ஊடகங்களில் ஏராளமான ரசிகர்கள் உள்ளனர்.

தற்போது, சாந்தினி பிரகாஷ் பாண்டியன் ஸ்டோர்ஸ் - 2 தொடரில் சுகன்யா என்ற பாத்திரத்தில் நடித்து வருகிறார்.

பாண்டியன் ஸ்டோர்ஸ் தொடரின் முதல் பாகத்துக்கு கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து இரண்டாவது பாகம் ஒளிபரப்பாகி வருகிறது. முதல் பாகம் அண்ணன் தம்பி பாசத்தை மையப்படுத்தி எடுக்கப்பட்டது. இரண்டாவது பாகம் அப்பா, மகன்களின் பிணைப்பை மையப்படுத்தி எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தத் தொடரில் முக்கிய வேடத்தில் நடித்து வரும் சாந்தினி, விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் சுற்றும் விழி சுடரே தொடரிலும் நடிக்கிறார்.

இந்த நிலையில், நடிகை சாந்தினி பிரகாஷ் தமிழக வெற்றிக் கழகத்தின் உறுப்பினராக இணைந்துள்ளார். அதற்கான உறுப்பினர் அட்டையும் பெற்றுள்ளார்.

இதனை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் நடிகை சாந்தினி பகிர்ந்துள்ளார். இதற்கு பாண்டியன் ஸ்டோர்ஸ் தொடரில் நடிக்கும் நடிகர் வெங்கட் ரங்கநாதன், 'வா தல வா வா' என்று பதில் தெரிவித்து பதிவிட்டுள்ளார்.



ஒரே ஒரு கண்ணடிக்கும் வீடியோ வைரல் ஆனதால் இந்திய அளவில் ஒரே நாளில் வைரல் ஆனவர் பிரியா பிரகாஷ் வாரியர்.


அவர் வைரல் நடிகை ஆனாலும் ஹிட் கொடுக்க முடியவில்லை. அதனால் தற்போது சின்ன சின்ன ரோல்களில் நடித்து வருகிறார்.

பிரியா வாரியர் தற்போது ஹாட் உடையில் ஆற்றின் ஓரத்தில் எடுத்த போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.


அருள்தரும் தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
ஸ்ரீ அகத்தியர் சொன்ன ரகசிய மந்திரங்கள்
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai


WANTED
Needed female staff
to look after
children, patients.
Contact
9150989424


Happy Birthday
R. S. YADHVIK


WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872


WANTED
Site Supervisor required
for construction work in Ambattur
Contact:
8428872887


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology – Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


WANTED
TELECALLERS
• Work at Home
• Fulltime or Parttime
Salary Rs. 20000 to 50000/-
Call / Whatsapp:
7789941009
9337501889


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
TV NEWS
PRESS
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள்
உற்பத்தி செய்யும் நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ராசி
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com







## மறுபடியுமா ?

அகரத்திலிருந்து ஆரம்பமா
ஆத்திச்சூடி
கொன்றைவேந்தன்
என்றே நாம் போவோமே
கற்றல் என்றும் முடிவதில்லை
கற்றல் ஒன்றிற்குத்தான்
கடல் போலும் கரைகள்
தெரிவதில்லைஆழ்கடலில்
முத்துக்குளிப்பவன்
ஒரிடத்தில்இறங்கியபின்
அங்கு தேடிய பின்
இறங்கினேன்
தேடினேன்
கிடைத்தது/
கிடைக்கவில்லை
என்று கூறி முடிப்பதில்லை
மீன் பிடிப்பவனும் அப்படியே
படிப்பவர்களோ படித்தேன்
முடித்தேன் விஸ்வநாதன்
வேலை வேண்டும்
என்று சேர்ந்திசை பாடிடுவர்
வேலைக்கென்றில்லாமல்
கற்றல் வேண்டும் கற்றல்
வேறு ஏட்டுக்கல்வி வேறு
தொழிற்கல்வி வேறு
வாழ்க்கைக்கு வழி வேண்டும்



வாழ வழி செய்யும் ஒரு
கல்வி உடன் உலகறிய
உரிய ஒரு கல்வி
இரண்டும் வேண்டும்
வாருங்கள் தினம்
கற்போம்

**ஓம் குமார் P N**

## ஒப்பனை உலகம்

அரியதொரு அறிஞராய்,
அனைத்தும் அறிந்த
ஞானியாய், முற்றும்
துறந்த முனியாய், பெரும்
கல்விமானாய், எளிய
தலைவனாய், ஏழைப்
பங்காளனாய், அன்புசால்
நண்பனாய்; திருத்தமாய்
ஒப்பனைக்கு மேல்
ஒப்பனையிட்டு வலம் வரும்
தலைவன்; ஏமாற்றுவதாக
அவர் நடிக்க

அவர்முன், நானும்;
ஏதும் அறியா அறிவிலியாய்,
கதியில்லா ஏதிலியாய்,
வல்லமையில்லா
வறியோனாய்; வலி இழந்த
நலிந்தோனாய்.
ஒப்பனையிட்டு கும்பிட்டு
நிற்கிறேன்; அவர் மனம்
மகிழ; ஏமாறுவதாக நான்
நடிக்க; அவர் பிழைப்பு



எம் கையிலும்;
எம் பிழைப்பு
அவர்
கையிலும்
என்பதினால்!

**சசிகலா விஸ்வநாதன்**

## சாதனை !

வயது தடையல்ல எந்த
வயதிலும் புரியலாம்
சாதனை

சோதனைக்கு
வேதனைப்படாதே சாதனை

தோல்விக்கு துவளாமல்
தொடர்ந்து முயன்றால்
சாதனை

மனதில் தீ வேண்டும்
திட்டமிட வேண்டும்
புரியலாம் சாதனை

அரசுத் தேர்வில்
ஆண்களைவிட பெண்கள்
சாதனை

முயற்சி உழைப்பு
மூலதனம் சாதனை

அணுகுண்டு வெடித்து
அப்துல்கலாம் சாதனை

சோம்பேறிகளாலும்
சுறுசுறுப்பற்றவர்களாலும்
நிகழ்த்த முடியாது சாதனை!

**கவிஞர் இரா .இரவி !**




## என்றும் மகிழ்வோம் எந்தமிழ் சிந்தனையில்!

யாதும் ஊரே யாவரும் கேளிர்
உரைத்தது தமிழ்
கனியன் பூங்குன்றன் பாடியது
அமெரிக்காவில் உள்ளது!

அறம் செய்ய விரும்பு என்று
அன்றே அவ்வை பாடினாள்
அறத்தை வலியுறுத்தி!

பிறப்பொக்கும் எல்லா
உயிரும் சமம் என்று பாடினார்
உலகப்பொதுமறையில்
திருவள்ளுவர்!

ஞாயிறு போற்றுதும் திங்கள்
போற்றுதும் இளங்கோவடிகள்
சிலப்பதிகாரத்தில் பாடினார்!

எண்ண எண்ண இனிக்கும்
எந்தமிழ் சிந்தனைகள்
எண்ணிய வழி நடந்தால்
வாழ்க்கை சிறக்கும்!

ஒருவனுக்கு
ஒருத்தி பண்பாடு
பயிற்றுவித்தது தமிழ்
ஒழுக்கத்தை
உயிருக்கு மேலாக
உணர்த்தியது தமிழ்!

அற இலக்கியத்தின்
களஞ்சியம் கன்னித்தமிழ்
அறத்தையே அன்றும் என்றும்
பாடிய பைந்தமிழ்!
அகநானூறு புறநானூறு
அகத்திணை புறத்திணை
ஐந்திணை என பாடி சிறந்தது
செந்தமிழ்!

எண்ணிலடங்கா
இலக்கியங்களின் பெட்டகம்
தமிழ் இலக்கணங்கள் வகுத்த
தொல்காப்பியமும் தமிழ்!


சங்க இலக்கியத்தின் சங்கமம்
சங்கத்தமிழ் சங்கம் அமைத்து
தமிழ் வளர்த்த வரலாறு
உண்டு!

வேறு எந்த மொழிகளுக்கும்
இல்லாத சிறப்புகள்
வண்டமிழுக்கு உள்ள
வளமான மொழி தமிழ்!



செந்தமிழ் நாடெனும்
போதினிலே
இன்பத்தேன் பாயுது
செந்நாப் புலவர் பாரதி
பாடியது முற்றிலும்
உண்மை!

**கவிஞர் இரா. இரவி**



## பேசிய வார்த்தைகள்

சொன்ன சொற்கள்
மனதுக்குள் இந்த கீதம்
பாடுகிறதே துன்பங்கள்
ஓடி இன்பங்கள்
நிலைக்கின்றன....
பல சொற்கள் பரவசப்படுத்த
பரிதியைப் போல
கண் விழித்தேன் ... சில
சொற்கள் சிந்தனையை
தூண்ட சிந்திக்க
நேரமின்றி சிரித்தேன் ...
உறுதி இது என்று
தெரிந்தவுடன் மனம்
லயித்தேன் தொடமுடியாத
வானம் கூட என்னை நோக்கி
வருவது போல மகிழ்ந்தேன்...
கனவல்ல நிஜம் தான் என்று
களிப்புடன் மகிழ்ந்தேன்
இதுதானே இந்த வாழ்க்கை
என்று எப்பொழுதும் எண்ணி



மகிழ்ந்தேன்
பேசிய வார்த்தைகளில்
காதல் வாசம் உணர
நேசத்துடன் மகிழ்ந்து
ரசித்தேன்

**உஷா முத்துராமன்**

## ஆன்மிக சிந்தனைகள்.

அமைதி யாதனின் யாதனின் நீங்கியான்
நோதல் அதனில் அதனில் இலன்....குறள்

அமைதி என்பது என்ன?..... ஓய்வுநிலை.......
இல்லை..... குழப்பமற்ற மனமா.......மனமாற்றமா

பள்ளி பருவத்தே கடவுள்வாழ்த்து
ஆரம்பித்து...கொடிவணக்கம்..சிறுசிறு
சலசலப்புகளுக்கிடையில் தலைமை ஆசிரியர்
ஆற்றும் உரை...அமைதி நிலவும் ஓர் இடம்....

கல்யாண வீட்டிலோ. சமபோஜன பந்தியிலோ
சலசலப்பு அதிமாகி ஒரு குறிப்பிட்ட நேரத்தில்
அமைதி நிலவும்....சாப்பாடு பரிமாறும் வரை
இருந்த சலசலப்பு சாப்பிட ஆரம்பித்த பின்...
அமைதி நிலவும்

வீட்டில்நமக்குவிருப்பமில்லாசூழ்நிலை
நிலவும்போதும்..அமைதி

நண்பனிடம் கோபித்துக் கொண்டபின்
அதனை விருப்பமில்லாமல் ....அவனுடன்
சேரவேண்டும் போல் இருக்கும்போது.....
அமைதி

அப்பா வாங்கித்தராத பொருள்களின் மேல்
உள்ள கோபத்தினால் அவரையே கோபித்துக்
கொண்டு காட்டும்...அமைதி...

அக்கா அண்ணன் தம்பி தங்கை சிறிது
அதிகமாக சாப்பிட்டதற்காக ஆசையின்
காரணமாக அவர்களிடம் பேசாது
அமைதி காத்தல்..

இறந்தவீட்டிலும்....வாழ்வின் சங்கடமான
சூழ்நிலையிலும் நிலவும் மயான அமைதி...

ஏமாற்றம் பரபரப்பு கவலை ஆசை கோபம்
சோகம்...இவைகள் கோலோச்சும் இடமோ

அமைதி....இல்லை....அப்படியானால்...
குழம்பும் சூழலில் நிலை குலையாமல்
கலங்காமல் அமைதி காத்தலே அமைதியாகும்

உலகில் ஒவ்வொரு உயிரும் தேடுவது
அமைதியையே... காரியம் அனைத்தும்
சுயநலமில்லாமல் காப்பதே அமைதி
துறவறத்தால் கிடைப்பது அல்ல அமைதி....
பற்றைத் துறப்பதால் கிடைப்பதே அமைதி

புறப்பொருள் வழங்காத அமைதியை
அகப்பொருள் வழங்குவதே அமைதி

என்னுள்ளே தேடி தேடிக் கண்டு
கொண்டேன்.....என்று நாவுக்கரசர் சொல்வது
போல் இறைவனே அமைதி ஆனவன்

அமைதியைப் பெற வேண்டுமானால் மன
யுத்தங்கள் தவிர்க்கப்பட வேண்டும்

மனித மனங்களே யுத்தங்களின் தொடக்கம்

புயலுக்குப் பின் அமைதி வேண்டாம்.....புயலே
வேண்டாம் என்பதற்கே அமைதி வேண்டும்

அமைதியான நதியினிலே ஓடம்....இதுவே
நமது தலையாய கடமை

தானும் வாழ்ந்து உள்ளத்தே அமைதியுற்று
வாழ்வின் நிகழ்வுகளை அமைதி குலையாமல்
எதிர் கொண்டு பிறருக்கும் வழிகாட்டியாய்த்
தன் வாழ்வை வகுத்துக் கொள்பவனே
அமைதியானவன்



எண்ணங்களின் மாற்றங்களே
புதியதோர் உலகை உருவாக்கும்

கலக்கத்தையே கலங்கடிக்கும்
மனதிடத்தினை.... இறைவனிடம்
வேண்டி.....பெற்றவனே அமைதியுடன்
தன் வாழ்வை எதிர் கொள்கிறான்........

**Bhanumati Nachiyar**

## தடைகளைத் தகர்த்தெறி.!

வாடிக்கிடக்குமோ? ரோஜா.! வருத்தப் படாதே
என் ராஜா.! மோதி எதிர்த்திடத் துணிந்தால்..
முன் வந்தத் தடையென்னச் செய்யுமோ.?
உள்ளத்தின் உறுதி மலையாகும்.! உளித்
தொட்டக் கற்களே சிலையாகும்.! துள்ளி
வருகுது வேலெனவே.. துணிந்திடு!
தடையென்னப் பொடியாகும்.!

மேடு பள்ளங்களை உருவாக்கும்.. தடைகளே
நிறைந்த சமுதாயம்.! கண்முன்னே நடக்கின்ற
அநியாயம்.! கனன்றெழு தடையெல்லாம்
பொடியாகும்.!

வானமாம் கூரைகீழ் வாழவந்தோம்! வருவதை
ஒருக்கை பார்த்திடுவோம்! வீணுக்கு
வாழ்ந்துநாம் மாயலாமோ? வெகுண்டெழு!
தடைகளைத் தகர்த்தெறிவோம்.!
பசியென்ற ஒன்று இல்லாது இருந்தால்..
பாயிலே விழுந்து படுத்துக்கொண்டே இருக்கலாம்!

பசியென்ற ஒன்று வாராதிருந்தால் நாக்கும்
வயிறும் இல்லாது போகலாம்.!
பசிக்காது என்பது நமக்கெல்லாம் தெரிந்தால்..
சுமக்காது எங்கும் சுகமாகத் திறியலாம்.!

பணக்காரண் என்பவன் ஏழையாய் ஒருவன்..
பார்கிற வேதனை கண் காணாது போகலாம்.!
சேர்கின்ற பணப்பை செரிக்கின்ற இரைப்பை
இல்லாத மனிதனை எங்கெங்கும் பார்க்கலாம்.!

கடவுளை மனிதனை ஏமாற்றி தின்ற
மனிதர்கள் மாறலாம்.. கை நீட்டி
தெருமுனையில் கோவில் வாசல்களில்
எவருமே நிற்காது இந்நிலம் மாறலாம்..
பசியே நீ வரவேணும் என்று யாகங்கள்
நடக்கலாம்.. பசியே நீ வாழ்கவென்று
கவிஞர்கள் எழுதலாம்!

**வே.கல்யாண்குமார்.**

# நூல் விமர்சனம்

நூலின் பெயர் :
மான்குட்டிகளும் பருந்துகளும்
தொகுப்பாசிரியர் :
ஜெ.பி.ஜோஸபின் பாபா
பக்கங்கள்: 180
விலை :ரூ 200
பதிப்பகம் : சுவாசம் பதிப்பகம்
வெளியீடு; மார்ச் 2026
புத்தக தேவைக்கு : 81480–66645 (திரு ஹரன் பிரசன்னா)




தென் தமிழகத்தின் 21 பெண் எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதிய சிறுகதை தொகுப்பு " மான் குட்டிகளும் பருந்துகளும்" பிரபல எழுத்தாளர் அம்பை அவர்களின் அருமையான அணிந்துரையுடன் ஆரம்பம் .."ஊர் கூடி இழுக்கும் தேர்" என்று கூறும் அவர், நிறைகுறைகளை சுட்டிக்காட்டி "தேர் ஊர் முழுவதும் வீதி வலம் வரும்" என்று வாழ்த்துகிறார்.

தொகுப்பாசிரியர் ஜோஸபின் பாபா தென் தமிழ் எழுத்தாளர்களை அறநெறியுடன், ஒருமைப்பாட்டுடன் ஒன்றிணைக்க உதவுவதே இந்நூலின் நோக்கம் என்கிறார். 21 பெண் எழுத்தாளர்கள் ஒருங்கிணைந்து உருவாக்கிய "மான் குட்டிகளும் பருந்துகளும்" படிக்க படிக்க வியப்பு.. எத்தனை திறமைகள்.. எத்தனை விதமான கதைகள்.. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில்.. வித்தியாச கதை களத்துடன். ஒவ்வொரு கதையும் அவரவர் நடையில்.. 21 எழுத்தாளர்களைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால்.. நாகேஷ் இரு கோடுகள் படத்தில் பாடும் ஒரு பாடலின் வரி நினைவுக்கு வருகிறது...

"ஒருவருக்கொருவர் இளைத்தவர் அல்ல இவருக்கு அவரே மேல் என்று சொல்ல " பல கதைகள் பிரமிக்க வைத்தன.. கதைகள் ஒருவரிப் பார்வையில்.. "நினைவு நாள்" மீனா பொறுமையானவள்.. வீட்டில் உமாவின் வாசம் நிறைந்திருக்க..போராடும் அவள் உணர்வுகள் அசைகின்றன நம் மனதை

** பருந்துகளிடமிருந்து தப்பிக்க முடியாத மான் குட்டிகளுக்காக துளசியைப் போலவே நம் மனமும் வருந்துகிறது ..

** நீலாவின் பாரம்பரிய "வீடு" அவள் நினைவுகளை மட்டுமல்லாது நம்மையும் தாலாட்டுகின்றன.

** "காயம் ".. நெருங்கிய உறவினரால் ஒரு பெண் சந்திக்கும் அவலம் மனதை ரணமாக்குகிறது

** மேட்ரிமோனியில் வரன் பார்க்கும் சிரமங்களை அழகாய் அலசுகிறது "மூலம்"

** வெளிநாட்டில் இருந்து வரும் பிள்ளைகளுக்காக ஏங்கும் காந்திமதி.. கதை "சுட்ட மண்" நம் மனதில் ஒட்டிக் கொள்ளும் ஈரமண்.

** "மனிதம்" இன்னும் சாகவில்லை என்பதை அம்பலம்-முத்துராமன் அழகிய நட்பின் வாயிலாக கூறும் கதை



** அருவருப்பான தொழிலை தாய் தந்தை செய்வதை கண்டு வளர்ந்த ஒரு இளைஞனின் மனப்போராட்டம் அவன் சமுதாயத்திற்கு செய்யும் நல்லதை கூறும் கதை "உவர்மண்"

**தேரிகாட்டின் சிவந்த மண்ணின் சிலிர்க்க வைக்கும் பின்புல கதையை சொல்லும் "பூரணக் குட்டி"யின் பிறப்பே சுவாரஸ்யம். எழுதப்படாத கதைகள் மறைந்தே போகும் என்கிறது கதை.

** இளம் பெண்களை பாதுகாக்கும் ஒரு பிச்சைக்காரி கேட்கும் கேள்வியே தலையாய "யாசகம்" என உணரும் ஞானசுந்தரி.

** "மாயக்கண்ணன்" மனதில் கனம் ஏற்றி விட்டான்..இன்றைக்கு தேவையான விழிப்புணர்வு சிறுகதை

** மாணவர்கள் துன்பத்தைக் கண்டு ஓடிய "ஓடுகாலி டீச்சர்" நிச்சயம் அவர்கள் மனதில் சிம்மாசனமிட்டு அமர்ந்திருப்பார்..

** இளம் வயது கிராமத்து தோழியை தற்செயலாய் சந்திக்கும் வான்மதி அவளுக்கு உதவுவது .."மஞ்சாடி முத்துக்கள்" அருமையான கிராமத்து நடையில்.

**வில்லுப்பாட்டுக்காரியான செல்வியின் கலைக்கு மதிப்பளித்து சிவப்பு ஆடைக்காரி அம்மன் "வெள்ளை ஆடைக்காரி" யாக மாறிப்போன அதிசயம்..

**ஒரு தாயின் குழந்தையின் பசியாற்ற "சுடு கஞ்சி" வடிக்கும் இன்னொரு தாயியின் தாய்மை உள்ளம்..

** காரணம் அறியாமலே வேலை இழக்கும் ஒரு நல்ல ஆசிரியரின் மனக்குமுறல் "பாப(வ) நாசம்" நதி தூய்மைப்படுத்துதலை பின்புலமாய் கொண்டிருப் பது அருமை..

** படிக்கும் வயதில் போதைப்பொருள் பழக்கம் வாழ்க்கையை சீரழித்து விடும் என்பதை கூறுகிறது "இளைதாக முள் மரம் கொல்க" இன்றைய சமுதாயத்திற்கு மிக அவசியமான கதை.

** கடல் அலையின் தாலாட்டில் ஆரவி- கயல் காதல் சொல்லும் கவிதையாய் "முத்துநகர் மீனவன் ஆரவி"

**தற்கொலை எண்ணம் கொண்ட பெண் அத்தையின் கதையால் தெளிவுறுகிறாள் "திரிசங்கு சொர்க்கம் " தேவையில்லை என முடிவெடுக்கிறாள். ஆனால் அத்தை??

**ஆசிரிய பெருமக்களுக்கு மகுடம் சூட்டும் கதையாய் தமிழரசி டீச்சர்..

**நிராகரிப்பின் வலியில் இருக்கும் பெண்களை மோக வலைக்குள் பலியாக்கும் சூரிய பிரகாஷ்.. "அதிகாரத்தின் களிமண் பொம்மை"களாய்.. அவனை தொழில் நுட்பத்தால் தோல் உரித்து காட்டும் தமிழரசி.. தென் தமிழகத்தில் பிறந்தாலும் ஜெர்மனி, ஆஸ்திரேலியா, இலங்கை போன்ற வெளிநாடுகளில் வசிக்கும் எழுத்தாளர்கள் எங்களுடன் இணைந்தது மேலும் பெருமை சேர்க்கிறது. சிறுகதை எழுத நினைப்பவர்களுக்கு இப்புத்தகம் ஒரு அகராதி போல இருக்கும்.. அத்தனை வித்தியாசமான கதைகள் வித்தியாசமான கோணத்தில். சிறந்த வாசிப்பனுபவத்தைப் பெற வாங்கி வாசியுங்கள் நண்பர்களே.. கண்டிப்பாக இந்த புத்தகம் உங்கள் எதிர்பார்ப்பை ஏமாற்றாது.

**தி.வள்ளி**
**திருநெல்வேலி**

எதிர்கொள்
இக்கட்டான சூழல்களை
இன்னல்களை கடக்காமல்
சொகுசான இல்லறத்தில்
நீடித்திருப்பது குதிரைக்
கொம்பு எதையும்
எதிர்கொள்ள விழைவாய்
நெளிவு சுளிவுகளுடன்
போராடுவாய் சுகமான
ராகங்கள் எளிதானதன்று
நெருக்கடிகள் அவநம்பிக்கை
யளிக்கும் விரக்தி உந்தித்
தள்ள மனந்தளராதீர்



மீதமுள்ள
அடுக்குகள்
சொற்பமே
சொர்க்கத்தை
எட்டுவது
நிச்சயம்

**பி. பழனி,**
சென்னை.

## சாதனை !

வயது தடையல்ல
எந்த வயதிலும் புரியலாம்
சாதனை

சோதனைக்கு
வேதனைப்படாதே சாதனை

தோல்விக்கு துவளாமல்
தொடர்ந்து முயன்றால்
சாதனை

மனதில் தீ வேண்டும்
திட்டமிட வேண்டும்
புரியலாம் சாதனை

அரசுத் தேர்வில்
ஆண்களைவிட பெண்கள்
சாதனை

முயற்சி உழைப்பு
மூலதனம் சாதனை

அணுகுண்டு வெடித்து
அப்துல்கலாம் சாதனை

சோம்பேறிகளாலும்
சுறுசுறுப்பற்றவர்களாலும்
நிகழ்த்த முடியாது சாதனை!

**கவிஞர் இரா .இரவி !**



## இந்த நிலைதான் மனிதன் வாழ்வு

நீ உயர்ந்த்து இருக்கும்போது
பனிந்து இருக்க வேண்டும்..

நீ கம்பிரமா இருக்கும்போது
தலை குனிந்து இருக்க
வேண்டும்...

கோபுரத்தின் உதாரணமே
நம் வாழ்வின் ஆதாரம்...

துனிவு இருந்தால் வென்று
காட்டலாம்...
பனிவு இருந்தால் சாதித்து
காட்டலாம்..



அன்பு
இருந்தால்
எதையும்
அடக்கி
ஆளலாம்...
இது மூன்றும்
இருந்தால் மா...
மனிதனாகலாம்....!!

**பொன்.கருணா**
நவி மும்பை

## பொய்.

பொய் பேசுவது எளிது.
ஆனால் தவறு.
பொய் ஒரு நிழல்.
பொய் நம்பிக்கையை
கெடுக்கும். சில சமயங்களில்
பொய் ஒரு நிரபராதிக்குத்
தூக்குத் தண்டனையைக்கூட
பெற்றுத்தரும். ஆனால்



பொய்மையும்
வாய்மை
யிடத்த
புரைதீர்ந்த
நன்மை
பயக்கும்
எனின்.

**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.




## தூய்மை போற்றுவோம்

தோழர்களே!
தேசத்தில் வனவிலங்குகளை
வேட்டையாடுவது மட்டுமல்ல
கொசுக்களையும்
ஈக்களையும் உரமிட்டு
வளர்ப்பதும் குற்றமன்றோ!

தேசத்தை அழிக்க
அணுக்குண்டுகள்
தேவையில்லை
பிளாஸ்டிக்கழிவுகளும்
மக்கிய குப்பைகளும்
போதும் தேசமே
கிருமிகளின் அட்சய
பாத்திரமாகிவருகிறது!

இங்கே குப்பைகளைச்
சேர்க்கும் பண்டிகைகளில்
குதூகலிக்கும் நாம்
பழமையைக்கொளுத்திப்
புதுமையைப்புகுத்தும்
போகியை ஆண்டு முழுவதும்
கொண்டாடினால் என்ன?

பூமாதேவிக்கு
தொழிற்சாலைக்
கழிவுகளால் அபிசேகம்!
வாகனப்புகைகளால்
தூபதீபம்! குப்பைகளால்
அர்ச்சனைகள் செய்து
சாபத்தையே
வரமாய்ப்பெறுவது ஏன்?

உமிழ்நீரை விழுங்கினால்
செரிமானம் எளிதாகும்
நடக்கும் சாலைகளில் காறி
உமிழ்ந்தால்
அவமானமன்றோ!

தேசத்தில் காண்பதெல்லாம்
கேட்பதெல்லாம்
நுகர்வதெல்லாம்
ஐம்புலன்களுக்கும்
பரிமாறப்பட்ட விருந்துகள்
இவைகளுக்கிடையே
அருவருப்பாய் இருக்கும்
குப்பைகள் ஊறுகாய்கள்
அல்ல ஊறு விளைவிக்கும்
கேடுகளன்றோ!

கள்வர்களைக்காவலர்கள்
தான் பிடிக்க
வேண்டுமென்பதில்லை
மாந்தர்களே சுற்றி
வளைக்கலாமே!



தேசத்தின்
குப்பைகளை
துப்பரவு
பணியாளர்கள்
தான்
துடைக்க
வேண்டுமென்பதில்லை
மாந்தர்களின் இலட்சியமே
தூய்மையன்றோ!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்



## வாழ்க்கைக் கோலம்

வாழ்க்கை என்பதோ சிறு ஓடம் துன்பமெனும் ஆழ்கடலில்
தள்ளாடும் கொண்டேனே நானும் சோக வேடம் துன்பத்தை
என் மனமோ சாடும்

சுற்றும் பூமியோ ஒரு கோளாம் மாறிவருதே அதில் பருவக்
காலம் இன்பமும் துன்பமும் கடந்தே செல்லும் இறைவன்
வகுத்த நீதியே வெல்லும்

நானும் பூண்டேனே பாலர் பருவம் வானிலே வளர்பிறைக்
கோலம் கள்ளக் கபடு இல்லாத உள்ளம் கவலையை மறந்து
இன்பத்தில் துள்ளும்

வாலிப வயதிலே அடைந்தேன் பருவம் ஓங்கி வளர்ந்தது
தென்னை மரம் காதல் கனியப் படைத்தேன் காவியம்
இளமையில் அழியாத ஒரு ஓவியம்



அனுபவ அறிவாலே உடலும் முதிர்ந்ததோ நாற்று
வளர்ந்து கதிர்களைச் சுமந்ததோ ஒருநாள்
உடலைவிட்டு உயிர் பிரியுமோ படைத்த
கவிதைகள் உலகிலே மலருமோ.

**எஸ். சந்திரசேகரன் அமுதா**
செஞ்சிக்கோட்டை.

## துளிப்பாக்கள்

வெண் திரவத்துக்கு
வென்கிரீடம் ஓ
கறந்த பால் நுரை!

எம்மதம் சம்மதம்
பிணம் எரிக்கும்
வெட்டியான்!


பிணம் எரிந்தால்தான்
வீட்டில் அடுப்பு எரியும்
வெட்டியான் வீடு.!

கீழே கிடக்கிறது
குழந்தையின் பார்வை
உடைந்த பொம்மை!



அப்பாவின் குடை
மனதில் விரிந்தது
அவர் நினைவுகள்!

**பூ.சுப்ரமணியன்**
சென்னை



1. அனுபவம் என்பது எதை
எப்போது எப்படி செய்ய
வேண்டும் என்பது அல்ல
எதை எப்படி எப்போது
செய்யக்கூடாது என்பதுதான்
அனுபவம்

2. ஊழலும் உப்புமாவும்
ஒன்றுதான் இரண்டுக்கும்
எதிராக பேசிக் கொண்டு
இருப்பார்களே தவிர
அதை ஒரு நாளும் ஒழிக்க
முடியாது


3. மனிதன் மட்டும்தான்
மரங்களை வெட்டி அதில்
காகிதம் தயார் செய்து அதில்
மரத்தை காப்பாற்றுங்கள் என
எழுதுகிறான்

4. நரி எவ்வளவு
புத்திசாலியாக இருந்தாலும்
மனிதன் நரியை
வளர்ப்பதில்லை பதிலாக
நாயைத்தான் வளர்க்கிறான்
ஏனென்றால் அதுதான்
விசுவாசம் ஆக இருக்கிறது

5. துணிச்சல் என்பது பயம்
இல்லாமல் இருப்பது அல்ல
பயத்தையும் மீறி
செயல்படுவது

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## வாக்கு உன் செல்வாக்கு !



வாக்கு உன் செல்வாக்கு உண்மை
வாக்கை செல்வத்திற்கு விற்பது மடமை !

உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடு
உன் உரிமையை உண்மையாக நிலை நாட்டிடு!

மனதில் சிந்தித்து மனசாட்சிப்படி போடு
மற்றவர் சொல்வதற்காக போடுவதை விடு !

விழிகளை விற்று ஓவியம் வாங்கலாமா ?
வாக்குகளை விற்று பணம் வாங்கலாமா ?

சின்னமீனைப் போட்டு பெரியமீனைப் பிடிக்கும்
சின்னப்புத்திக்காரர்களிடம் கவனம் வேண்டும்!

வாக்களிக்க வாங்கிடும் பணத்தால் நமக்கு
வருவது ஒரு நாள் இன்பம் ஐந்து வருடங்கள் துன்பம் !

தமிழகம் தவிர வேறு மாநிலங்களில் இல்லை
தமிழகத்திற்குத் தலைகுனிவு வாக்களிக்கப் பணம் !

ஏழ்மையை விலைபேசி ஏளனம் செய்கின்றனர்
ஏழ்மையிலும் செம்மையாக வாழ்ந்து காட்டுவோம் !

ஏழை பணக்காரன் வேறுபாடுகள் இன்றி
எல்லோருக்கும் உண்டு வாக்களிக்கும் உரிமை !

காமராசர் காலத்தில் சேவைகள் செய்தனர்
அன்று கணினி காலத்தில் ஊழல்
செய்கின்றனர் இன்று !
அரசியலில் நேர்மை வாய்மை இருந்தன அன்று
அரசியலில் நேர்மை வாய்மை இல்லை இன்று !

சாதியைப் பார்த்து வாக்களிக்கவில்லை அன்று
சாதியைப் பார்த்து வாக்களிக்கின்றனர் இன்று!

நல்லவர்கள் நின்றனர் தேர்தலில் அன்று
நல்லவர்களைத் தேட வேண்டியுள்ளது இன்று !

பொதுநல விரும்பிகள் இருந்தனர் அன்று
தன்னல விரும்பிகள் பெருகினர் இன்று !

மக்கள் தொண்டை விரும்பினர் அன்று
தன் மக்கள் தொண்டை விரும்புகின்றனர் இன்று !

கொள்கைக்காக வைத்தனர் கூட்டணி அன்று
கோடிகளுக்காக வைத்தனர் கூட்டணி இன்று !

அதிகபட்ச நல்லவர்கள் இருந்தனர் அன்று
குறைந்தபட்ச கெட்டவர் தேர்வு இன்று !

பணம் வாங்கி வாகளிக்கவில்லை அன்று
பணம் வாங்கி வாகளிக்கின்றனர் இன்று !

வாக்கு உன் செல்வாக்கு அதனை நீ
வாய்மையாக பணம் பெறாது பயன்படுத்து !

**கவிஞர் இரா .இரவி !**

## மீள்பதிவு...

எல்லாரும் இட்டலி பற்றிய
பதிவு போட்டாங்க
நாமும் போடனும் என்று
தோன்றியது

இப்போதான் கொஞ்சம் ஓய்வு
இதோ என்னுடைய கவிதை

ஆவியிலே வெந்த உணவு
இட்டலியே நாவிலே எச்சில்
ஊறும் கண்டபோதில்
தாவிவந்து வாய்க்குள் புகுந்து
நழுவுமுன்பே பூமியிலே
வேறுணவு சுவையோ இதற்கே

அரிசியும் உளுந்தும்
கலந்த மாவுதானே
ஆவியிலே வெந்தபின்பும்
வெண்நிறந்தான்

யாரோடும் சண்டையில்லை
ஒத்துப்போகும் தான்
யாரிதற்கு ஈடென்று
உறுதியாகும்

வானிலே நிலவு உண்டு
களிப்பதற்கே வாயிலே
சுவையுண்டு வெந்தநிலவுக்கே
மிருது உள்ளம் கொண்டோர்
போலத்தான் மருத்துவர்
விரும்பிச் சொல்லும்
உணவிதுவே

தலைக்கனம் ஏறாத காலை
சிற்றுணவே தக்காரும் ஏற்கும்
சிறந்த நல்லுணவேசத்துகள்
யாவும் சேர்ந்திருக்கும்
தள்ளாது சுவைக்கும்
மாவுணவே...

**பானுமதிநாச்சியார்**
சிவகிரி



அந்த மனிதன்
திருந்த போவதே இல்லை
நீ திரும்பும் வரை!

தனி மரம் தோப்பாகாதாம்
வா அன்பே நைட்டு
லூட்டி அடித்து கொண்டே
ஸ்கூட்டியில்
டபுள்ஸ் போகலாம்!



ஹோலியும்
ஜாலி தான்
உன்னோடு
சேர்ந்து
கொண்டாடும்
போது!

**லி.நௌஷாத் கான்**



## சும்மா இருத்தலே சுகம்...

அறியாமை அகற்றும்
அவசரத்தில் அறிவியல்
துறையில் ஆவேசமாய்
நுழைந்து ஆச்சரிய
அதிசயங்களை அற்புதமாய்
அரங்கேற்றிய ஆறறிவு
மனிதனே... அடுக்கடுக்கான
ஆராய்ச்சி தொடரால்
அகிலத்தில் மாற்றம்
அனுதினமும் நிகழ்த்தி
ஆனந்த சுகத்துக்கு
அடிக்கல் நாட்டினாய்...
நித்தம் நித்தம்
புத்தம் புது கண்டுபிடிப்புகள்...
கதிரவன் வரவால்
காரிருள் நீங்கியதாய்
களித்துச் செழித்து
கொண்டாடியது குவலயம்...
அறிவியல் இல்லையேல்
அகிலம் இல்லை
அண்டம் இல்லை
என்று அறுதியிட்டு
சொல்லும் வண்ணம் மனிதா
உன் சக்திப் பெருக்கால்
விண்ணையும் மண்ணையும்
சமப்படுத்தி காட்டும்
சாதுர்யம் பெற்றாய்...
அந்தோ பரிதாபம்
நெல்மணி விதைத்திட
நெருஞ்சி முள் முளைத்த
கதையாய் ஆனதே...
விஞ்ஞானத்தின்
வீரிய விளைச்சல்
ஆக்க வெளிச்சத்தோடு
அதிபக்க விளைவுகளாய்
அழிவு வெளிச்சங்களையும்
விபரீதமாய் பாய்ச்சி
வேதனை இருளுக்கு
வழி வகுத்தனவே...
எல்லைப் பிரச்னை
எண்ணெய் பிரச்னை
பணப் பிரிவின்
பரிவர்த்தனை என்று
பேதங்கள் விளைந்து
போர்கள் விரிந்து
கருணையே இல்லாத
கணைகளின் வீச்சில்
உயிர்கள் சரம் சரமாய்
சிதைந்து சரிந்து
சாம்ராஜ்யங்களே
சாம்பலாய் மாறும்
சாபக்கேடுகள்
சங்கிலியாய்த் தொடரும்
அவலங்கள் சகிக்க
முடியலியே...அறிவியலைத்
துலங்க வைத்து உச்சத்தில்
உயர வைத்த ஆறறிவு
மனிதனே... ஓயாத உழைப்பில்
நீ உருவாக்கி உலவ விட்டவை
யாவும் இன்ப துன்பங்களை
ஏற்ற இறக்கங்களை
மேடு பள்ளங்களை
மேதினியில் நிரந்தரமாக்கி
நிர்க்கதி ஆக்கியுள்ளனவே...
கூட்டிக் கழித்துப் பார்த்தால்
கூட சொல்லொணா சோகமே
இங்கு சொக்கட்டான்
ஆடுகிறது...பேரழிவின்
பயத்தில் பூமிப் பந்தே
பிரபஞ்சத்தில் பதுங்கிப்
பதுங்கி பிதுங்கிப் பிதுங்கி
பின்னேற்றமாய் சுற்றுகிறதே...
சுருங்கச் சொல்லி
சோகத்தை முடிக்கவா,
மனிதா... அன்பின் ஆத்மா
இல்லாத உன் உயரிய
கண்டு பிடிப்புகளால்
அகிலம் களங்கப் பட்டது
தானே மிச்சம்... நீ
ஒன்றுமே செய்யாமல் சும்மா
இருந்திருந்தால் பிழைக்கவே
முடியாதபடி பிழைப் பிரவாகம்
இங்கே பொங்கி இருக்காது...
இனிமையில் அமுதமாய்
எளிமையில் இமயமாய் உலகம்
உருப்படியாய் என்றும்
ஒளிர்ந்து மிளிர்ந்து
ஒய்யார மிடுக்கில்
நிலையாய் நின்று
ஜொலித்திருக்குமே!



**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்




1. துன்பத்திலும் ஆறுதல்
சொல்லும் அன்பை
தேடுங்கள் அதுவே கடைசி
வரை நீடிக்கும்

2. அன்று காடுகளில்
வாழ்ந்த மனிதன் தான்
இன்று ஆதார் கார்டு
டெபிட் கார்டு கிரெடிட்
கார்டு சிம் கார்டு மெமரி
கார்டு ஹெல்த் கார்டு என
பலவிதமான கார்டுகளில்
வாழ்கிறான்

3. நெல் வயலில் ரோஜா
கூட களை செடி தான்

4. கோபம் உன்னை
ஆபத்தில் சிக்க வைக்கும்
அமைதியே உன்னை
ஆக்கபூர்வமாக சிந்திக்க
வைக்கும்

5. தேர்தலின் போது
யோசிக்காமல்
காசை
வாங்குங்கள்
வாங்கிய பின்
யோசித்து
பட்டனை
அழுக்குங்கள்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## இனிமை மொழி! என் தமிழ்மொழி!!

இலக்கண இலக்கியங்களின் குவியல் தமிழ்மொழி
இனிய உச்சரிப்பின் இனிமை தமிழ்மொழி
உலகப் பொதுமறையை உலகிற்கு தந்திட்ட தமிழ்மொழி
உலகமொழிகளின் மூலம் ஒப்பற்ற தமிழ்மொழி

காவியங்களும் காப்பியங்களும் நிறைந்த தமிழ்மொழி
கனிச்சாறையும் கற்கண்டையும் மிஞ்சிய தமிழ்மொழி
எண்ணிலடங்கா சொற்கள் கொண்ட தமிழ்மொழி
எண்ணத்தை உயர்வாக்கும் உயர்ந்த தமிழ்மொழி

பழமைக்கு பழமையான தொன்மைமிகு தமிழ்மொழி
புதுமைக்கு புதுமையான புத்துணர்வுமிகு தமிழ்மொழி
இணையத்தில் கொடிகட்டிப் பறக்கும் தமிழ்மொழி
இணையில்லாப் புகழ்மிக்கக உயர்தனித் தமிழ்மொழி

முதல் மனிதன் பேசிய முதல்மொழி தமிழ்மொழி
மூத்தோரை மதிக்கும் மரியாதை மிக்க தமிழ்மொழி
உலகிற்கு பண்பாட்டை பறைசாற்றும் தமிழ்மொழி
உலக இலக்கியங்களில் முதன்மையானது தமிழ்மொழி

மனிதநேயத்தை முன்மொழியும் மொழி தமிழ்மொழி
மனிதனை மனிதனாக மதிக்கும் நல் தமிழ்மொழி
பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைத்திருக்கும் தமிழ்மொழி
பல நூறு மொழிகளில் சிறந்திருக்கும் தமிழ்மொழி

புலவர்கள் பலரை உருவாக்கிய தமிழ்மொழி
அறிஞர்கள் பலரை செதுக்கிய தமிழ்மொழி
விஞ்ஞானிகள் பலரை வளர்த்த தமிழ்மொழி
மெஞ்ஞானிகள் பலரை வழங்கிய தமிழ்மொழி

இயல், இசை, நாடகம் சிறந்து விளங்கிடும் தமிழ்மொழி
எத்திக்கும் முத்தமிழிலும் முத்திரை பதித்திடும் தமிழ்மொழி
அகமும் புறமும் அழகாக விளங்கும் தமிழ்மொழி
அற்புத உறவுகளுக்கு தனித்தனி சொல்லழகு தமிழ்மொழி

முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல், பாலை பாடிய தமிழ்மொழி
மூச்சாக உலகத் தமிழருக்கு விளங்கிடும் தமிழ்மொழி
மனதை இளமையாக்கும் இனிய தமிழ்மொழி
மமதையை அழித்து ஒழித்திடும் தமிழ்மொழி

தாலாட்டு தொடங்கி ஒப்பாரி வரை இனிய தமிழ்மொழி
தமிழனின் பிறப்பு முதல் இறப்பு வரை தொடரும் தமிழ்மொழி
ஒரு எழுத்தில் பொருள் கூறும் தமிழ்மொழி
ஒரு எழுந்து மாறினால் பொருள் மாறும் தமிழ்மொழி

காந்தியடிகள் மனதார புகழ்ந்திட்ட தமிழ்மொழி
தமிழனாக பிறந்திட ஆசைப்பட வைத்த தமிழ்மொழி
கவிஞர்கள் கட்டித் காத்த கரும்பு தமிழ்மொழி
கவிதைகள் கட்டித்தங்கம் போன்ற தமிழ்மொழி

உலகம் உள்ளவரை என்றும் நிலைக்கும் தமிழ்மொழி
உலகில் ஈடு இணையற்ற உன்னதமொழி தமிழ்மொழி!

**கவிஞர்.இரா.இரவி**



## குரங்கின் கையில் கைப் பேசி.!

நீ.. பேச நினைப்பதெல்லாம்..
நான் பேச வேண்டும்.!
மனிதா.. உன் காதோடு நான்
பேச வேண்டும்.!
நான் பேச வேண்டும்.!
குரங்கென்று எண்ணாதே..
நீ.. பேச வேண்டும்..!
குணத்தாலே உயர்ந்தவன்
யார்? ஊர் பேச வேண்டும்.!
ஊர் பேச வேண்டும்.!


என்னைப் போல் நீ யென்று..
இங்கு சிலர் திட்ட..
உன்னைப் போல் நானென்று
மரத்தில் எனைக் கட்ட..
மண்ணிலே உன் முன்னே
நானிங்குப் பிறந்தேன்.!
மனிதனே குரங்கானாய் கதை
சொல்ல மறந்தேன்.!

கைப்பேசி காதிலே வைத்து
நான் பேச.. காதலியே
பேசுகிறாள் என நீயும் பேசு..
பொய்ப்பேசித் திரிகின்ற
குரங்கில்லைத் தம்பி.!
புத்தியிலே எனை வெல்ல
முடியாது தம்பி.!

மனம் ஒரு குரங்கென்று
சொல்வாயே இங்கு.
இனம் சாதி பிரிவுகள்
எமக்கில்லை இங்கு..
மரம் விட்டு மரம் தாவி
வாழுகிறோம் நன்கு..
மத வெறியில் மனிதா நான்
ஊதவில்லை சங்கு.!

குரங்கு கையில் பூமாலை
மனிதன் கையில் பேசி..
மனிதனைப் போல்
குரங்கில்லை நன்றாக
யோசி.! குரங்கில் இருந்து
மனிதன்! இதைப் புத்தகத்தில்
வாசி.! மனிதனுக்கு என்றும்
உண்டு குரங்கின் நல்லாசி.!

**வே.கல்யாண்குமார்.**




## மதுரை மாநகரம்

உலகப்பொது மறையாம்
ஒப்பற்ற திருக்குறள்
உலகிற்கு அளித்த பெருமை
பெற்ற மதுரை
செம்மொழி தமிழ்மொழி
அழியாமல் இருக்க
சங்கம் வைத்து தமிழ்
வளர்த்த மதுரை

சதுரம் சதுரமாக வடிவமைத்த
வடிவான நகரம்
சிறப்புகள் பல
தன்னகத்தே கொண்ட
மதுரை மல்லிகை
மலரை மலையென
தினமும் இன்றும்
மேலை நாடுகளுக்கு
ஏற்றுமதி செய்திடும்
மதுரை

தாயுக்கு அடுத்தபடியாக
மதுரை மக்கள் மதிப்பது
தாய்மண்ணான அழகிய
நகரம் மதுரை
'சிலப்பதிகாரம் முதல்
கணிப்பொறி' காலம் வரை
சிங்கார மதுரைக்கு
'தூங்காநகரம் ' என்று பெயர்

சூடான இட்லியும் சுவையான
சட்னிகளும் சூரியன்
உறங்கும் நேரத்திலும்
கிடைக்கும் உலகில்
மதுரைக்கு இணை
எதுவுமில்லை
உலகம் உள்ளவரை
மதுரைக்கு அழிவில்லை!



**கவிஞர்.இரா.இரவி**

தமிழ்நாடு இ பேப்பர்.காம்






























| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| பங்குனி மாதம்- 07 | 21.03.2026 சனிக்கிழமை | விநாயகர் வழிபாடு,பூர்வாங்க பூஜைகள் |
| பங்குனி மாதம்- 08 | 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை | அஸ்திர தேவர் பூஜை, துவஜாரோகணம்(கொடியேற்றம்) |
| பங்குனி மாதம்- 09 | 23.03.2026 திங்கட்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 10 | 24.03.2026 செவ்வாய்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 11 | 25.03.2026 புதன்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 12 | 26.03.2026 வியாழக்கிழமை | மயில்வாகன கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 13 | 27.03.2026 வெள்ளிக்கிழமை | முத்து பிரபை கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 14 | 28.03.2026 சனிக்கிழமை | இந்திர விமான கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 15 | 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை | திருக்கல்யாணம் இரவு 9.00 மணிக்கு |
| பங்குனி மாதம் - 16 | 30.03.2026 திங்கட்கிழமை | ரதோற்சவம் (மாலை 5.00 மணிக்கு திருத்தேரோட்டம்) |
| பங்குனி மாதம் - 17 | 31.03.2026 செவ்வாய்கிழமை | பங்குனி உத்திரம், தீர்த்த வாரி, த்வஜ அவரோகணம்(கொடி இறக்கம்) |
| பங்குனி மாதம் - 18 | 01.04.2026 புதன்கிழமை | 11-ம் நாள் விடையாற்றி உற்சவம் |






Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு
ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி
சென்னை
Contact
9790979539



PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627


கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots *Flats *House *Villa *Bungalows
*Farm Land *Ware Houses *Factory Sites *Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com



GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009











Get Free Jobs Alert on Your
**WhatsApp**
Register Yourself on our
**8122664699**
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs







# WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

**7540003588**




# செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம்
கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை
செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539

















# பல்சுவை களஞ்சியம்



# "காய்கறி" குறள்

"தக்காளி எப்போதும் உட்கொண்டால் தரணியில்
எக்காலும் நோயில்லை காண்."

---

"எலுமிச்சை புளித்தாலும் எடுத்ததை உட்கொள்வீர்
எலும்புக்கு வலுசேர்க்கு மென்றும்."

---

"வெங்காயம் இல்லாச் சாம்பார் தங்காதே
எஞ்ஞான்றும் நாவில் ருசி."

---

"பொல்லாத பேரையும் நல்லவ ராக்குமே
புடலங்காய் போற்றிச் சுவை."

---

"தள்ளாத வயதிலும் உள்ளே தள்ளுவாய்
முள்ளங்கி மூன்றினைத் தான்."

---

"வெண்டைக்காய் இருக்கையில் சுண்டை எந்நாளும்
தொண்டையில் இறங்காது காண்."

---

"வள்ளிக் கிழங்குண்ணார் வையத்தில் வாழ்ந்தும்
வாழாதார் என்பது வழக்கு."

---

"கத்தரி உண்பாரே உண்பார் மற்றெல்லாம்
இத்தரையில பித்தருக்குச் சமமெனக்கொள்."

---

"பூசணியைச் சேர்த்தாரே புண்ணியர் பூவுலகில்
புகழோடு வாழ்வார் அவர்."

---

காய்கறியைத் தின்னாதார் வாழ்க்கை எப்போதும்
நோய்நொடியில் வீழ்ந்து கெடும்."

---

"முருங்கைக்காய் ருசித்தாரே ருசித்தார் மற்றோரெல்லாம்
வெறுங்கையில் முழம் போடுவர்."

---

"காரிருளில் கண் தெரிய வேண்டுமெனில்
பாரிலுள்ள கரிசலாங் கண்ணியைச்சேர்."

---




"இரும்பைப் போல் இதயமது வேண்டுமெனில்
கரும்பைப் போய் விரும்பிச்சுவை."

---

"உரிக்க உரிக்கத் தோல்தான் என்றாலும்
செரிக்குமோ வெங்காயம் உண்ணாவிடில்."

---

"பறித்தவுடன் உண்ணுவீர் பரங்கியை எப்போதும்
பலனது வேண்டு மெனில்."

---

"பாகற்காய் கசக்கும் என்பதால் சீண்டாதார்
சோகத்தில் சேர்ந்து விழும்."

---

"வெல்லத்தில் இரும்புண்டு ஆகையினால் சாப்பாட்டில்
ஒருதுண்டு சேர்த்துச்சமை"

---

"வாழ்வதனால் ஆய பயனென் கொல்
வாழைக்காய் தாழ்வேனென எண்ணு பவர்."

---

"கேரட்டைச் சேர்க்காத சமையல் கிணற்றுக்குள்
தேரை வாழ்ந்த கதை"

---

"பீடுநடை போடுதல் வேண்டுமெனின் தினமும்
பீட்ரூட்டை உணவில் சமை."

---

"கொத்தவரை பீன்ஸ் முட்டைகோஸ் இவையெல்லாம்
சத்தெனவே சரியாய் உணர்."

---

"கறிவேப்பிலை மல்லி கடுகு சேராதோர்
சொறி பிடித்தோடுவார் காண்."

---

"பொன்னிற மேனி வேண்டுமெனில் நீ அந்த
பொன்னாங் கண்ணியைச் சேர்."

---

"கண் இருந்தும் குருடரே காசினியில் காய்கறியை
உண்ணாதவர்."




# மீம்ஸ்









# விடுகதை

| | |
|---|---|
| நாலு மூளைக்கிணறு, நாகரத்தினக்கிணறு, எட்டிப் பார்த்தால் சொட்டுத தண்ணீர் இல்லை அது என்ன? | அச்சு வெல்லம் |
| அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும். அது என்ன? | மிருதங்கம் |
| கை பட்டால் சிணுங்கும் கன்னிப் பெண், கூச்சல் போட்டு கதவை திறக்க வைப்பவள் அவள் யார்? | காலிங்பெல் |
| பகலிலே வெறுங்காடு, இரவெல்லாம் பூக்காடு. அது என்ன? | வானம் |

# உறவுகள் மேம்பட!!!

குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும். ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்கவும்:

* நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விட்டுவிடுங்கள்.
* அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசித் கொண்டேயிருப்பதை விட்டு விடுங்கள்
* எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள். விட்டுக்கொடுங்கள்
* சிலநேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.
* நீங்கள் சொன்னதே சரி. செய்ததே சரி என்று வாதாடாதீர்கள்.
* பறந்த மனப்பான்மை கொள்ளுங்கள்.
*உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் நிறுத்திவிடுங்கள்.
* மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைக்காதீர்கள்
* தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
* எல்லா விஷயங்களையும் எல்லலோரிடமும் சொல்லாதீர்கள்.
* கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
* அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்
* உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இருக்காதீர்கள்.
* மற்றவர்களுக்குரிய மரியாதை கொடுங்கள்.
* இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்துங்கள்.
* புன்முறுவல் காட்டவும் ,அன்புச் சொற்களை சொல்லவும் நேரம் ஒதுக்குங்கள். அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
* பிரச்சனைகள் ஏற்படும்போது நீங்கள் முதலில் இறங்கி வாருங்கள்.





# ஜோக்ஸ்

"சார் உங்க பொண்ணு என் மேலே பைத்தியமா இருக்கா, அவளையே நான். . .

(அப்பா குறுக்கிட்டு)

"அவ ஒரு சரியான பைத்தியம்னா"

"அதான் சார் என் மேல பைத்தியம்"

"அதான் எப்படீன்னு புரியல"

---

அம்மா : "ஏண்டீ டெய்லி வேற வேற பையன்களோட சுத்தரியே உனக்கு ஒரு கல்யாணம் நடக்க வேண்டாமா?"
மகள் : "ஒரு" கல்யாணம் நடக்காதும்மா.



---

பெண் : "நான் நல்லாயிருக்கேன்னு பீட்டர் சொல்றான், ஆனா கோரமா இருக்கேன்னு ஜோசப் சொல்றான், நீ என்ன சொல்ற?"
ஆண் : "இரண்டுமா இருக்க. அதாவது ‘நல்லகோரமா’ இருக்க"

---

பையன் : "நான் பெரிய பணக்காரன் கிடையாது, அல்லது என் நண்பன் பிரண்ட் கோபி மாதிரி என்கிட்ட பெரிய காரோ வீடோ கிடையாது, ஆனா நான் உன்ன லவ் பண்றேன்"

பெண் : "நானும்தான், ஆனா உங்க நண்பர் கோபின்னு யாரையோ சொன்னீயே ‘அவர்’ எங்க இருக்கார்?"



# சமையல் அறை ஸ்பெஷல்



## பயனுள்ள சமையல் டிப்ஸ் உங்களுக்காக...

* கேழ்வரகு, கம்பு, கோதுமை தோசை செய்யும்போது அதில் சிறிதளவு அரிசி மாவு கலந்தால் மொறுமொறுப்புடன் இருக்கும்.

* தேங்காய் சட்னி செய்யும் போது அதில் ஒன்று அல்லது இரண்டு பல் பூண்டு சேர்த்து அரைத்தால் சட்னி சுவையாக இருக்கும்.

* சப்பாத்தி மாவு பிசையும்போது அதில் சிறிது வெண்ணெய் அல்லது நெய் சேர்த்து பிசைந்தால் மிருதுவாக இருக்கும்.

* ரசகுல்லா அல்லது ரசமலாய் செய்யும்போது பால் உருண்டையை உள்ளங்கையில் வைத்து நன்கு தேய்த்து பிசைந்தால் மிருதுவாக இருக்கும்.



* எந்த ஒரு பொரியல் செய்யும்போதும் அதில் சிறிதளவு சீரகம் சேர்த்தால் சுவையாக இருக்கும்.

* எந்த காய்கறி வைத்து புளிக்குழம்பு செய்தாலும் அந்த காய்கறியை எண்ணெய்யில் நன்கு வதக்கிய பின்பு சேர்த்தால் காய்கறி மிகவும் மிருதுவாகவும் சுவையாகவும் இருக்கும்.

* தோசை மாவு இல்லாத சமயத்தில் மிக்சி ஜாரில், தேவைக்கேற்ப அரிசி மாவு, கோதுமாவு சேர்த்து நீர் கலந்து அரைத்து எடுத்தால் உடனடி மாவு தயார் இதனுடன் கேரட், வெங்காயம், தக்காளி, பன்னீர், பீட்ரூட் சேர்த்தால் விதவிதமான தோசை தயார்.

## கறிவேப்பிலை முதல் முருங்கை இலை வரை...

தனியா, கடலை பருப்பு, மிளகாய், பெருங்காயம் வறுத்து பொடி செய்து பொரியல், கூட்டு எல்லாவற்றிலும் உபயோகிக்கலாம்.

* கறிவேப்பிலையை பொடியாக அரைத்து ரசம், சாம்பார் இறக்கும் போது ஒரு டீஸ்பூன் போட்டால் வாசனையாக இருக்கும். கறிவேப்பிலையை தூக்கி எறியாமல் சாப்பிடலாம்.

* வாரத்தில் ஒரு நாள் வேப்பிலை, சுண்டைக்காய், கண்ட திப்பிலி அரிசி திப்பிலி, தனியா, மிளகு ஆகியவற்றை சிறிதளவு வறுத்து பொடி செய்து சாப்பிட்டால் வாயு தொல்லை, பித்தம் குறையும்.

* வெந்தயம் வறுத்து பொடி செய்து



வைத்துக்கொள்ளவும். சாம்பார் கொதிக்கும்போது போட்டால் வாசனையாக இருக்கும். மோரில் ஒரு டிஸ்பூன் போட்டு குடித்தால் மலச்சிக்கல் வராது.

* தனியா, கடலை பருப்பு, மிளகாய், பெருங்காயம் வறுத்து பொடி செய்து பொரியல், கூட்டு எல்லாவற்றிலும் உபயோகிக்கலாம். ருசியாக இருக்கும்.

* ஓமம், சீரகம், சுக்கு வறுத்து பொடி செய்து தினமும் கொதிக்க வைத்து குடித்தால் அஜீரண கோளாறு இருக்காது.

* முருங்கை இலைகளை கொதிக்க வைத்து அந்த நீரில் ஒரு டீஸ்பூன் நல்லெண்ணெய் விட்டு குடிப்பது எலும்புக்கு பலம் சேர்க்கும்.

## நெய் வகைகளும்... அவற்றின் நன்மைகளும்...

இன்றைக்கு இந்தியாவில் பெருமளவில் பாலுக்காக வளர்க்கப்படும் பசுக்கள் கலப்பின வகையை சேர்ந்தவை ஆகும். இவை அதிக அளவில் பால் தருவதால் வணிக ரீதியாக விரும்பி வளர்க்கப்படுகின்றன. இந்த பசுக்கள் தரும் பாலில் இருந்து தயாரிக்கப்படும் நெய் ஏ-1 வகை என்று அழைக்கப்படுகிறது. அதே வேளையில், பாரம்பரிய நாட்டு பசு இனங்கள் குறைவாகவே பால் தருகின்றன. இந்த பாலில் இருந்து தயாரிக்கப்படும் நெய் ஏ-2 வகை என்று அழைக்கப்படுகிறது.

இந்த ஏ-2 வகை நெய் இன்றைக்கு உலகின் பல நாடுகளில் விரும்பி வாங்கப்படுகிறது. இதற்கு காரணம், நாட்டு பசுக்களின் நெய் பீட்டா-கேசின் என்ற புரதத்தை கொண்டுள்ளது. இது சாதாரண கலப்பின பசுக்கள் தரும் ஏ-1 வகை நெய்யை விட ருசியானது. பல்வேறு மருத்துவ குணங்கள் கொண்டதாக நம்பப்படுகிறது. இதன் காரணமாக, சித்தா, ஆயுர்வேத மருத்துவத்திலும் இது அதிகம் பயன்படுத்தப்படுகிறது.



ஏ-2 வகை நெய்யில் உள்ள ஒருவித அமிலம் குடல் ஆரோக்கியத்தை ஊக்குவிக்கிறது, குடலின் இயக்கத்தை சீராக்குகிறது. மேலும், இதில் வைட்டமின்-ஏ, டி, இ, கே மற்றும் ஒமேகா-3 கொழுப்புகள் உள்ளன. இதனால், உடலை வலுப்படுத்தும். மேலும், உடலில் தோல் அழகை மெருகேற்றி முடி வளர்ச்சியை ஊக்குவிப்பதாகவும் கண்டறியப்பட்டு உள்ளது.

ஏ-2 வகை நெய் என்பது உடலில் நோய்க்கு காரணமாக கருதப்படும் வாத, பித்த, கபத்தை சமநிலைப்படுத்தி குணப்படுத்தும் என்று சித்த மருத்துவம் கூறுகிறது. இந்த நெய் பல்வேறு நன்மைகளை அளித்தாலும், அளவுக்கு அதிகமாக உண்ணக்கூடாது என்றும் கூறப்படுகிறது.

## உடல் ஆரோக்கியத்துக்கு உகந்த இடியாப்பம்...

சங்க காலத்திலேயே இடியாப்பம் இருந்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. 'சூடாமணி நிகண்'டில் இது பற்றிய குறிப்பு இருக்கிறது. 'இடி' என்றால் நெல்லில் இருந்து தயாராகும் மாவு, அதில் செய்யப்படும் அப்பம் என்பது இதன் பொருள். முதலாம் நூற்றாண்டிலேயே இடியாப்பம் இந்தியாவில் இருந்தது என்று வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். தமிழில் 'நூல்புட்டு', கன்னடத்தில் 'நூபுட்', மலேஷியாவில் 'புட்டுமாயம்'... என அழைக்கப்படும் இடியாப்பம் இலங்கை வரை பிரபலமான ஓர் உணவு. கடலோரப் பகுதிகளிலும், நகரத் தெருக்களிலும் தெரு வியாபாரிகள் கூவிக்கூவி விற்ற அரிய உணவு. 'பெரும்பானாற்றுப்படை', 'சிலப்பதிகாரம்', 'மதுரைக்காஞ்சி' போன்ற தமிழ் இலக்கியங்களில் எல்லாம் இதைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

சுத்தமான அரிசி மாவில் உப்பு, சிறிது எண்ணெய் சேர்த்து வேக வைத்து, இடியாப்ப அச்சில் பிழிந்து எடுத்து அவித்தால் இடியாப்பம்! தேங்காய்ப் பால், பால், மீன் குழம்பு, பாயா இவற்றுடன் சாப்பிட அபாரச் சுவை! கேரளாவில் கொண்டைக்கடலையை கிரேவியாக்கி, அதனுடன் சேர்த்துச் சாப்பிடும் பழக்கம் உண்டு.



இது, எளிய, ஆரோக்கியமான காலை உணவு. இடியாப்பத்தை உதிர்த்து, உப்புமாவாக்கலாம். நம் ஊரில் 'சேவை' என்று சொல்வார்கள். இதைக்கொண்டு எலுமிச்சை, தக்காளி, புளி என விதவிதமாக 'சேவை' செய்து ருசிக்கலாம். இடியாப்பத்தில் பிரியாணி செய்பவர்கள்கூட உண்டு. தினை, வரகரிசி, சோளம், கம்பு, கேழ்வரகு என சிறுதானியங்களில் செய்து ருசி பார்க்கும் அளவுக்கு இடியாப்பத்தின் மகத்துவம் இன்றைக்கு அனைவரும் உணர்ந்த ஒன்றாகிவிட்டது. ஒரு இடியாப்பத்தில் சராசரியாக 45 கலோரிகள், 0.27 கிராம் கொழுப்பு, 9.68 கிராம் கார்போஹைட்ரேட், 0.72 கிராம் புரோட்டீன் ஆகியவை உள்ளன. ஆயுர்வேத மருத்துவமுறையில், இது வாதத்தையும் பித்தத்தையும் சமநிலையில் வைத்திருக்கும் என்கிறார்கள். இதை இளஞ்சூடாக சாப்பிடுவது நல்லது. இதில் நமக்குத் தேவையான கார்போஹைட்ரேட், புரோட்டீன், இரும்புச்சத்து மற்றும் கொழுப்புச்சத்து அனைத்தும் உள்ளன. எனவே, உடலைக் கட்டுக்கோப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவும். எண்ணெய் சேர்க்காத, ஆவியில் வேகவைத்துச் செய்யப்படுவது என்பதால், வயிற்றுக்கு எந்தப் பிரச்சனையையும் ஏற்படுத்தாது. நோய்வாய்ப்பட்டவர்களுக்கு, நோயின் தன்மைக்கேற்ப இடியாப்பம் செய்து, மற்றவற்றுடன் கலந்து கொடுக்கலாம். குழந்தைகளுக்கு அடிக்கடி கொடுக்க ஏற்ற உணவு.

## சத்துக்கள் நிறைந்த சுவையான தேங்காய் பால் சாதம்



நம் பாரம்பரிய உணவுகளில் புளியோதரை, லெமன்சாதம், தயிர்சாதம் போலவே தேங்காய் சாதமும் முக்கிய இடம் பிடிக்கிறது. உணவுக்கு சுவை மட்டுமின்றி, உடலுக்கு ஆரோக்கியம் சேர்க்கும் வகையில் தேங்காய் சாதம் செய்து அசத்த முடியும். இதனால் சத்துக்கள் முழுவதுமாக நமக்கு கிடைக்கும்.

குழம்பு மற்றும் பொரியல் வைக்கும் பொழுது காய்கறிகளில் உள்ள சத்துக்கள் அனைத்தும் குழந்தைகளுக்கு கிடைக்கும். ஆனால் நாம் தயிர் சாதம், லெமன் சாதம் போன்ற சாத வகைகள் செய்து கொடுக்கும் பொழுது அதில் சுவை மட்டுமே அதிகமாக இருக்குமே தவிர குழந்தைகளுக்கு தேவையான சத்துக்கள் குறைவாகவே கிடைக்கும்.

ஆனால் குழந்தைகள் அதைக் கேட்டு அடம்பிடிக்கும் பொழுது, அதனை எப்படி ஆரோக்கியமாக குழந்தைகளுக்கு செய்து கொடுக்க வேண்டும் என்பதை தான் நாம் பார்க்க வேண்டும். அப்படி ஒரு ஹெல்தியான ரெசிபி தான் இந்த தேங்காய் பால் சாதம்.

தேங்காய்ப்பால் என்பது இயற்கையிலேயே எண்ணற்ற சத்துக்களை உள்ளடக்கியது. அதனுடன் ஆரோக்கியமான காய்கறிகள் மற்றும் மசாலா பொருட்களை சேர்ந்து கொடுக்கும்பொழுது ஆரோக்கியமான மதிய உணவு அல்லது காலை உணவாக இந்த தேங்காய் பால் சாதம் இருக்கும்.

தேங்காய் பால் சாதத்தில் வைட்டமின்கள் மற்றும் மினரல்ஸ் நிறைந்துள்ளன. குறிப்பாக சொல்லப் போனால் வைட்டமின் சி, போலேட், இரும்பு சத்து, பொட்டாசியம், மெக்னீசியம் மற்றும் மாங்கனிஸ் ஆகிய சத்துக்கள் நிறைந்துள்ளன.

தேங்காய் பாலில் எம்.சி.டி. எனப்படும் நல்ல கொழுப்புகள் நிறைந்துள்ளன. இந்த கொழுப்பானது உடனடியாக கரைந்து உடலுக்கு தேவையான எனர்ஜியை கொடுக்க வல்லது. குறிப்பாக மூளை வளர்ச்சிக்கு இந்த கொழுப்பு மிகவும் அவசியமாகும்.

பசும்பால் ஒவ்வாமை உள்ள குழந்தைகளுக்கு தேங்காய்ப்பால் என்பது சிறந்த மாற்றாக இருக்கும். பசும்பாலில் உள்ள சத்துக்களை போலவே இதிலும் சத்துக்கள் அதிகம் என்பதால் பசும்பாலுக்கு பதிலாக இதனை குழந்தைகள் எடுத்துக் கொள்ளலாம்.

இயற்கையிலேயே காணப்படும் ஆன்ட்டி ஆக்ஸி டென்ட்களான வைட்டமின் சி, வைட்டமின் ஈ மற்றும் செலினியம் நிறைந்துள்ளன. இவை உடலில் செல்கள் சிதை உடையாமல் பாதுகாக்கின்றன.

தேங்காய் பாலில் நீர் சத்துக்கள் அதிகம் என்பதால் உடலில் நீர்ச்சத்து குறையாமல் பார்த்துக் கொள்கின்றது.

## சிலிண்டர் தட்டுப்பாடு- விறகு அடுப்பில் சமைப்பதால் கிடைக்கும் நன்மைகள்

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் நடத்தி வரும் போர் காரணமாக கியாஸ் வரத்து கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக ஓட்டல்களுக்கு விநியோகிக்கப்படும் வணிக சிலிண்டர்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் ஓட்டல்கள், டீக்கடைகள் மற்றும் முக்கிய உணவு விடுதிகளில் இன்னும் ஓரிரு நாட்களுக்கு மட்டுமே கியாஸ் சிலிண்டர்கள் பயன்பாட்டில் இருப்பதாகவும் இதே நிலை நீடித்தால் ஓட்டல்கள் மூடப்படும் அபாயம் ஏற்படும் என்று கூறப்படுகிறது.

மேலும், கியாஸ் சிலிண்டர் சப்ளை நிறுத்தப்பட்டதால் பல ஓட்டல்கள் விறகு அடுப்புக்கு மாறி வருகிறது. கியால் சிலிண்டர் தட்டுப்பாட்டால் சமூக வலைத்தளங்களில் பல்வேறு பதிவுகள் வைரலாகி வருகிறது. அதன்படி, உலகின் பல பகுதிகளிலும் இயற்கை கழிவுகளில் இருந்து எரிவாயுவை இலவசமாக உற்பத்தி செய்து கொள்ள உதவும் 'ஹோம் பயோ கியாஸ்' அமைப்பை உருவாக்கி வருகின்றனர். இந்த ஹோம் பயோ கியாஸ் என்பது வீடுகளில் மீதமாகும் இயற்கை மற்றும் உணவுக் கழிவுகளில் இருந்து உயிரி எரிவாயுவை உருவாக்குவது ஆகும்.


காய்கறி தோல் உள்பட சமையலறை கழிவுகள் அனைத்தையும் சிறிய துண்டுகளாக வெட்டி, தண்ணீர் கலந்து போட்டால் 7 முதல் 10 நாட்களில் மக்கி மீத்தேன் வாயு வெளியாகும். இந்த வாயுவை குழாய் மூலம் அடுப்புக்கு இணைத்து, எரிவாயுவாக்கி சமைக்கலாம்.

இதனிடையே, விறகு அடுப்பில் சமைப்பது மற்றும் அதன் நன்மைகள் குறித்தும் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. அது குறித்து பார்ப்போம்...

விறகு அடுப்பில் சமைத்து உண்பது, தற்கால நவீன அடுப்புகளை விட அதிக சுவையையும் ஆரோக்கியத்தையும் தரக்கூடியது.

**கூடுதல் சுவை மற்றும் மணம்:** விறகு எரியும் போது வெளியாகும் லேசான புகைக்கரி, உணவிற்கு ஒரு தனித்துவமான சுவையையும் வாசனையையும் (Smoky flavor) சேர்க்கிறது. குறிப்பாக மண் பானைகளில் சமைக்கும் போது இந்தச் சுவை இன்னும் அதிகமாகும்.

**சத்துக்கள் பாதுகாப்பு:** விறகு அடுப்பில் வெப்பம் சீராகவும் மெதுவாகவும் பரவுவதால், காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகளில் உள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் சிதையாமல் பாதுகாக்கப்படுகின்றன. குறிப்பாக அதிக வெப்பத்தில் அழியக்கூடிய வைட்டமின் C போன்ற சத்துக்கள் இதில் நன்றாகத் தக்கவைக்கப்படுகின்றன.



**உடல் ஆரோக்கியம்:** விறகு அடுப்பு சமையல் மெதுவாக (Slow cooking) நடப்பதால், உணவு எளிதில் செரிமானமாகும் தன்மையைப் பெறுகிறது. இது வயிற்று உபாதைகளைக் குறைக்க உதவுகிறது.

பொருளாதாரச் சிக்கனம்: எரிவாயு (Gas) அல்லது மின்சார அடுப்புகளை விட விறகு அடுப்பு செலவு குறைவானது. கிராமப்புறங்களில் எளிதாகக் கிடைக்கும் சுள்ளிகள் மற்றும் விறகுகளைக் கொண்டு சமைக்கலாம்.

**சுற்றுச்சூழல் நட்பு:** விறகு ஒரு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலமாகும். முறையாக உலர்த்தப்பட்ட விறகுகளைப் பயன்படுத்துவது சுற்றுச்சூழலுக்குப் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது.

**நீண்ட நேரம் சூடாக இருத்தல்:** விறகு அடுப்பில் சமைத்த உணவுகள் நீண்ட நேரம் கெடாமலும், சூடாகவும் இருக்கும். மேலும், அடுப்பு அணைந்த பிறகும் அதில் இருக்கும் தணல் உணவைச் சூடாக வைத்திருக்க உதவும்.

**விறகு அடுப்பில் சமைப்பதால் ஏற்படும் தீமைகள்:**

விறகு அடுப்பில் அடிக்கடி சமைப்பதால் ஆஸ்துமா வர வாய்ப்பு உள்ளது. மேலும், விறகு அடுப்பில் வரும் புகையை நீண்ட காலம் சுவாசித்தால் சுவாச கோளாறுகள், நுரையீரல் பிரச்சனைகள் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.


இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No



## கோவிந்தா கோஷத்துடன் வலம் வந்த தேர்



**வந்தவாசி, மார்ச் 31:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ ரங்கநாயகி சமேத ரங்கநாதப் பெருமாள் கோவிலில் நேற்று பங்குனி மாத பிரம்மோற்சவ விழாவின் ஏழாவது நாள் தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு கோவிந்தா கோவிந்தா என்ற கோஷத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்தனர். மேலும் ஆங்காங்கே பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் மோர் வழங்கப்பட்டது. முன்னதாக உற்சவ மூர்த்திகளுக்கு கோவிலில் விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது.

## ஸ்ரீராம நவமியை முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில்





**சேலம்,மார்ச் 31:**

சேலம் மாவட்டம் ஆத்தூர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு மூலவருக்கும், உற்சவர்க்கும், சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து,வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி உற்சவர் ஸ்ரீ ராமன் சீதாதேவி பூஜை சிவ பூஜை செய்வதுபோல் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் ஸ்ரீ ராமர் சீதாதேவி சிவ பூஜையில் வேண்டி அருள் பெற்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## செய்யாறில் அதிமுக வேட்பாளர் அறிமுகக் கூட்டம்!



**செய்யாறு, மார்ச் 31:**

செய்யாறு சட்டசபை தொகுதிக்கான அ.தி.மு.க., வேட்பாளர் முக்கூர் சுப்பிரமணியனின் அறிமுகக் கூட்டம் செய்யாறு நகரில் நேற்று நடந்தது. அ.தி.மு.க., மற்றும் இதன் கூட்டணி கட்சிகளை சேர்ந்த பொறுப்பாளர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டு வாக்குகளை சேகரித்து, வேட்பாளர் முக்கூர் சுப்ரமணியனை பெருவாரியான ஓட்டுக்கள் வித்தியாசத்தில் ஜெயிக்க வைக்க வேண்டும் என, வாழ்த்தி பேசினர்.




## பல்லவோத்ஸவம்



ஸ்ரீ மந்நாதன் (ஸ்ரீ ரங்கநாதர்) பல்லவோத்வம்-3 பெரியமாடவீதி புறப்பாடு @ Triplicane partha sarathi perumal Kovil Chennai

## லலித் கலா அகாடெமியில், ஸ்ரீ தர்ஷினி கலைக்கூடத்தின் 21ஆம் ஆண்டு தேசிய அளவிலான ஓவியக் கண்காட்சி



**சென்னை, மார்ச் 31:**

சென்னையில் உள்ள லலித் கலா அகாடெமியில், ஸ்ரீ தர்ஷினி கலைக்கூடத்தின் 21ஆம் ஆண்டு தேசிய அளவிலான ஓவியக் கண்காட்சி நேற்று (மார்ச் 29, 2026) சிறப்பாக தொடங்கியது.

இந்தக் கண்காட்சியில் நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 260 ஓவியர்களின் மொத்தம் 350 ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வோவியங்களின் மொத்த மதிப்பு ரூ. 2 கோடியே 45 லட்சம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரபு ஓவியங்கள், உயிர் ஓவியங்கள், நவீன ஓவியங்கள் உள்ளிட்ட பல்வேறு வகைகளில் நெய் வண்ண ஓவியம், நீர் வண்ண ஓவியம், கலவை ஓவியங்கள், தஞ்சாவூர் மற்றும் மைசூர் ஓவியங்கள், பழங்குடியின ஓவியங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. இதனுடன் காகித சிற்பங்கள், சுதை சிற்பங்கள், உலோகம், மரம், கல் ஆகியவற்றில் செய்யப்பட்ட புடைப்பு சிற்பங்கள் மற்றும் பீங்கான் பொம்மைகள் உள்ளிட்ட பன்முகக் கலைப் படைப்புகளும் பார்வையாளர்களை கவர்கின்றன.

இந்தக் கண்காட்சியை முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. ரகுபதி, லலித் கலா அகாடெமி மண்டல செயலாளர் திரு. சோவன் குமார், ராயபுரம் சுதா மருத்துவமனை நிறுவனர் டாக்டர் பாண்டியராஜ் மற்றும் சர்வதேச கைப்பந்து நடுவர் திரு. நந்தகோபால் ஆகியோர் இணைந்து திறந்து வைத்து வாழ்த்தினர்.

மேலும், ஸ்ரீ தர்ஷினி கலைக்கூடத்தின் நிறுவனர் திரு. தர்மலிங்கம் கலந்து கொண்டு நன்றி உரையாற்றினார். இந்தக் கண்காட்சி வரும் ஏப்ரல் 4ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. கண்காட்சி காலத்தில் கலைப்பட்டறைகள், கருத்தரங்குகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. இறுதி நாளான ஏப்ரல் 4ஆம் தேதி விருது வழங்கும் விழாவும் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் ஓவியர்கள், கலை ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட 450க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு ஓவியங்களை பார்வையிட்டனர்.

கலை விற்பனையாளர்கள், மாணவர்கள், தொழில்முறை கலைஞர்கள், முறை சாரா ஓவியர்கள் மற்றும் பொதுப் பார்வையாளர்கள் அனைவருக்கும் இக்கண்காட்சி ஒரு சிறப்பான கலை விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## செய்யாறு தொகுதியில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் தமிழ்ச்செல்வன் மனுத்தாக்கல் !



**செய்யாறு, மார்ச் 31:**

செய்யாறு சட்டசபை தொகுதியில், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் தமிழ்ச்செல்வன் தேர்தல் நடத்தும் அலுவலரான அம்பிகா ஜெயினிடம் நேற்று வேட்பு மனுத் தாக்கல் செய்தார். செய்யாறு சட்டசபை தொகுதிக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் பணி நேற்று தொடங்கியது.

செய்யாறு சட்டசபை தொகுதியில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சியை சேர்ந்த வேட்பாளர் தமிழ்ச்செல்வன் வயது 25. இவர், செய்யாறு சட்டசபை தொகுதிக்குட்பட்ட குத்தனூர் கிராமத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தை பெயர் முருகன். விவசாய கூலித் தொழில் செய்து வருகிறார்.

தமிழ்செல்வன் பி.ஏ., பட்டமும், எல்.எல்.பி., படித்துவிட்டு வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். நேற்று செய்யாறு பஸ் நிலையத்தில் இருந்து, 10 கூத்துக் கலைஞர்கள் வேடமிட்டு, நடனமாடியவாறும் மேள தாளங்கள் முழங்க வேட்பாளர் தமிழ்ச்செல்வன், நாம் தமிழர் கட்சியின் தொகுதி மண்டல செயலாளர் சுகுமார் தலைமையில், தனது வேட்பு மனுவை, சப் - கலெக்டர் அலுவலகத்தில் உள்ள, தேர்தல் நடத்தும் அலுவலரும் ,சப் - கலெக்டருமான அம்பிகா ஜெயினிடம் தாக்கல் செய்தார். வேட்பாளருடன், நாம் தமிழர் கட்சியை சேர்ந்த இளைஞர்பாசறை மாநில ஒருங்கிணைப் பாளர்களான ராஜசேகர், ராகவன், கதிரவன், பஞ்சமூர்த்தி ஆனந்தராஜ் மற்றும் மாநில சுற்றுச்சூழல் பாசறை, தகவல் தொழில்நுட்ப பாசறை பொறுப்பாளர்களும், தொகுதி தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள், தொண்டர்கள் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் உடன் சென்றனர். முன்னதாக வேட்பாளர் தமிழ்ச்செல்வன் இங்குள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

## செய்யாறு தொகுதி தி.மு.க., வேட்பாளர் ஜோதி பொறுப்பாளர்களின் வீடுகளுக்கு சென்று ஆலோசனை !



**செய்யாறு, மார்ச் 31 :**

செய்யாறு சட்டசபை தொகுதிக்கு தி.மு.க., சார்பில் களம் இறக்கப்பட்டுள்ள 'சிட்டிங்' எம்.எல்.ஏ.,வும் வேட்பாளருமான ஜோதி நேற்று காலை முதல் - மாலை வரை தி.மு.க., பொறுப்பாளர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று வாழ்த்து பெற்று- ஆலோசனை நடத்தினார்.

செய்யாறு சட்டசபை தொகுதியில் தி.மு.க., வேட்பாளராக 'சிட்டிங்' எம்.எல்.ஏ., ஜோதி களம் இறக்கப்பட்டுள்ளார். இவர், நேற்று தங்களது கட்சியை சேர்ந்த ஒன்றிய செயலாளர்கள், மாவட்ட பொறுப்பாளர்கள், மூத்த பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் ஆகியோரின் வீடுகளுக்கு நேரில் சென்று அவர்களிடம் வாழ்த்து பெற்று - ஓட்டுக்கள் சேகரிப்பது குறித்து ஆலோசனை நடத்தினார். தன்னை மீண்டும் வெற்றி பெறச் செய்யுமாறு சால்வை அணிவித்து, இனிப்பு வழங்கியும் கேட்டுக் கொண்டார்.

இந்த வரிசையில், வெம்பாக்கம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கிழக்கு ஒன்றிய செயலாளர் என். சங்கர், மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் ஏளச்சேரி எம்.கே.கார்த்திகேயன், வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றிய குழு முன்னாள் தலைவர் மாமண்டூர் ராஜ், மத்திய ஒன்றிய செயலாளர் ஜே.சி.கே. சீனுவாசன், வெம்பாக்கம் மேற்கு ஒன்றிய செயலாளர் தினகரன் ஆகியோரின் வீடுகளுக்கு நேரில் சென்று வாழ்த்து பெற்றார். இவர்களுடன் வாக்குகள் சேகரிப்பது குறித்து, வேட்பாளர் ஜோதி ஆலோசனை நடத்தினர். கூட்டணி கட்சிகளை சேர்ந்த பொறுப்பாளர்களை இன்று (31ம் தேதி ) சந்திக்க உள்ளார்.

## பங்குனி மாதம் வளர்பிறை பிரதோஷ சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை மார்ச் 31:**

அருள்மிகு அண்ணா மலையார் திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் பெரிய நந்திகேச பெருமானுக்கு பங்குனி மாத வளர்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு பெரிய நந்திகேச பெருமானு க்கு சிறப்பு அபிஷேகங்கள், பால்,தயிர், சந்தனம், இளநீர், பன்னீர், தேன், வெட்டிவேர், பஞ்சாமிர்தம், விபூதி வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகங்கள் வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, வில்வ மாலைகளால் அலங்கரித்து வில்வத்தினால் அர்ச்சனை செய்து, வண்ண பூக்களால் அர்ச்சனைகள் செய்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, சங்குகள் முழங்க, சிவ வாத்தியங்கள் இசைக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நந்திகேச பெருமானை அரோகரா அரோகரா என்று முழக்கமிட்டு வேண்டி அருள் பெற்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## திருமலை ஸ்ரீவாரி வருடாந்திர வசந்தோற்சவம்



திருமலை ஸ்ரீவாரி வருடாந்திர வசந்தோற்சவம் 1ம் நாள் திவ்ய சேவை.



நேற்று பிரதோஷத்தை யோட்டி, போளூர் அடுத்த வசூல் கல்யானபூரீஸ்வரர் கோயிலில் நந்தி பகவானுக்கும், லிங்கேஸ்வரருக்கும் சிறப்பு அபிஷேகம்,அலங்காரம், தீபாராதனைகள் நடைபெற்றன. வேத பண்டிதர் மஹாபலீஸ்வரர் பட் வேத மந்திரங்கள் ஓதி பூஜைகள் செய்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## மேல் ஒலக்கூர் பசுமலை தேர்த் திருவிழா



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் மேல் ஒலக்கூர் பசுமலை சுப்பரமணியசுவாமி திருக்கோவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் துவங்கி நடைபெற்று வரும் பங்குனி மாதப் பெருவிழா தினந்தோறும் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகின்றன பதினொன்று நாட்கள் நடைப்பெறும் பெருவிழா அதனைத் தொடர்ந்து திங்கட்கிழமை மாலை திருத்தேரோட்டம் நிகழ்ச்சி வெகுவிமர்சையாக நடைபெற்றது திருத்தேரோட்டத்தைக் வடம்பிடித்து பல்லாயிரம் கணக்கானோர் வருகை தந்து சாமி தரிசனம் செய்தனர்.

அகரம் ராமதாஸ் செய்தியாளர்

## பொதுத்தேர்தல் 2026 கல்லூரி மாணவ, மாணவிகள் விழிப்புணர்வு பேரணி



**திருவண்ணாமலை, மார்ச் 31:**

திருவண்ணாமலை மாநகராட்சி காமராஜர் சிலை அருகில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கல்லூரி மாணவ,மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்து விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சுற்றுலா: தமிழ்நாட்டில் சுற்றுலா செல்ல சிறந்த சில மலை வாசஸ்தலங்கள்!



சின்ன பட்ஜெட்டில் அதுவும் மனநிறைவா ஒரு டூர் போகணும்னா இந்த மாதிரி சிறந்த சில மலை வாசஸ்தலங்களுக்கு சென்று வரலாம்.

### மேகமலை

தேனி மாவட்டத்தில் சின்னமனூர் நகரத்திற்கு அருகில் உள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 1500 மீட்டர் உயரத்தில் பசுமையான காடுகளால் சூழப்பட்டது. இது நான்கைந்து மலை சிகரங்களுக்கு நடுவே அமைந்த பள்ளத்தாக்காகும். ஏலக்காய், தேயிலை, காப்பி தோட்டங்கள், அழகான ஏரி, வனவிலங்கு சரணாலயம் என இயற்கை எழில் கொஞ்சும் இந்த இடம் சிறந்த மலை வாசஸ்தலங்களில் ஒன்றாகும்.

### ஜவ்வாது மலை

கிழக்கு தொடர்ச்சி மலையில் கொல்லிமலை சேர்வராயன் மலை கல்வராயன் மலையை அடுத்து வரும் மலைத்தொடர் இது. இம் மலைத்தொடரில் பீமன் அருவியும், காவலூரில் ஆசியாவின் மிகப்பெரிய வானாய்வகமும் உள்ளது. இம்மலையிலிருந்து செய்யாறு, நாக நதி போன்ற ஆறுகள் உற்பத்தி ஆகின்றன. பர்வதமலை சிவன் கோவிலும், படவேடு அருகில் உள்ள கோட்டை வரதர் கோவிலும் சிறப்பு வாய்ந்தது.

### பச்சை மலை

சின்ன பட்ஜெட்ல மன நிறைவா ஒரு டூர் போகணும்னா இந்த பச்சை மலைக்கு போகலாம். தமிழ்நாட்டில் உள்ள கொல்லிமலை, ஜவ்வாது மலை போன்ற கிழக்கு தொடர்ச்சி மலைகளுள் இதுவும் ஒன்று. இங்கு கல்லாறு, வெள்ளாறு, மருதையாறு போன்ற நதிகள் உற்பத்தி ஆகின்றன. இந்த மலை கடல் மட்டத்திலிருந்து 2400 அடி உயரத்தில் உள்ளது. இது வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இடம். மங்களம் அருவி, எருமைப்பள்ளி அருவி, கோரையாறு அருவி என பல அருவிகள் உள்ளன.

### கொல்லிமலை

தமிழ்நாட்டின் நாமக்கல் மாவட்டத்தில் உள்ளது. இது ஒரு சிறிய மலைத்தொடர் ஆகும். இதற்கு வேட்டைக்காரன்மலைஎன்றபெயரும் உண்டு. இம்மலையில் நிறைய மூலிகைகள் காணப்படுவதால் மூலிகைகளின் ராணி என்றும் அழைக்கப்படுகிறது. பழந்தமிழ் நூல்களில் கொல்லிமலையை பற்றி நிறைய குறிப்புகள் உள்ளன. இங்குள்ள கொல்லிப்பாவை குடைவரைக் கோயில் 15 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக சித்தர்களால் சொல்லப்படுகிறது.

இங்குள்ள ஆகாய கங்கை அருவி, கொல்லிப்பாவை கோவில், மிகவும் பழமையான முருகன் கோவில் ஒன்றும், வாசலூர்பட்டி படகு துறையும் பார்க்க வேண்டிய இடங்களாகும்.



### பன்றிமலை

திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த பன்றி மலை இயற்கை எழில் கொஞ்சும் சிறந்த சுற்றுலா தலமாகும்.

சாலையே தெரியாத அளவுக்கு முற்றிலும் பனிமூட்டமே காணப்படும். மேகங்கள் நம்மை தொட்டுச் செல்வதை நன்றாக உணர முடியும். அழகிய காடுகள், காபி தோட்டங்கள், மிளகு தோட்டம், சிறு சிறு ஓடைகள், நீர்வீழ்ச்சிகள் என ரம்யமாக இருக்கும். இயற்கை எழில் கொஞ்சம் இந்த இடம் நிறைய பேருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. எங்கும் பசுமை, இதமான குளிர், லேசான சாரல் என மிக அழகான இடம்.

### மாஞ்சோலை

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பசுமை நிறைந்த மாஞ்சோலை கடல் மட்டத்திலிருந்து 3500 அடி உயரத்தில் மேற்கு தொடர்ச்சி மலையின் மணிமுத்தாறு அணை கட்டிற்கு மேலே உள்ள அழகிய கோடை வாசஸ்தலமாகும்.

தேயிலை தோட்டங்கள், நீர்வீழ்ச்சிகள், அணைக்கட்டுகள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகளால் சூழப்பட்டுள்ள அழகிய கிராமம்.

மணிமுத்தாறு அருவி, சிங்கம் பட்டி ஜமீன் அரண்மனை, வானபெட்டி அம்மன் கோவில் ஆகியவை மாஞ்சோலை பகுதியில் உள்ள சிறந்த சுற்றுலா இடங்கள் ஆகும். ஊட்டி கொடைக்கானல் போன்று இந்த மலைப்பிரதேசத்தை எளிதில் பார்க்க முடியாது. இங்கு கட்டுப்பாடுகள் அதிகம். இது புலிகள் சரணாலயம் அடங்கிய பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாகும். வனத்துறையின் அனுமதி பெற்று செல்ல வேண்டும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### தேசிய மின்சார நிறுவனத்தில் 81 இன்ஜினியர் காலியிடங்கள்

தேசிய நீர் மின்சார நிறுவனத்தில் (என்.எச்.பி.சி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

'டிரைனி இன்ஜினியர்' பிரிவில் சிவில் 14, எலக்ட்ரிக்கல் 39, மெக்கானிக்கல் 28 என மொத்தம் 81 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,

வயது: 18-30 (6.4.2026ன் படி)

தேர்ச்சி முறை: GATE 2024, GATE 2025 தேர்வு மதிப்பெண், குழு விவாதம், நேர்முகத்தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 708. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 6.4.2026 விவரங்களுக்கு: nhpcindia.com

### ரயில்வேயில் 11,127 காலியிடங்கள்



இந்திய ரயில்வேயில் காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

'அசிஸ்டென்ட் லோகோ பைலட்' பிரிவில் மொத்தம் 11,127 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு / ஐ.டி.ஐ., வயது: 18-30 (1.7.2026ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு, மருத்துவ சோதனை, தேர்வு மொழி: தமிழ் உட்பட 15 மொழிகளில் தேர்வு நடைபெறும்.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் (15.5.2026 முதல்)

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 250.

கடைசிநாள்: 14.6.2026 விவரங்களுக்கு: rrbapply.gov.in

## ஆதிதிராவிடர் நலப்பள்ளி ஆசிரியர்கள் 'டெட்' தேர்வுக்கு விண்ணப்பிக்க விரைந்து பணிச்சான்று

**சென்னை, மார்ச் 31:**

*ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளி, சமூகநீதி விடுதிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் காப்பாளர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் காப்பாளர்கள், தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களில் தகுதித் தேர்வு (டெட்) தாள்-1 மற்றும் தாள்-2 தேர்ச்சி பெறாதவர்கள் பணியைத் தொடரவும் பதவி உயர்வு பெறவும் டெட் தேர்ச்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.*

*தற்போது ஆசிரியர் தேர்வு வாரியம் டெட் தேர்வுக்கான அறிவிப்பை வெளியிட்டுள்ள நிலையில், இத்துறையில் பணியாற்றும் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் எமிஸ் ஐடியை பயன்படுத்தி விண்ணப்பிக்கவும், எமிஸ் ஐடி இல்லாதவர்கள் பள்ளிகளில் விவரங்களைப் பதிவுசெய்து விரைவாக எமிஸ் ஐடி பெறவும் பள்ளிக்கல்வித் துறை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*எனவே, எமிஸ் ஐடி இல்லாத ஆசிரியர்கள் தாங்கள் பணிபுரியும் விடுதிக்கு அருகில் உள்ள தலைமை ஆசிரியரை அணுகி தங்களுக்கான எமிஸ் ஐடி பெறும் வகையில் தேவையான விவரங்களை எமிஸ் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.*

*மேலும் டெட் தேர்வு எழுதவுள்ள ஆசிரியர்களுக்குத் தேவையான ஆவணங்களைச் சரிபார்த்து உரிய படிவத்தில் விரைந்து பணிச்சான்று வழங்கவும், தேர்வுக்கு விண்ணப்பிக்க கடைசி நாள் ஏப்ரல் 10 என்பதால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை விரைவாக விண்ணப்பிக்க அறிவுறுத்த வேண்டும் என்று அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கும் ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் த.ஆனந்த் உத்தரவிட்டுள்ளார்.*

## வணிக காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு எதிரொலி: ஓட்டல்களில் விறகு பயன்பாடு அதிகரிப்பால் விலை உயர்வு

**சென்னை, மார்ச் 31:**

*வணிக காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக ஓட்டல்களில விறகு பயன்பாடு அதிகரிப்பதால் அதன் விலை ஒரு குண்டு ரூ.320-லிருந்து ரூ.500 வரை உயர்ந்துள்ளது.*

*அமெரிக்கா- ஈரான் இடையிலான போர் காரணமாக இந்தியா முழுவதும் சமையல் காஸ் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வணிக சிலிண்டர்கள் கிடைப்பது அரிதாகிவிட்டது. ஊரகப் பகுதிகளில் வீட்டு உபயோக சிலிண்டர் பதிவு செய்து பல நாட்கள் காத்து கிடக்கின்றனர்.*

*அடுத்த சிலிண்டர் பதிவு செய்வதற்கான இடைவெளி 21 நாட்களாக இருந்தது, நகர்ப்புறங்களில் 25 நாட்களாகவும், ஊரக பகுதிகளில் 45 நாட்களாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.*

*வீட்டு உபயோக சிலிண்டரை நிரப்புவதற்கு பதிவு செய்ய ஐவிஆர்எஸ், ஆயில் நிறுவன செயலி, மிஸ்டு கால் என பல்வேறு முறைகளில் முயன்றும் பதிவு செய்ய முடியவில்லை என பொதுமக்கள் புகார் தெரிவித்து வருகின்றனர்.*

*வணிக சமையல் காஸ் கிடைக்காததால், பல ஓட்டல்கள் மூடப்பட்டன. சில ஓட்டல்களில் உணவு தயாரிப்பு அளவு குறைப்பு, 4 வகை பொரியல், 3 வகை சட்னி கொடுக்காமல் ஒரே வகை பொரியல், சட்னி கொடுப்பது என சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.*

*சில ஓட்டல்கள் விறகு அடுப்புகளை பயன்படுத்தி உணவு தயாரித்து வருகின்றன. மேலும் மாணவர் தங்கும் விடுதிகள், பயணியர் தங்கும் விடுதிகள், தரை தளம் மட்டும் கொண்ட தனி வீடுகள் போன்றவற்றில் சுடுதண்ணீர் காய வைக்கவும், டீக்கடைகள் பலவற்றிலும் விறகு அடுப்புகளை பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.*

*இதனால் சென்னையில் விறகு அடுப்புகளின் பயன்பாடு அதிகரித்திருப்பதோடு, விறகுகள் பயன்பாடு அதிகரித்து, அதன் விலை உயர்ந்துள்ளது. சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் 3 சக்கர சைக்கிள்களில் சிறு கடைகளுக்கு விறகுகள் கொண்டு செல்வது அதிகரித்துள்ளது.*

*இது தொடர்பாக மூலக்கொத்தளம் பகுதியை சேர்ந்த மர வியாபாரிகளிடம் கேட்டபோது, "இதற்கு முன்பு ஒரு குண்டு (25 கிலோ) சவுக்கு விறகு கிலோ ரூ.320 முதல் ரூ.350 வரை விற்கப்பட்டது.*

*இப்போது பெரிய ஓட்டல்காரர்கள் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள சவுக்கு தோப்புகளுக்கு நேரடியாக சென்று விறகுகளை வாங்க தொடங்கியுள்ளனர்.*

## ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வு: சான்றிதழை முழுமையாக பதிவேற்ற தேர்வர்களுக்கு அவகாசம்

**சென்னை, மார்ச் 31:**

*நேர்காணல் இல்லாத பதவிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வில் சான்றிதழ்களை முழுமையாகப் பதிவேற்றம் செய்ய தேர்வர்களுக்கு கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதாக டிஎன்பிஎஸ்சி தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பாக டிஎன்பிஎஸ்சி செயலாளர் பானோத் ம்ருகேந்தர் லால் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கடந்த ஆகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வில் (நேர்காணல் இல்லாத பதவிகள்) தேர்வர்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டன. அப்போது சில தேர்வர்கள் ஒரு சில சான்றிதழ்களை முழுமையாகவும், சரியாகவும் பதிவேற்றம் செய்யாமல் குறைபாட்டுடன் வைத்திருப்பது கண்டறியப்பட்டது. எனவே, அத்தகைய தேர்வர்கள் விடுபட்ட சான்றிதழ்களை முழுமையாகப் பதிவேற்றம் செய்யவும், குறைகளை சரிசெய்யவும் ஏப்ரல் 6-ம் தேதி வரை இறுதி வாய்ப்பு அளிக்கப்படுகிறது.*

*அந்த தேர்வர்களின் பதிவெண்கள் அடங்கிய பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர்களுக்கு குறுஞ்செய்தி, மின்னஞ்சல் வாயிலாக தகவலும் அனுப்பப்பட்டுள்ளது.*

*குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யாத தேர்வர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.*

*அவர் வெளியிட்டுள்ள மற்றொரு செய்திக்குறிப்பில், "ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வில் (நேர்முகத் தேர்வு பதவிகள்) இடம் பெற்றுள்ள பதவிகளுக்கான தேர்வுகள் மார்ச் 7 மற்றும் 8-ம் தேதி நடத்தப்பட்டன.*

*தற்போது கட்டாய தமிழ் மொழி தகுதித்தாள் தேர்வு மற்றும் வேளாண்மை, வணிக நிர்வாகம், எலெக்ட்ரிக்கல் மற்றும் எலெக்ட்ரானிக்ஸ் இன்ஜினீயரிங், நிதி மற்றும் செலவுக் கணக்கு, சட்டம், மெக்கானிக்கல், உற்பத்தி பொறியியல் ஆகிய பாடங்களுக்கான உத்தேச விடைகள் (கீ ஆன்ஸர்) தேர்வாணையத்தின் இணையதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டுள்ளன.*

*தேர்வர்கள் உத்தேச விடைகள் மீது இணையவழியாக ஏப்ரல் 3-ம் தேதி வரை முறையீடு செய்யலாம். அஞ்சல் வழியாகவும், மின்னஞ்சல் வாயிலாகவும் பெறப்படும் முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது" என்று கூறியுள்ளார்.*

## கொடைக்கானலில் குவிந்த சுற்றுலா பயணிகள்



**திண்டுக்கல், மார்ச் 31:**

மலைகளின் இளவரசியான கொடைக்கானலில் நிலவும் இதமான சீதோஷ்ண நிலையை அனுபவிக்க விடுமுறை நாட்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து காணப்படும். அதன்படி தெலுங்கு வருடபிறப்பு, ரம்ஜான் பண்டிகை மற்றும் வார விடுமுறையை கொண்டாட கடந்த 2 நாட்களாக சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து உள்ளது. இந்த நிலையில் அதிகாலை முதலே ஏராளமான வாகனங்களில் சுற்றுலா பயணிகள் படையெடுத்து வந்தனர். சட்டமன்றத் தேர்தலையொட்டி பறக்கும்படையினர், போலீசார் கொடைக்கானல் வெள்ளி நீர்வீழ்ச்சி பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். இதனால் அந்த சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டனர்.

போக்குவரத்து நெரிசலில் இருந்து ஒரு வழியாக கொடைக்கானலுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகள் இதமான பருவநிலையை அனுபவித்த வாறு வனப்பகுதிகளில் உள்ள பல்வேறு இடங்களை சுற்றிப் பார்த்தனர். பின்னர் நட்சத்திர ஏரியில் படகு சவாரி, ஏரியைச் சுற்றி சைக்கிள் சவாரி, குதிரை சவாரி செய்து மகிழ்ந்தனர்.

## தென்காசி: மலை பகுதியில் பற்றி எரியும் காட்டுத்தீ அரிய வகை மரங்கள், செடிகள் கருகின

**தென்காசி, மார்ச் 31:**

கடையம் அருகே கோவிந்தப்பேரி பகுதியில் பள்ளகாடுபட்டி பொத்தை மலை உள்ளது. இங்கு அடர்ந்து வளர்ந்த மரங்கள், செடி-கொடிகள், ஏராளமான வனவிலங்குகள் உள்ளன. நேற்று இந்த மலைப்பகுதியில் திடீரென காட்டுத்தீ ஏற்பட்டது.

காற்றின் வேகத்தால் அருகில் இருந்த மரம், செடி-கொடிகள் என அனைத்துக்கும் தீ மளமளவென வேகமாக பரவி கொழுந்துவிட்டு எரிந்தது.

இதுகுறித்து தகவல் அறிந்த கடையம் வனத்துறையினர் உடனே அங்கு சென்று தீயை அணைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். தீயின் தீவிரம் காரணமாக வனப்பகுதியில் உள்ள அரியவகை மரங்கள் மற்றும் செடி-கொடிகள் கருகின.

மேலும் இந்த தீ விபத்தில் வனவிலங்குகளும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. கடும் வெயில் காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது. இருப்பினும் தீ விபத்துக்கான காரணம் குறித்து வனத்துறை அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# பயணிகள் நெரிசலை சமாளிக்க ஐசிஎஃப்-ல் தலா 15 பெட்டிகளை கொண்ட 2 மின்சார ரயில்கள் மேற்கு ரயில்வேக்கு அனுப்பி வைப்பு



**சென்னை, மார்ச் 31:** சென்னை ஐசிஎஃப் ஆலையில் முதன்முறையாக, தலா 15 பெட்டிகளை கொண்ட 2 மின்சார ரயில்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த ரயில்கள் மேற்கு ரயில்வே மண்டலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

மும்பை, சென்னை, கொல்கத்தா மற்றும் டெல்லியில் இயக்கப்படும் 12 பெட்டி மின்சார ரயில்களில் தினசரி பல லட்சம் பேர் பயணம் செய்கின்றனர். இருப்பினும், காலை, மாலை வேளையில் 'பீக் ஹவர்ஸ்' எனப்படும் நெரிசல் மிகுந்த நேரங்களில் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது.

எனவே, அதிக பயணிகள் செல்லும் வகையில், 15 பெட்டி கொண்ட மின்சார ரயில் தயாரிக்க ஐசிஎஃப் ரயில் பெட்டி தொழிற்சாலைக்கு ரயில்வே வாரியம் உத்தரவிட்டது. தற்போது தலா 15 பெட்டிகளை கொண்ட 2 மின்சார ரயில்கள் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளன. மீதம் 4 ரயில்கள் தயாரிக்கும் பணி முழுவீச்சில் நடைபெறுகின்றன.

7,555 பேர் பயணிக்கலாம்

இதுகுறித்து, சென்னை ஐசிஎஃப் அதிகாரிகள் கூறியதாவது: மும்பை, சென்னையில் தான் அதிக அளவில் மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன. தினசரி பல லட்சக்கணக்கான மக்கள் பயணம் செய்கின்றனர்.

காலை, மாலை வேளையில் நெரிசல் மிகுந்த நேரங்களில், கூடுதல் மின்சார ரயில்கள் இயக்க அறிவுறுத்தப்படுகிறது. இதற்கிடையில், தலா 15 பெட்டிகளை கொண்ட 6 மின்சார ரயில்களை தயாரிக்க ரயில்வே வாரியம் உத்தரவிட்டுள்ளது.

தலா 15 பெட்டிகள் கொண்ட 2 மின்சார ரயில்கள் தயாரிப்பு பணி முடிந்து, மேற்கு ரயில்வேக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கடந்த மாதத்தில் முதல் 15 பெட்டிகளை கொண்ட மின்சார ரயிலையும், அண்மையில், 2-வது ரயிலையும் தயாரித்து வழங்கினோம்.

இந்த ரயில்கள் மும்பைக்கு அனுப்பப்படும். ஒரு ரயிலில் ஒரே நேரத்தில் 7,555 நபர்கள் பயணிக்க முடியும். இதுதவிர, தலா 12 பெட்டிகள் கொண்ட இரண்டு மின்சார ரயில்கள் தயாரிக்கப்படுகின்றன.

இந்த ரயில் தானியங்கி கதவு கொண்டது. மெட்ரோ ரயில் பெட்டிகள் மாதிரியும், கதவுகள் பெரியதாகவும் இருக்கும். இந்த ரயில் தயாரிக்கும் பணி முழு வீச்சில் நடைபெறுகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# க்ரைம் கார்னர்

## வந்தே பாரத் ரெயில் மீது கற்களை வீசிய 2 சிறுவர்கள் கைது

**திண்டுக்கல், மார்ச் 31:** நெல்லையில் இருந்து சென்னைக்கு வந்தே பாரத் ரெயில் தினமும் இயக்கப்படுகிறது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு இந்த ரெயில் திண்டுக்கல் அருகே வந்துகொண்டிருந்தது. அப்போது, தண்டவாள பகுதி அருகே நின்ற சிறுவர்கள் ரெயில் பெட்டியில் உள்ள ஜன்னல் கண்ணாடிகள் மீது கற்களை வீசிச்சென்றனர். பின்னர் இதுகுறித்து ரெயில்வே பாதுகாப்பு படை போலீசில் பயணிகள் புகார் தெரிவித்தனர்.

அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தனர். விசாரணையில் வந்தே பாரத் ரெயிலில் கற்களை வீசியது திண்டுக்கல் தோமையார்புரம் பகுதியை 12, 14 வயதுடைய 2 சிறுவர்கள் என்பது தெரியவந்தது. இந்த நிலையில் நேற்று அந்த சிறுவர்களை பிடித்து போலீசார் விசாரித்தனர். அப்போது வந்தே பாரத் ரெயிலில் கற்களை வீசியதை சிறுவர்கள் ஒப்புக் கொண்டனர். தொடர்ந்து சிறுவர்கள் 2 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

## குஜராத்தில் நவீன திருட்டு: கூகுள் மேப் மூலம் கோவில் நகைகளை திருடிய கும்பல் கைது



**அகமதாபாத், மார்ச் 31:** குஜராத்தின் கிழக்கு கட்ச் மாவட்டத்தில் மோதி ஹமீர்பார் கிராமத்தில், இரண்டு கோவில்களில் கொள்ளை நடந்தது. அந்த திருட்டு கும்பலை அடேசர் போலீசார் தீவிரமாக தேடி வந்தனர். இந்த நிலையில் அடேசர்-சான்வா சந்திப்பு அருகே திருட்டு பொருட்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் நிற்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. உடனடியாக அந்த இடத்திற்கு விரைந்த வந்த போலீசார் சந்தேகப்படும் நபர்களை கண்காணித்து வந்தனர். திருடிய நகைகளை விற்க முயன்ற போது திருடர்களை மடக்கி பிடித்து கைது செய்தனர். மேலும் அவர்களை சோதனை செய்த போது, திருடப்பட்ட பொருட்கள் அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டது.மேலும் மோதி ஹமீர்பார் கிராமத்தில் உள்ள கோடியார் மாதாஜி மற்றும் ராம்தேவ்பீர் கோவில்களில் திருடியது கோலி மற்றும் அவரது நண்பன் கஞ்சி என போலீசார் தெரிவித்தனர். திருடர்கள் கோவில்களை அடையளம் காணவும் திருட்டை நடத்துவதற்கு கூகுள் மேப்பை பயன்படுத்தியது தெரிய வந்தது மேலும் இந்த திருடர்களின் செயல்முறையை கண்ட போலீசாரே அதிர்ச்சி அடைந்தனர்.

## ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின்போது பெங்களூரு மைதானத்தில் 15 செல்போன்கள் திருட்டு

**பெங்களூரு, மார்ச் 31:** ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது. பெங்களூரு சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் நடந்த போட்டியில் பெங்களூரு-ஐதராபாத் அணிகள் மோதின. இந்த போட்டியை காண ஆயிரக்கணக்கான ரசிகர்கள் சின்னசாமி மைதானத்தில் குவிந்தனர். இந்த நிலையில் போட்டி முடிந்ததும் ரசிகர்கள் மைதானத்தில் இருந்து வெளியேறி கொண்டிருந்த போது, மர்மநபர்கள் கூட்ட நெரிசலை பயன்படுத்தி செல்போன்கள் மற்றும் பணத்தை திருடி சென்றனர். மொத்தம் 15 பேரின் செல்போன்களை மர்மநபர்கள் திருடி சென்றனர். இதனால் அதிர்ச்சி அடைந்தவர்கள், கப்பன் பூங்கா போலீசில் புகார் அளித்தனர். மேலும் சிலர் இ-மெயில் மூலமும் புகார் அளித்தனர். இந்த புகார்களை பெற்றுக்கொண்ட போலீசார். சின்னசாமி மைதானத்தில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்து வருகிறார்கள். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# விளையாட்டு செய்திகள்

## "கடின உழைப்பு, பயிற்சியால் வெற்றி" - விராட் கோலி

**பெங்களூரு, மார்ச் 31:** எனது கடின உழைப்பு, தீவிர பயிற்சியே வெற்றிக்குக் காரணம் என்று ராயல் சாலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி தெரிவித்தார்.

ஐபிஎல் சீசனின் தொடக்க ஆட்டம் நேற்று முன்தினம் இரவு பெங்களூருவில் நடைபெற்றது. இதில் 6 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூரு அணி வெற்றி கண்டது. முதலில் விளையாடிய ஹைதராபாத் அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 201 ரன்கள் எடுத்தது. இதைத் தொடர்ந்து விளையாடிய பெங்களூரு அணி 15.4 ஓவர்களிலேயே 4 விக்கெட் இழப்புக்கு 203 ரன்கள் குவித்து வெற்றி கண்டது. விராட் கோலி 38 பந்துகளில் தலா சிக்ஸர், பவுண்டரிகளுடன் 69 ரன்களும், டிம் டேவிட் 16 ரன்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். வெற்றிக்குப் பின்னர் விராட் கோலி கூறியதாவது: டி20 கிரிக்கெட் போட்டிகளுக்கு திரும்பி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. திரைமறைவுக்கு பின் கடுமையாக உழைத்து வருகிறேன். எனது உடல் தகுதியை பாதுகாக்க அதிக கவனம் செலுத்துகிறேன். கடின உழைப்பு, தீவிர பயிற்சியே வெற்றிக்குக் காரணம். இந்த ஐபிஎல் தொடரில் தொடர்ந்து சீரான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சேஸிங்கில் 4 ஆயிரம் ரன்கள் குவித்த கோலி

ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளில் சேஸிங்கின்போது 4 ஆயிரம் ரன்கள் குவித்த முதல் வீரர் என்ற பெருமையை விராட் கோலி பெற்றுள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் அவர் இந்த சாதனையைப் புரிந்தார்.

மேலும் டி20 போட்டிகளில் அதிக ரன்கள் குவித்த வீரர்கள் வரிசையில் 6-வது இடத்தைப் பிடித்தார். முன்னதாக 6-வது இடத்தில், பாகிஸ்தான் வீரர் ஷோயிப் மாலிக் 13,571 ரன்களுடன் இருந்தார். தற்போது விராட் கோலி, 13,612 ரன்கள் குவித்து மாலிக்கை பின்னுக்குத் தள்ளி 6-ம் இடத்துக்கு முன்னேறினார்.

## ஐபிஎல் 2026: கொல்கத்தாவை வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ்

**மும்பை, மார்ச் 31:** ஐபிஎல் 2026 தொடரின் இரண்டாவது லீக் ஆட்டத்தில், மும்பை இந்தியன்ஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. 2012-ஆம் ஆண்டிற்குப் பிறகு தனது முதல் லீக் ஆட்டத்திலேயே வெற்றி பெற்றுள்ள மும்பை அணி, 14 ஆண்டுகால நீண்ட கால காத்திருப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. டாஸ் வென்ற மும்பை கேப்டன் ஹர்திக் பாண்டியா முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தார். தொடக்க வீரர்களாக களம் இறங்கிய அஜிங்க்ய ரஹானே மற்றும் ஃபின் ஆலன் ஜோடி அதிரடியான தொடக்கத்தை அளித்தனர். அஜிங்க்ய ரஹானே 40 பந்துகளில் 67 ரன்களும், ஃபின் ஆலன் 17 பந்துகளில் 37 ரன்களும் குவித்தனர். மிடில் ஆர்டரில் அறிமுக வீரர் அங்க்ரிஷ் ரகுவன்ஷி 29 பந்துகளில் 51 ரன்கள் எடுத்து அசத்தினார். இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் கொல்கத்தா அணி 4 விக்கெட் இழப்பிற்கு 220 ரன்கள் என்ற இமாலய இலக்கை நிர்ணயித்தது. 221 ரன்கள் என்ற கடின இலக்கை நோக்கி விளையாடிய மும்பை அணி 19.1 ஓவர்களிலேயே 4 விக்கெட் இழப்பிற்கு 224 ரன்கள் எடுத்து இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

# சுங்க கட்டண உயர்வை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்: ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் கோரிக்கை

**சென்னை, மார்ச் 31:** சுங்க கட்டண உயர்வை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என, ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து, அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்க தலைவர் அன்பழகன் வெளியிட்ட அறிக்கை: ஏப்ரல் 1-ம் தேதி முதல் சுங்க சாவடி கட்டணம் தமிழகத்தில் சில இடங்களில் உயர உள்ளது.

அதாவது, தமிழகத்தில் ஸ்ரீபெரும்புதூர், பரனூர், வானகரம், கிருஷ்ணகிரி, மதுரை,நாங்குநேரி, வாணியம்பாடி, விராலிமலை, கப்பலூர், கனியூர், ஆத்தூர், தேனி உள்ளிட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள சுங்கச் சாவடிகளில் இந்தகட்டண உயர்வு அமல்படுத்தப்பட உள்ளது.

வாகன வகையைப் பொறுத்து சுமார் ரூ.5 முதல் ரூ.100 வரைகட்டண உயர்வு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.இதன் தாக்கம் பொதுப் போக்குவரத்து துறையில் இன்னும் அதிகமாக உணரப்படுகிறது. குறிப்பாக, தனியார் பேருந்துகள், சுற்றுலா பேருந்துகள் மற்றும் சரக்கு வாகனங்கள் நீண்ட தூரம் பயணிக்கும் போது பல சுங்கச் சாவடிகளை கடக்க வேண்டியிருப்பதால், தினசரி இயக்கச் செலவில் சுங்கச் சாவடி கட்டணம் பெரிய சுமையாக மாறி உள்ளது.

சுங்கச் சாவடி கட்டண உயர்வாள் போக்குவரத்து செலவு அதிகரிக்கும் போது, அதன் தாக்கம் பொருளாதாரத்தின் பல துறைகளிலும் காணப்படுகிறது. எனவே, சுங்கச் சாவடி கட்டண உயர்வு என்பது சாலைப்பயணிகளுக்கான பிரச்சினை மட்டுமல்லாது, பொதுமக்களின் வாழ்க்கைச் செலவையும், நாட்டின் பொருளாதாரச் செயல்பாடுகளையும் பாதிக்கும் ஒரு முக்கிய காரணியாக மாறுகிறது.

மேலும், அதிகரிக்கும் சுங்க கட்டணங்களால் சில வாகனங்கள் தேசிய நெடுஞ்சாலைகளை தவிர்த்து, உள்ளூர் சாலைகளை பயன்படுத்தும் நிலை உருவாகும் அபாயமும் உள்ளது. இதனால், கிராமப்புற சாலைகளில் நெரிசல் அதிகரிப்பு, சாலை சேதம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்பும் உள்ளது.

சுங்கச்சாவடி கட்டண உயர்வை மறுபரிசீலனை செய்து மக்கள் மற்றும் போக்குவரத்து துறைக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை உடனடியாக மத்திய அரசு ஏற்படுத்த வேண்டும். பொதுப் போக்குவரத்து வாகனங்களுக்கு சுங்க கட்டணத்தில் சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கள்ளச்சந்தையில் சிலிண்டர் விலை ரூ.6,500: தேநீர், சிற்றுண்டி, சாப்பாடு விலை உயர்வு

**சென்னை, மார்ச் 31:** காஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டால், கள்ளச்சந்தையில் வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர்களை பல ஆயிரம் ரூபாய் கூடுதலாகக் கொடுத்து வாங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் ஓட்டல்களில் தேநீர், சிற்றுண்டி, சாப்பாடு உள்ளிட்டவற்றின் விலை கணிசமாக அதிகரித்துள்ளது.

மத்தியக் கிழக்கில் போர்ப் பதற்றம் நீடிக்கிறது. இதனால் ஈரானின் கடல்வழி போக்குவரத்து பாதிக்கப்பட்டு இந்தியாவில் எல்பிஜி காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வீட்டு உபயோக சிலிண்டர் விநியோகிக்கப்படும் நிலையில், வணிகப் பயன்பாட்டு சிலிண்டர் நிறுத்தப்பட்டுள்ளது. மருத்துவமனை, கல்வி நிறுவனங்களுக்கு மட்டும் முன்னுரிமை அடிப்படையில் காஸ் சிலிண்டர் வழங்கப்படுகிறது.

வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் நிறுத்தப்பட்டதால், பெரும்பாலான இடங்களில் உணவகங்கள் மூடப்பட்டுள்ளன. சிலர் விறகு அடுப்பைப் பயன்படுத்துகின்றனர். காஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டால் உணவகங்கள், தேநீர் கடைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் தேநீர் மற்றும் சிற்றுண்டி விலை அதிகரித்துள்ளது.

சில கடைகள் வணிக சிலிண்டர்கள் கிடைக்காமல் வீட்டு உபயோக சிலிண்டரை நம்பி இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நுங்கம்பாக்கம், வடபழனி, அடையாறு, தி.நகர், வேளச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் பல சாலையோர உணவகங்கள் மற்றும் தேநீர் கடைகளில் வணிக சிலிண்டர்கள் கிடைக்கவில்லை என்று அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

நுங்கம்பாக்கம், சூளைமேட்டில் ஒரு கப் தேநீரின் விலை ரூ.12-ல் இருந்து ரூ.20 ஆக உயர்ந்துள்ளது. தாம்பரத்தில் ரூ.20-க்கு விற்பனை செய்யப்பட்ட தேநீர் தற்போது ரூ.25 ஆக விலை உயர்ந்துள்ளது. அடையாறில் சமோசா, பஜ்ஜி, போண்டா போன்ற சிற்றுண்டிகள் விலை ரூ.35-ல் இருந்து ரூ.40 ஆக உயர்ந்துள்ளது. கலவை சாதம் விலையும் உயர்ந்துள்ளது. உணவகங்களில் சாப்பாட்டுக் கட்டணத்துடன் காஸ் சிலிண்டர் கட்டணத்தைச் சேர்த்து வாடிக்கையாளர்களிடம் வசூலிக்கின்றனர். தேநீர் கடை உரிமையாளர்கள் மற்றும் உணவக சங்கங்கள் ஒருங்கிணைந்து, உணவுப் பொருட்கள் விலையை உயர்த்த எந்த கூட்டுத் தீர்மானமும் எடுக்கவில்லை. ஒவ்வொரு கடை உரிமையாளரும் தனிப்பட்ட முறையில் விலையேற்றம் செய்துள்ளனர். இதற்கு வணிகப் பயன்பாட்டுக்கான காஸ் சிலிண்டரை கள்ளச்சந்தையில் ரூ.3 ஆயிரத்திலிருந்து ரூ.6,500 வரை கொடுத்தும் வாங்கும் நிலையே முக்கியக் காரணம் ஆகும். இது சிறிய கடைகளின் உரிமையாளர்களுக்கு பெரும் சுமையாக மாறியுள்ளது.

இதுகுறித்து, சிறிய உணவுக் கடை உரிமையாளர்கள் கூறியதாவது: கள்ளச் சந்தையில் ரூ.3,000-க்கு விற்கப்பட்ட வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை இப்போது ரூ.6,500 வரை விற்கப்படுகிறது. பல இடங்களில் ரூ.6,500-க்கும் காஸ் சிலிண்டர் கிடைக்காத நிலை இருக்கிறது. நெருக்கடியைச் சமாளிக்க முடியாத நிலை இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# மோசடிகளை தடுக்க வங்கி ஆன்லைன் பணப்பரிவர்த்தனையில் 1-ந் தேதி முதல் புதிய விதிமுறைகள் அமல்

**சென்னை, மார்ச் 31:** தற்போது ஆன்லைன் மோசடிகள் அதிகரித்து வருகிறது. இதில் ஆன்லைன் பணப்பரிவர்த்தனை பயன்படுத்தப்படுகிறது. இதனை தடுக்க வருகிற 1-ந் தேதி முதல் வங்கி பண பரிவர்த்தனையில் புதிய விதிமுறைகள் அமல்படுத்தப்படுகிறது.

இதுகுறித்து வங்கி அதிகாரிகள் கூறியதாவது:-

1. ஆன்லைன் பண பரிவர்த்தனை செய்யும் முறை, ஓ.டி.பி.(ரகசிய குறியீடு எண் உள்ளிடும் முறை மற்றும் வங்கி கணக்கை பாதுகாப்பாக வைத்திருக்கும் முறை ஆகியவை முற்றிலும் மாறும். ஒவ்வொரு பரிவர்த்தனையும் எங்கிருந்து செய்யப்படுகிறது என்பது சரிபார்க்கப்படும்.

2. வங்கி செயலியில் ஸ்கிரீன் ஷாட் அல்லது ஸ்கிரீன் ரெக்கார்டிங் செய்ய முடியாது. அது முற்றிலும் தடை செய்யப்படுகிறது. இதன் மூலம் மோசடி ஆசாமிகள் அதை வைத்து ரகசிய குறியீடு, கடவுச்சொல் ஆகிய வற்றை கண்டுபிடித்து, பணத்தை பறிப்பது தவிர்க்கப்படுகிறது.

3. இரவு நேர பரிவர்த்தனைகளை வாடிக்கையாளர் தாங்களே மூடி வைக்கலாம். விரும்பினால் காலை 11 மணி முதல் இரவு 6 மணி வரை பரிவர்த்தனைகளை முடக்கி கொள்ளலாம். இந்த நேரத்தில் வங்கி கணக்கில் இருந்து ரூ.1 கூட யாராலும் எடுக்க முடியாது. 4. ஏதேனும் மோசடி செயலி அல்லது மால்வேரை தவறுதலாக பதிவிறக்கம் செய்தால், உடனடியாக எச்சரிக்கை செய்யப்படும்.

5. ரகசிய குறியீடு முறையில் மாற்றம் செய்யப்படுகிறது. அதாவது எஸ்.எம்.எஸ்.-ல் ஓ.டி.பி. அனுப்புவது தடை செய்யப்படுகிறது. பயன்படுத்தும் செயலி அல்லது வங்கி செயலியில் ஓ.டி.பி. பெற முடியும்.

6. ஒவ்வொரு பரிவர்த்தனையின்போதும் கூடுதல் கேள்விகள் கேட்கப்படலாம். அதாவது ரூ.50 ஆயிரம், ரூ.1 லட்சம் அல்லது அதற்கு மேல் பரிவர்த்தனை நடந்தால், வாடிக்கையாளரின் தாயாரின் பெயர் என்ன, எந்த பள்ளியில் படித்தீர்கள் அல்லது உள்ளிட்டுள்ள பாதுகாப்பு கேள்விகள் கேட்கப்படலாம். சரியான பதிலை அளித்தால், சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர்தான் இதை செய்கிறார்கள் என்பது புரிந்து கொள்ளப்படும். இல்லையெனில் மோசடி செய்பவர்களாக இருக்கலாம் என்று வங்கிக்கு தகவல் செல்லும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# வணிகச் செய்திகள்

## தங்கம் விலை பவுனுக்கு ரூ.480 குறைவு

**சென்னை, மார்ச் 31:** அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் காரணமாக உலக அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் விலையும் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக பல்வேறு நாடுகளில் பெட்ரோல், டீசல் மற்றும் எல்பிஜி விலை அதிகரித்துள்ளது.

இதன் தாக்கம் தங்கம், வெள்ளி உள்ளிட்ட பொருட்களின் மீதும் எதிரொலிக்கிறது. வாரத்தின் முதல் வர்த்தக நாளான இன்று இந்திய பங்குச்சந்தையில் சென்செக்ஸ் சுமார் 500 புள்ளிகள் வரை சரிந்தது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று கிராமுக்கு ரூ.60 குறைந்து, ஒரு கிராம் ரூ.13,600-க்கும், பவுனுக்கு ரூ.480 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,08,800-க்கும் விற்பனை ஆகிறது. 24 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.520 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,18,696-க்கும், 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.440 குறைந்து, ஒரு பவுன் ரூ.90,760-க்கும் விற்பனை ஆகிறது.

வெள்ளியின் விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.250-க்கும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.2,50,000-க்கும் சந்தையில் விற்பனை ஆகிறது.

# அசாமில் 3-வது முறை ஆட்சி: அமித் ஷா நம்பிக்கை

குவாஹாட்டி, மார்ச் 31:

அசாம் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி (என்டிஏ) 90-க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக ஆட்சியைத் தக்கவைக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



தேர்தல் நடைபெறவுள்ள அசாம் மாநிலத்துக்கு இரண்டு நாள் பயணமாக நேற்று முன்தினம் வருகை தந்த அவர், குவாஹாட்டியில் பிரம்மாண்டமான சாலைப் பேரணியைத் தொடங்கி வைத்தார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் அமித் ஷா கூறியதாவது : அசாம் மக்கள் தொடர்ந்து மூன்றாவது முறையாக என்டிஏ அரசை தேர்ந்தெடுப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர். வரவிருக்கும் சட்டப் பேரவைத் தேர்தலில் உறுதியாக நாங்கள் 90-க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெறுவோம்.

பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையிலான ஆட்சியில் இம்மாநிலத்தில் மிகப்பெரிய வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றுள்ளன. உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஒரு காலத்தில் அசாமில் நிலவிய தீவிரவாதம், குண்டு வெடிப்புகள் மற்றும் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளன.

தற்போது மாநிலத்தின் சுகாதாரக் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு வருகிறது. ஒட்டுமொத்த வடகிழக்கு மாநிலங்களின் கல்வி மற்றும் சுகாதார மையமாக அசாம் உருவெடுத்துள்ளது. இவ்வாறு அமித் ஷா கூறினார். அசாம் மாநில சட்டப்பேரவைக்கு வாக்குப்பதிவு ஏப்ரல் 9-ம் தேதியும், வாக்கு எண்ணிக்கை மே 4-ம் தேதியும் நடைபெறவுள்ளன.

தற்போதுள்ள சட்டப்பேரவையில் பா.ஜ.க.வுக்கு 64 எம்எல்ஏ. க்கள் உள்ளனர். அதன் கூட்டணிக் கட்சிகளாக அஸ்ஸாம் கன பரிஷத் (9), ஐக்கிய மக்கள் லிபரல் கட்சி (7) மற்றும் போடோலாந்து மக்கள் முன்னணி (3) ஆகியவை உள்ளன.

எதிர் தரப்பில் காங்கிரஸ் கட்சிக்கு 26 இடங்களும்,

## “பாஜக ஆட்சிக்கு வந்தால் கறி, கோழி, மீன் கிடைக்காது” - மம்தா பானர்ஜி

புருலியா, மார்ச் 31:

மேற்கு வங்கத்தில் அடுத்த மாதம் 23, 29-ம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. இந்நிலையில், புருலியா தொகுதியில் நேற்று தடாலடி பிரச்சாரத்தில் ஈடுபட்டார் முதல்வர் மம்தா பானர்ஜி. அப்போது அவர் கூறியதாவது: பாஜக ஆட்சிக்கு வந்தால் இறைச்சி கடைகளுக்கு தடை விதிக்கும். மக்கள் சாப்பிட கறி, கோழி, மீன் எதுவும் கடையில் கிடைக்காது. அவர்களுக்கு மக்களின் மதம், கலாச்சாரத்தின் மீது நம்பிக்கை கிடையாது. அவர்கள் வன்முறையில் ஈடுபடுவர், ஆதிவாசி மக்களை மோசம் செய்வர். பாஜக ஆளும் மாநிலங்களில் பெண்கள் தாக்கப்படுகின்றனர். பாஜக மூத்த தலைவர் ஒருவர் (அமித் ஷா) நமக்கு எதிராக ‘குற்றப்பத்திரிகை’ வெளியிட்டுள்ளார். குஜராத்தில் பல வன்முறைகளில் ஈடுபட்ட அவர்களுக்கு எதிராகத்தான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

திரிணமூல் கட்சியின் லக்ஷ்மிர் பந்தர் திட்டத்தால் பெண்கள் பயனடைந்துள்ளனர். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணி மூலம் 1.2 கோடி வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. நமது ஆதரவாளர்களைக் குறிவைத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு மம்தா பானர்ஜி கூறினார்.

## உ.பி. விவசாயி மனைவி கணக்கில் ரூ.10 கோடி திடீரென வரவு வைத்த வங்கி



லக்னோ, மார்ச் 31:

உத்தர பிரதேச மாநிலம் மெய்ன்புரி மாவட்டம், தேவ்கஞ்ச் கிராமத்தில் வசிப்பவர் பராஸ்பன் பஹிலியா, விவசாயி. இவரது மனைவி ரீடா. இவர் பேங்க் ஆப் இண்டியாவில் கணக்கு வைத்துள்ளார். அஷ்டமி விழாவை முன்னிட்டு வங்கிக்கு விடுமுறை என்பதால், அருகில் உள்ள ஏடிஎம் மையத்துக்கு ரீடா சென்று தனது வங்கிக் கணக்கில் எவ்வளவு பணம் உள்ளது என்று பார்த்தார். அப்போது, ரூ.9 கோடியே 99 லட்சத்து 49,588 இருந்ததைப் பார்த்து ரீடா மலைத்துப் போனார். ஏடிஎம்.மில் காட்டிய தொகையை மொபைல் போனில் வீடியோவாக பதிவு செய்து சமூக வலைதளத்தில் வெளியிட்டார். அது வைரலாகி விட்டது. பின்னர், தனது வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை யாரும் எடுக்கக் கூடாது என்று குடும்ப உறுப்பினர்கள் அனைவரிடமும் ரீடா திட்டவட்டமாகக் கூறிவிட்டார். அதை அறிந்து அக்கம் பக்கத்தினர் ரீடாவின் நேர்மையைப் பாராட்டினர். தகவல் அறிந்த கரீம் கஞ்ச் பேங்க் ஆப் இண்டியா கிளை மேலாளர் ரிஷிகாந்த் பாண்டே கூறும்போது, “பணப் பரிமாற்றம் நடைபெறும் போதோ அல்லது தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவோ தவறாக பணம் ரீடா வங்கிக் கணக்கில் பணம் வரவு வைக்கப்பட்டிருக்கலாம். வங்கிக் கிளை திறந்தவுடன் அது சரி செய்யப்படும்” என்றார்.

# கேரளாவில் 42 பெண்கள் மட்டுமே தேர்தலில் போட்டி

திருவனந்தபுரம், மார்ச் 31:

இந்திய தேர்தல் ஆணையத்தின் சமீபத்திய தரவுகளின் படி, கேரளாவில் பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை (1,39,21,868) ஆண்களை விட (1,32,20,811) அதிகம். ஆனால் இந்த முறை 42 பெண்கள் மட்டுமே முக்கிய கட்சிகளின் சார்பில் வேட்பாளர்களாகக் களமிறக்கப்பட்டுள்ளனர்.



பாஜக சார்பில் 14, சிபிஐ(எம்) சார்பில் 12, காங்கிரஸ் சார்பில் 9, சிபிஐ சார்பில் 5, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் (முதல் முறையாக) 2 பெண்கள் போட்டியிடுகின்றனர்.

இதுகுறித்து காங்கிரஸ் எம்எல்ஏ பி.சி.விஷ்ணுநாத் கூறும்போது, “பெண்களுக்கு அதிக இடம் கொடுக்கத் தலைமை முயற்சி செய்தாலும், வெற்றி வாய்ப்பு உள்ளிட்ட காரணங்களால் கட்டமைப்பு ரீதியான தடைகள் உள்ளன” என்றார். சிபிஐ (எம்) மூத்த தலைவரும் அனைத்து இந்திய மாதர் சங்க நிர்வாகியுமான பி.கே. ஸ்ரீமதி கூறும்போது, “இடதுசாரி முன்னணி பெண்களுக்கு மொத்தம் 18 இடங்களை வழங்கியுள்ளது. இது எவ்வகையிலும் போதுமானது அல்ல. தேர்தலில் பெண்களுக்குக் குறைவான இடங்களே ஒதுக்கப்படுவது வருத்தமளிக்கிறது” என்றார்.

கேரளாவில் 1957-ல் சட்டப்பேரவை உருவானது முதல் இன்று வரை, பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 10 சதவீதத்தைத் தாண்டவில்லை. மத்திய அரசு கொண்டு வந்த ‘நாரிசக்தி வந்தன் அதினியம்’ (பெண்கள் இடஒதுக்கீடு சட்டம்) கடந்த செப்டம்பர் மாதம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றது. இது பெண் தலைவர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

எனினும், தொகுதி மறுவரையறை பணிகள் முடிவடையாததால் இந்தச் சட்டம் இத்தேர்தலில் நடைமுறைக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மயானத்தில் எரியும் சிதைகளுக்கு இடையே 282 ஆண்டுகளாக நடனம்

புதுடெல்லி, மார்ச் 31:

உத்தரபிரதேசம் வாராணசியின் மணிகர்ணிகா மயானத்தில் எரியும் சிதைகளுக்கு இடையே இளம்பெண்களின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. இரவு முழுவதுமான இந்த பாரம்பரிய நிகழ்ச்சி கடந்த 282 வருடங்களாகத் தொடர்கிறது.



உ.பி.யின் முக்கியப் புனித நகரமாக இருப்பது பனாரஸ் மற்றும் காசி எனும் வாராணசி. மிகவும் பழமையான நகரமாகக் கருதப்படும் இங்கு பல பாரம்பரியங்களும் கலாச்சாரங்களும் பல நூற்றாண்டுகளாகத் தொடர்கின்றன. இதில் ஒன்றாக தற்போதைய நவராத்திரி நாட்களில் மயான நடனம் இடம் பெற்றுள்ளது. வாராணசியின் கங்கை கரையில் உள்ள மணிகர்ணிகா மயானத்தில் நேற்று முன்தினம் இரவு ‘சைத்ர நவராத்ரி’ எனும் முக்கிய நாளில் இது நடைபெற்றது.

வாராணசியின் கங்கை கரைகளில் உள்ள மயானங்களில் மிகப் பெரியது மணிகர்ணிகா ஆகும். இங்கு 24 மணி நேரமும் இடைவிடாமல் சிதைகள் வந்து எரிகின்றன. இங்கு நடைபெறும் ஈமச் சடங்கு ஆன்மாவுக்கு முக்தி அளிக்கும் என்ற நம்பிக்கையே இதற்கு காரணமாகும். எரியும் சிதைகளுடன் மரண அமைதி நிலவும் இங்கு இரவு முழுவதும் சலங்கை ஒலியுடன் நடனம் தொடர்ந்தது. இதற்காக மேடை அமைத்து நகரவதுாக்கள் என்று அழைக்கப்படும் பாலியல் தொழிலாளிகள் நடனமாடுகின்றனர்.

இவர்களுடன் திருநங்கைகளும் இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்கின்றனர். இந்த நிகழ்வின் பின்னணியில் தங்களின் அடுத்த பிறவி, மேம்பட்டதாக அமையும் என்பது அவர்களின் நம்பிக்கையாக உள்ளது.

கடந்த 382 ஆண்டுகளாக இந்த வியப்புக்குரிய சங்கமத்தின் பாரம்பரியம் தொடர்கிறது. இது வெறும் ஒரு கலைநிகழ்ச்சியாக மட்டுமின்றி, ஒரு வகையான பிரார்த்தனை மற்றும் ஆன்மிக வழிபாடாகவும் கருதப்படுகிறது. இந்த நிகழ்ச்சியில் வாராணசி மட்டுமின்றி சுற்றுப்புற மாவட்டங்களில் இருந்து வந்தும் நடனமாடுகின்றனர்.

# ரேஷன் கடைகள், பெட்ரோல் பங்க்குகள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகம்: மத்திய அரசு அனுமதி

புதுடெல்லி, மார்ச் 31:

எல்பிஜி தட்டுப்பாட்டை சமாளிக்கும் நடவடிக்கையாக, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 21 மாநிலங்களில் வீட்டுப் பயன்பாட்டிற்காக மண்ணெண்ணெய்யை மத்திய அரசு தற்காலிகமாக ஒதுக்கியுள்ளது. மேலும், பெட்ரோல் விற்பனை நிலையங்கள் மூலமும் மண்ணெண்ணெய் விற்பனை செய்யவும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.



மார்ச் 29 அன்று வெளியிடப்பட்ட ஓர் அறிவிப்பின்படி, மத்திய அரசு பெட்ரோலியப் பாதுகாப்பு மற்றும் உரிம விதிமுறைகளைத் தளர்த்தியுள்ளது. இதன் மூலம், மண்ணெண்ணெய் பயன்பாடு இல்லாத பகுதிகளாக அறிவிக்கப்பட்ட டெல்லி, ஹரியானா, உத்தரப் பிரதேசம் மற்றும் குஜராத் உள்ளிட்ட 21 மாநிலங்களில் பொது விநியோகத் திட்டம் மூலமாக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட விதிமுறைகளின்படி, அரசால் நியமிக்கப்படும் பெட்ரோல் நிலையங்கள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகிக்க அனுமதிக்கப்படும். இதன்படி ஒவ்வொரு பெட்ரோல் விற்பனை நிலையமும் 5,000 லிட்டர் வரை மண்ணெண்ணெயை இருப்பு வைக்கலாம். இதற்காக, மாநில அரசுகள் மூலம் ஒரு மாவட்டத்திற்கு அதிகபட்சம் இரண்டு பெட்ரோல் பங்குகள் நியமிக்கப்படும். தொடர்ந்து நிலவி வரும் உலகளாவிய நெருக்கடியால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ள நிலையில், வீடுகளுக்கு அத்தியாவசிய எரிபொருள் கிடைப்பதை உறுதிசெய்யும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஏற்கெனவே உள்ள எரிபொருள் விநியோக வலையமைப்பின் மூலம் விரைவான விநியோகத்தை எளிதாக்கும் வகையில், தற்போதுள்ள பெட்ரோல் விற்பனை நிலையங்களில் மண்ணெண்ணெயை இருப்பு வைக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த அறிவிப்புகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன. இது 60 நாட்களுக்கு அல்லது மறு அறிவிப்பு வரும் வரை செல்லுபடியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெற்றோரை புறக்கணிக்கும் ஊழியர்களின் சம்பளத்தில் பிடித்தம்... தெலுங்கானாவில் புதிய சட்டம்

ஐதராபாத், மார்ச் 31:

தெலுங்கானாவில் முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டி தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி நடந்து வருகிறது. இந்நிலையில், தெலங்கானா சட்டசபையில் நேற்று வரலாற்று சிறப்புமிக்க புதிய மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்படி, பெற்றோரை கவனிக்க தவறும் அல்லது புறக்கணிக்கும் அரசு மற்றும் தனியார் ஊழியர்களின் சம்பளத்தில் ஒரு பகுதி பிடித்தம் செய்யப்படும். தெலுங்கானா ஊழியர்கள் பொறுப்புக்கூறுதல் மற்றும் பெற்றோருக்கு ஆதரவு அளிப்பதை கண்காணித்தல் மசோதா, 2026-க்கு நேற்று சட்டசபையில் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.

இந்த மசோதாவை அறிமுகம் செய்து முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டி பேசும்போது, மூத்த குடிமக்களின் நிதி பாதுகாப்பை உறுதி செய்ய தெலுங்கானா சட்டசபை புதிய மசோதாவை நிறைவேற்றியுள்ளது. இது, தற்போதுள்ள மத்திய சட்டங்களை விட மேம்பட்டதாக உள்ளது. ஏற்கனவே பெற்றோர், மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலவாழ்வு சட்டம் 2007 என்ற தேசிய சட்டம் உள்ளது. இந்த புதிய மசோதாவின்படி பொது பிரதிநிதிகள், அரசு ஊழியர்கள் மற்றும் தனியார் ஊழியர்கள் தங்கள் வயதான பெற்றோரை கவனித்து கொள்ள வேண்டும் என்பது கட்டாயமாகிறது. இதனை கடைப்பிடிக்க தவறினால், அவர்களின் சம்பளத்தில் 15 சதவீதம் அல்லது ரூ.10 ஆயிரம், இவற்றில் எது குறைவோ, அந்த தொகை பிடித்தம் செய்யப்படும். பெற்றோரை புறக்கணிக்கும் பிள்ளைகளை திருத்துவது சமூகத்தின் பொறுப்பாகும். ஒரு சமூக பொறுப்பாக, இந்த மசோதாவை அரசு கொண்டு வந்துள்ளது என்றார். ஊழியர்களிடம் பிடிக்கப்படும் தொகை நேரடியாக, பெற்றோரின் வங்கி கணக்கில் சென்று சேர்ந்து விடும். இதில் எம்.பி., எம்.எல்.ஏ. உள்ளிட்டோரும் கூட விதி விலக்கல்ல. அவர்களும் இந்த சட்டத்திற்குள் அடங்குவர் என தகவல் தெரிவிக்கின்றது. பெற்றோரின் உரிமைகள் நல்லெண்ண அடிப்படையிலேயே பாதுகாக்கப்பட வேண்டும். எனினும், அவர்கள் புறக்கணிக்கப்படும்போது சட்டம் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என இந்த மசோதா உறுதி செய்யும் என்றார்.

## குஜராத்தில் 103 வயதில் தேநீர் கடை நடத்தும் பாட்டி

வடோதரா, மார்ச் 31:

குஜராத் மாநிலம் வதோதராவைச் சேர்ந்தவர் 103 வயதான பாட்டி காஷிபா. மகாராஜா சாயாஜிராவ் பல்கலைக்கழகத்துக்கு அருகில் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக சிறிய தேநீர் கடையை நடத்தி வருகிறார். இப்போது அவரது மகன், மருமகள் கடையை நடத்தினாலும் காஷிபா தன்னால் ஆன உதவிகளை செய்து வருகிறார். இது தொடர்பான ஒரு வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. அந்த வீடியோவில், அந்தப் பாட்டி இஞ்சியைத் துருவி தேநீர் தயாரிப்பதைக் காணலாம். பல தலைமுறை மாணவர்களை ஈர்த்த அவரது இஞ்சி தேநீரின் நறுமணம், இன்றும் வழிப்போக்கர்களை ஈர்த்து வருகிறது.

## 1,100-க்கும் அதிக போலி வெடிகுண்டு மிரட்டல்கள்: மைசூரைச் சேர்ந்தவர் கைது

புதுடெல்லி, மார்ச் 31:

சமீபகாலமாக தில்லி உயர் நீதிமன்றம், சட்டப்பேரவை மற்றும் பல கல்வி மற்றும் அரசு நிறுவனங்களுக்கு தொடர்ச்சியாக வெடிகுண்டு மிரட்டல் செய்திகள் அனுப்பப்பட்டு வந்தன. இந்த சம்பவத்தில் கர்நாடகத்தின் மைசூரைச் சேர்ந்த ஒருவரை தில்லி போலீஸார் கைது செய்துள்ளதாக அதிகாரிகள் திங்கள்கிழமை தெரிவித்தனர்.

குற்றம்சாட்டப்பட்ட 47 வயதான ஸ்ரீனிவாஸ் லூயிஸ், வாடகைவீட்டில் இருந்து சனிக்கிழமை தில்லி போலீஸ் மற்றும் உள்ளூர் போலீஸ் குழுக்களால் கைது செய்யப்பட்டதாக அதிகாரிகள் கூறினர். லூயிஸ் ஒரு முதுகலைப் பட்டதாரி என்றும், பெங்களூருவைச் சேர்ந்தவர் என்றும் போலீஸார் தெரிவித்துள்ளனர். தற்போது அவர் வேலையின்றி, ஓய்வுபெற்ற அரசு ஊழியரான தனது தாயாருடன் வசித்து வருகிறார். அவர் மன அழுத்தத்தில் இருந்திருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. ஆரம்பகட்ட விசாரணையின்போது, மின்னஞ்சல்கள் மற்றும் பிற தகவல் தொடர்பு தளங்கள் வழியாக நாடு முழுவதும் 1,100-க்கும் மேற்பட்ட மிரட்டல் செய்திகளை அனுப்பியதாக அவர் ஒப்புக்கொண்டார் என்று மூத்த அதிகாரி ஒருவர் கூறினார். இந்த மிரட்டல்களைத் தொடர்ந்து பல்வேறு மாநிலங்களில் முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக போலீஸார் தெரிவித்துள்ளனர்.

## நடுவானில் விமானத்தின் ‘எமர்ஜென்சி’ கதவை திறக்க முயன்ற பயணி

லக்னோ, மார்ச் 31:

பெங்களூருவில் இருந்து நேற்று இரவு 8.15 மணிக்கு வாரணாசி நோக்கி இண்டிகோ விமானம் புறப்பட்டது. அந்த விமானத்தில், உத்தர பிரதேச மாநிலத்தை சேர்ந்த முகமது அத்னன் என்பவர் பயணம் செய்தார். விமானம் புறப்பட்டு சுமார் 15 நிமிடங்களுக்குள், முகமது அத்னன் விமானத்தின் ‘எமர்ஜென்சி’ கதவை திறப்பதற்கு முயற்சி செய்துள்ளார். இதனை விமான ஊழியர்கள் பார்த்தபோது, தவறுதலாக அந்த கதவை திறக்க முயற்சி செய்துவிட்டதாக அத்னன் கூறினார். அவரை எச்சரித்த விமான ஊழியர்கள், இனி இவ்வாறு செய்யக் கூடாது என அறிவுறுத்தினர். அந்த விமானம் சுமார் 10.20 மணியளவில் வாரணாசியின் லால் பகதுர் சாஸ்திரி சர்வதேச விமான நிலையம் அருகே வந்தது. விமானம் தரையிறங்குவதற்கு ஒரு சில நிமிடங்களுக்கு முன்பு, முகமது அத்னன் மீண்டும் விமானத்தின் எமர்ஜென்சி கதவை திறக்க முயன்றார். அவரை விமான ஊழியர்கள் தடுத்துநிறுத்தினர். இதற்கிடையில் விமானத்தில் எச்சரிக்கை மணி ஒலித்த நிலையில், விமானி அந்த விமானத்தை தரையிறக்காமல் மீண்டும் வானில் பறக்கச் செய்தார். பின்னர் சுமார் 10.35 மணியளவில் அந்த விமானம் பாதுகாப்பாக தரையிறங்கியது. விமானம் தரையிறங்கிய பிறகு, விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் முகமது அத்னனை கைது செய்து அழைத்துச் சென்றனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், ‘நான் ஏன் அவ்வாறு செய்தேன் என்று தெரியவில்லை. எனக்கு பேய் பிடித்துவிட்டது’ என்று போலீசாரிடம் முகமது அத்னன் கூறியுள்ளார்.

# வட கொரியா - சீனா இடையே 6 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் விமான சேவை தொடக்கம்

**பெய்ஜிங், மார்ச் 31:**

*சீனா - வடகொரியா விமான சேவை 6 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் தொடங்கப்பட்டது.*

*சீனாவின் பெய்ஜிங் நகர் முதல் வடகொரியாவின் பியான்யாங் நகருக்கு பயணிகள் விமான சேவை 6 ஆண்டுகளுக்குப் பின் இன்று மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.*

*இன்று வட கொரியா சென்றுள்ள சீனா ஏர் பயணிகள் விமானத்தை வடகொரியாவிற்கான சீனத் தூதர் உள்பட பலரும் அங்கு வரவேற்றனர்.*




*இரு நாடுகளுக்குமிடையே ரயில் சேவை கடந்த மார்ச் 12 அன்று தொடங்கியது.*

*கோவிட் பெருந்தொற்று காலம் தொடங்கிய 2020 முதல் சீனா - வடகொரியா இடையே ரயில் மற்றும் விமான சேவைகள் நிறுத்தப்பட்டது. பெருந்தொற்று காலத்தில் மற்ற நாட்டு பயணிகளுக்குத் தடை விதித்த வட கொரியா 2024-ம் ஆண்டு ரஷிய பயணிகளுக்கு அனுமதியளித்தது.*

*பெருந்தொற்று தடைக்கு முன்னர் வட கொரியாவுக்கு செல்லும் பயணிகளில் 90% பேர் சீனர்களாக இருந்தனர். ஆனால், பின்னர் மீண்டும் அந்த பயணத்தைத் தொடங்குவதற்கு சீனா தாமதப்படுத்தியதன் காரணம் தெரியவில்லை.*

*சீனா வடகொரியாவுடன் சிறந்த வணிக உறவைப் பேணி வருகிறது. ஆனால், தென் கொரியா மற்றும் அமெரிக்கா மீது தாக்குதலுக்கு வட கொரியா நடத்தும் ஏவுகணைச் சோதனைகளுக்கு சீனா தொடர்ந்து அதிருப்தி தெரிவித்து வருகிறது.*

*கடந்தாண்டு செப்டம்பரில் வட கொரிய அதிபர் கிம் ஜான் உங் ராணுவ அணிவகுப்பில் கலந்துகொள்ள சீனாவின் பெய்ஜிங் வந்தார். வட கொரிய அதிபர் ஒருவர் பல ஆண்டுகளுக்குப் பின் சீனாவுக்கு வந்தது அதுவே முதல்முறை..*

## பாகிஸ்தானில் மழை தொடர்பான சம்பவங்களில் 9 பேர் பலி



**கராச்சி, மார்ச் 31:**

பாகிஸ்தான் நாட்டின் கைபர் பக்துன்குவா மாகாணம் மற்றும் பஞ்சாப் மாகாணம் ஆகியவற்றில் கனமழை பெய்தது. அப்போது பலத்த காற்றும் வீசியது. இந்த சம்பவத்தில் கைபர் பக்துன்குவா மாகாணத்தின் பன்னு என்ற நகரில் பல்வேறு இடங்களில் கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. இதில் சிக்கி 6 பேர் பலியானார்கள். 30 பேர் காயமடைந்தனர்.

அவர்களில் பலர் கவலைக்குரிய வகையில் உள்ளனர். இதனால், அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதில், ஒரு சிலர் திருமண விருந்துக்கு வந்த இடத்தில் மழை பெய்ததும், நனைந்து விடாமல் இருக்க மசூதியில் ஒதுங்கி இருந்தனர். அப்போது கட்டிடம் இடிந்ததில் சிக்கி 3 பேர் பலியாகி உள்ளனர்.

சம்பவம் பற்றி அறிந்து மீட்பு குழுவினர் அந்த இடத்திற்கு சென்று, இடிபாடுகளில் சிக்கி இருந்தவர்களை மீட்டு சிகிச்சைக்கு கொண்டு சென்றனர். இதேபோன்று வரிஷ்மி கலா மந்தன் பகுதியில் பழைய வீடு ஒன்றின் மேற்கூரை இடிந்து விழுந்ததில், வீட்டில் குடியிருந்த 3 குழந்தைகள் பலியானார்கள். 2 பேர் காயமடைந்தனர்.

இதேபோன்று பஞ்சாப் மாகாணத்தில் பதாமி பாக் பகுதியில் கனமழை மற்றும் பலத்த காற்று வீசியதில், வீட்டின் மேற்கூரை இடிந்ததில் 2 பேர் பலியானார்கள். 2 பேர் காயமடைந்தனர். மற்றொரு சம்பவத்தில், மழை நீரில் சிக்கி மோட்டார் சைக்கிளில் இருந்து, சாலையில் தவறி விழுந்து 70 வயது முதியவர் ஒருவர் பலியானார். இதனால் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

## ஐக்கிய அரபு அமீரகம் மீது 16 ஏவுகணைகள், 42 டிரோன்களை வீசி தாக்குதல் நடத்திய ஈரான்

**அபுதாபி, மார்ச் 31:**

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுப் படைகள் இணைந்து, கடந்த பிப்ரவரி 28-ந்தேதி ஈரான் மீது தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க படைத் தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், ஐக்கிய அரபு அமீரகம் மீது 16 ஏவுகணைகள், 42 டிரோன்களை வீசி ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது. இவை அனைத்தையும் தங்கள் நாட்டின் வான் பாதுகாப்பு அமைப்பு இடைமறித்து அழித்ததாக ஐக்கிய அரபு அமீரகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அமீரக பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;-

"ஈரானில் இருந்து ஏவப்பட்ட 16 பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் 42 ஆளில்லா விமானங்களை(டிரோன்கள்) ஐக்கிய அரபு அமீரகத்தின் வான் பாதுகாப்பு அமைப்பு இடைமறித்து அழித்துள்ளது.

ஈரானின் அடாவடித்தனமான தாக்குதல் தொடங்கியதில் இருந்து, ஐக்கிய அரபு அமீரகத்தின் வான் பாதுகாப்பு அமைப்புகள் இதுவரை 414 பாலிஸ்டிக் ஏவுகணைகள், 15 குரூஸ்(CRUISE) ஏவுகணைகள் மற்றும் 1914 டிரோன்களை எதிர்கொண்டுள்ளன. இந்த தாக்குதல்களின் விளைவாக, தங்களது தேசிய கடமையை ஆற்றிக்கொண்டிருந்த 2 ஆயுதப் படை வீரர்களும், ஒரு பொதுத்துறை ஒப்பந்த அதிகாரியும் வீரமரணம் அடைந்தனர். மேலும் 8 பேர் உயிரிழந்தனர். மொத்தம் 178 பேர் காயமடைந்தனர். எந்தவொரு அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள தயாராக இருக்கிறோம். நாட்டின் இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையைப் பாதுகாப்பதையும், அதன் தேசிய நலன்களையும், திறன்களையும் பேணுவதையும் உறுதிசெய்யும் வகையில், நாட்டின் பாதுகாப்பைக் குலைக்கும் எந்தவொரு முயற்சியையும் உறுதியாக எதிர்கொள்வோம்." இவ்வாறு அமீரக பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# அமெரிக்க-இஸ்ரேல் தளபதிகள், அதிகாரிகளின் வீடுகளை தாக்குவோம்: ஈரான் சபதம்

**தெஹ்ரான், மார்ச் 31:**

*ஈரானில் ராணுவம் மற்றும் இஸ்லாமிய புரட்சி காவல் படைகளுக்கு இடையே நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் உச்சபட்ச கட்டுப்பாட்டு பிரிவாக மத்திய கதம் அல்-அன்பியா தலைமையகம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், அதன் செய்தி தொடர்பாளர் வெளியிட்டு உள்ள செய்தியில், மோதல் அதிகரித்து வரும் சூழலில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் எதிரிகளின் தளபதிகள், அதிகாரிகளின் வீடுகளை தாக்குவோம் என எச்சரித்து உள்ளார்.*



*ஈரானின் பாரசீக வளைகுடா உள்ளிட்ட பகுதிகளை ஆக்கிரமிப்போம் என்றும் தரை வழி தாக்குதல்களில் ஈடுபடுவோம் என்றும் அமெரிக்க ஜனாதிபதி அச்சுறுத்தல்களை விடுத்து வருகிறார் என இந்த உச்சபட்ச கட்டுப்பாட்டு பிரிவின் தலைமையகம் தொடர்ந்து கூறி வந்தது. இதனை தொடர்ந்து இந்த அறிக்கை வெளியாகி உள்ளது.*

*ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. இதில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் உள்ளிட்ட பல முக்கிய அதிகாரிகள், தலைவர்கள், தளபதிகள் அடுத்தடுத்து கொல்லப்பட்டனர்.*

*இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளது. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்ற நிலை காணப்படுகிறது. ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும், இஸ்ரேலும் நடத்தி வரும் தாக்குதலுக்கு ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் உலக அளவில் பொருளாதார பாதிப்புகளும் ஏற்பட்டு*

# குவைத் ஆலை மீது ஏவுகணை தாக்குதல்; இந்தியர் பலி

**குவைத், மார்ச் 31:**

*ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. இதில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் உள்ளிட்ட பல முக்கிய அதிகாரிகள், தலைவர்கள், தளபதிகள் அடுத்தடுத்து கொல்லப்பட்டனர். இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளது. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்ற நிலை காணப்படுகிறது.*

*ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும், இஸ்ரேலும் நடத்தி வரும் தாக்குதலுக்கு ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது. அந்த நாடுகளின் படை தளங்கள் அமைந்த வளைகுடா நாடுகளையும் ஈரான் தாக்கி வருகிறது. இந்த சூழலில், குவைத் நாட்டின் மின்சாரம், நீர் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் இன்று வெளியிட்ட அறிக்கையில், குவைத்தில் உள்ள மின்சார மற்றும் நீர் சுத்திகரிப்பு ஆலையின் கட்டிடம் ஒன்றின் மீது நடந்த ஏவுகணை தாக்குதலில் இந்தியர் ஒருவர் பலியாகி உள்ளார்.*

*ஆலைக்கும் பலத்த சேதம் ஏற்பட்டு உள்ளது. குவைத் மீது ஈரானின் கடுமையான தாக்குதலின் ஒரு பகுதியாக இந்த சம்பவம் நடந்துள்ளது என அதுபற்றி வெளியான தகவல் தெரிவிக்கின்றது. இதனை தொடர்ந்து தொழில் நுட்பம் மற்றும் அவசரகால குழுக்களை சேர்ந்தவர்கள் உடனடியாக சென்று, சம்பவத்திற்கு பின்னர் ஆலையை மீண்டும் செயல்பட வைக்கும் பணியில் ஈடுபட்டனர்.*

*குவைத்தின் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய அதிகாரிகளின் முழு ஒத்துழைப்புடன் அந்த பகுதியை பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது என அமைச்சகம் தெரிவித்து உள்ளது. பொதுமக்கள் அமைதியாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டு உள்ளது. வதந்திகளை பரப்புபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கையும் விடப்பட்டு உள்ளது. நிலைமை சீரானதும் அதுபற்றிய தகவல் வெளிப்படையாக தெரிவிக்கப்படும் என்றும் எரிசக்தி அமைச்சக செய்தி தொடர்பாளர் கூறினார்.*

## ஈரானுக்குள் நுழைய தயார் நிலையில் அமெரிக்க ராணுவ வீரர்கள்

**வாஷிங்டன், மார்ச் 31:**

வாஷிங்டன்: ஈரான் மீது தரைவழியாக தாக்குதல் நடத்த அமெரிக்க ராணுவம் தயாராகி வருகிறது. அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் மற்றும் ஈரான் ராணுவத்துக்கு இடையே கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல் போர் நடைபெற்று வருகிறது.

இந்த போரில் ஈரானின் ராணுவ தளங்கள், அணு சக்தி தளங்கள், எண்ணெய் வயல்கள் என 10,000-க்கும் மேற்பட்ட இடங்கள் மீது அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படைகள் வான்வழி தாக்குதல்களை நடத்தி உள்ளன. இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள



20-க்கும் மேற்பட்ட அமெரிக்க ராணுவ தளங்கள் மீது ஈரான் ராணுவம் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தி வருகிறது. மேலும் ஹார்முஸ் ஜலசந்தியில் கச்சா எண்ணெய் கப்பல் போக்குவரத்தை ஈரான் முடக்கி உள்ளது.

போரை முடிவுக்கு கொண்டு வர 15 அம்ச திட்டத்தை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அண்மையில் முன்மொழிந்தார். இதை ஈரான் ராணுவம் ஏற்கவில்லை. இதைத் தொடர்ந்து இருதரப்புக்கும் இடையே போர் தீவிரமடைந்திருக்கிறது. மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்களில் சுமார் 45,000 வீரர்கள் உள்ளனர்.

மேலும் அமெரிக்க கடற்படையின் 16 போர்க்கப்பல்கள் அங்கு முகாமிட்டு உள்ளன. புதிதாக யுஎஸ்எஸ் ட்ரிபொலி, யுஎஸ்எஸ் சான் டியாகோ, யுஎஸ்எஸ் நியூ ஓர்லியன்ஸ் ஆகிய 3 போர்க்கப்பல்கள் கடந்த சனிக்கிழமை மத்திய கிழக்கு பகுதியை வந்தடைந்தன. இதில் ட்ரிபொலி போர்க்கப்பலில் உள்ள 3,500 வீரர்கள் கடல், வான், தரை வழி போரில் திறன் வாய்ந்தவர்கள் ஆவர். இந்த போர்க்கப்பலில் கடல் மற்றும் தரையில் செல்லக்கூடிய படகுகள் உள்ளன.

மேலும் பாராசூட் மூலம் தரையில் இறங்கும் திறன் கொண்ட வீரர்கள் உள்ளனர். போர்க்கப்பலின் மேல்தளத்தில் 33 போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டு உள்ளன. ட்ரிபொலி போர்க்கப்பல் மூலம் ஈரான் மீது தரைவழி தாக்குதலை தொடங்க திட்டமிடப்பட்டு இருக்கிறது.

## "ஈரானுக்குள் நுழைந்தால் நரகத்தைச் சந்திப்பீர்கள்" - அமெரிக்க வீரர்களுக்கு கடும் எச்சரிக்கை




**டெஹ்ரான், மார்ச் 31:**

ஈரானுக்குள் அமெரிக்க வீரர்கள் காலடி எடுத்து வைத்தால், சவப் பெட்டியில்தான் திரும்பிச் செல்வர் என ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஹார்முஸ் ஜலசந்தியை நட்பு நாடுகளுக்கு மட்டும் ஈரான் திறந்துள்ளது. இதனால் மற்ற நாடுகளுக்கு எரிபொருள் கப்பல்கள் செல்ல முடியவில்லை.

ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பதற்கான கெடுவை அமெரிக்கா நீட்டித்து வருகிறது. இந்நிலையில் ஜப்பானில் உள்ள அமெரிக்க ராணுவ முகாமில் இருந்து யுஎஸ் எஸ் ட்ரிபொலி போர் கப்பல் மத்திய கிழக்கு பகுதிக்கு வந்துள்ளது. இந்த கப்பலில் கடற்கரையில் வீரர்களை தரையிறக்கும் வசதி உள்ளது. இந்த கப்பலில் 3,500 கடற்படை வீரர்கள் வந்துள்ளனர். ஹார்முஸ் ஜலசந்தியை திறந்துவிட ஈரான் மறுத்தால், ராணுவத்தை தரையிறக்கி ஈரானின் கார்க் தீவை கைப்பற்ற அமெரிக்க ராணுவம் திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் 'தி டெஹ்ரான் டைம்ஸ்' என்ற ஈரான் தினசரி ஆங்கில பத்திரிக்கையின் முதல் பக்கத்தில் ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அதில் 'நரகத்துக்கு வருக' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் 'ஈரானுக்குள் நுழையும் அமெரிக்க வீரர்கள் சவப்பெட்டியில்தான் திரும்பிச் செல்வர்' என கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# அமெரிக்கா தரைவழி தாக்குதல் நடத்தினால்... தளபதிகளும், வீரர்களும் சுறாக்களுக்கு இரையாக நேரிடும்: ஈரான் எச்சரிக்கை

**தெஹ்ரான், மார்ச் 31:**

*ஈரானுக்கு எதிராக தரைவழியே தாக்குதல் நடத்த அமெரிக்கா தயாராகி வருகிறது என டிரம்ப் கூறி வருகிறார். அப்படி தரைவழி தாக்குதல் நடத்தினால் அதற்கு பதிலடி தர தயாராக இருக்கிறோம் என்று ஈரான் தெரிவித்தது. ஒருபுறம் ஈரானுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறோம் என கூறி வந்தபோதிலும், மறுபுறம் படைகளை வான், கடல், தரை என பல வழிகளில் ஈரானை நெருக்கும் வகையில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது.*



*ஈரானில் நாட்டை பாதுகாக்கும் பணியில் ராணுவம் ஈடுபடுகிறது. இதேபோன்று உச்சபச்ச தலைவர் உள்ளிட்டோரை பாதுகாக்கவும், எல்லை பாதுகாப்பு, வெளிநாட்டு தாக்குதல் போன்றவற்றை எதிர்கொள்வதற்காக இஸ்லாமிய புரட்சி காவல் படை செயல்படுகிறது. இந்த இரு அமைப்புகளுக்கு இடையே நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் உச்சபட்ச கட்டுப்பாட்டு பிரிவாக மத்திய கதம் அல்-அன்பியா தலைமையகம் செயல்பட்டு வருகிறது.*

*இந்நிலையில், அதன் செய்தி தொடர்பாளர் வெளியிட்டு உள்ள செய்தியில், மோதல் அதிகரித்து வரும் சூழலில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் எதிரிகளின் தளபதிகள், அதிகாரிகளின் வீடுகளை தாக்குவோம் என எச்சரித்து உள்ளார். ஈரானை டிரம்ப் தொடர்ந்து மிரட்டி கொண்டே, அமெரிக்க படைகளை போர் பகுதியில் இருந்து விலக்கி, மக்கள் தொகை அதிகம் இருக்கும் பகுதிகள் மற்றும் பொருளாதார மையங்களில் சென்று ஒளித்து வைத்து கொள்கிறார் என ஈரானிய ஊடகங்கள் தெரிவித்தன.*

*இதனை சுட்டி காட்டி அந்த செய்தி தொடர்பாளர் குற்றம்சாட்டியுள்ளார். டிரம்ப் குறிப்பிட்ட தரைவழி தாக்குதல் அச்சுறுத்தல்கள் நடந்தால், பின்னர் பாரசீக வளைகுடாவில் உள்ள சுறாக்களுக்கு அமெரிக்க படை தளபதிகளும், வீரர்களும் இரையாவார்கள் என்று அதுதொடர்பாக வெளியிடப்பட்ட ஈரானின் அறிக்கை எச்சரித்து உள்ளது. ஈரானின் பாரசீக வளைகுடா உள்ளிட்ட பகுதிகளை ஆக்கிரமிப்போம் என்றும் தரை வழி தாக்குதல்களில் ஈடுபடுவோம் என்றும் அமெரிக்க ஜனாதிபதி அச்சுறுத்தல்களை விடுத்து வருகிறார் என இந்த உச்சபட்ச கட்டுப்பாட்டு பிரிவின் தலைமையகம் தொடர்ந்து கூறி வந்தது.*

*இதனை தொடர்ந்து இந்த அறிக்கை வெளியாகி உள்ளது. ஈரானின் பல்கலைக்கழகங்கள் தாக்கப்பட்டதற்கு பதிலடியாக, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் பல்கலைக்கழகங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று நேற்று ஈரான் எச்சரித்து இருந்தது. இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் எதிரிகளின் தளபதிகள், அதிகாரிகளின் வீடுகளை தாக்குவோம் என இன்று எச்சரித்து உள்ளது.*

# நாம் புதிய கூட்டணி அல்ல; வெற்றிக் கூட்டணி: மு.க. ஸ்டாலின்



## தேர்தல் பரப்புரைக்காக தமிழ்நாடு வருகிறார் பிரதமர் மோடி



## "பணத்தை வாங்கிவிட்டு விசிலுக்கு வாக்களியுங்கள்..!" பெரம்பூர் தொகுதியில் விஜய் பிரச்சாரம்

## ரேஷன் கடைகள், பெட்ரோல் பங்க்குகள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகம்

## மோசடிகளை தடுக்க வங்கி ஆன்லைன் புதிய விதிமுறைகள் அமல்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 31.03.2026 செவ்வாய்க்கிழமை இலவச இ-பேப்பர்